பக்கங்கள்: முப்பத்திரெண்டு +

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 08 ஞாயிற்றுக்கிழமை (20.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 086



02 இந்தியாவின் பயணம் வெற்றியுடன்



15 சதி வலையில் வீழ்ந்து விடாதீர்கள்



17 பனை வளத்தின் அபிவிருத்திக்கு



23 பாவம் பகடைக் காய்கள்



25 கிடைக்கும் வாய்ப்புகளை தவறவிடும் நிலை

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையை தீர்க்க புரிந்துணர்வு உடன்பாடு விரைவில்

## அமைச்சர் ராஜித தகவல்

கொழும்பு, பெப்ரவரி 20

**இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது. கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்ன இத் தகவலைத் தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீண்டகாலமாக தொடர்ந்து வரும் இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வழிமுறைகள் குறித்து இரு நாட்டு அரச அதிகாரிகளும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

அதே வேளை மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வழிமுறைகள் குறித்து வெளி விவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்கரையோரபாதுகாப்புப் பிரிவு ஆகிய வற்றுடனும் பேச்சுக்களை ஆரம்பித் துள்ளோம்.

தொடரும் பிரச்சினைக் குத் தீர்வுகாண வேண்டும் என்பதில் இரு நாட்டு அரசுகள் அக்கறையாக உள்ளன. விரைவில் இரு அரசுகளும் இணைந்து மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண புரிந்துணர்வு ஒப் பந்தம் (MOU) ஒன்றை கைச் சாத்திடவிருக்கின்றோம் என்றார் அவர்.

இது தொடர்பாக இந்தியத் தூதரகத்திடம் கேட்டபோது இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைகள் குறித்து ஆராய இரு நாடுகளின் அதி காரிகளின் கூட்டுக்குழுக் கூட்டம் ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளது. அக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் குறித்து ஆராயப் படலாம் என்றும் தெரிவிக்கப் பட்டது. (உ-ஐ)

## ஐ.நா. அணுகமுடியாத நிலையில் 5,000 போராளிகள் தடுத்து வைப்பு

கொழும்பு, பெப்.20

ஐக்கிய நாடுகள் சபையோ செஞ்சிலுவைச் சங்கக் குழுவோ செல்ல முடியாத இடங்களில் 5,000 முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர் என்று ஐ.நாவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக இருந்த நீல் புனே நேற்றுடன் கொழும்பில் பணியை முடித்து கிளம்பியுள்ளார்.

அவர் கடைசி நாளான நேற்றுமுன் தினம் கொழும்பிலுள்ள ஐ.நா. தலைமைப் பணியகத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இருபத்தைந்து ஆண்டுகால போரின் பின்னர் சரணடைந்த 5000 முன்னாள் போராளிகள் 21 மாதங்களுக்கு மேலாக விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தடுத்து (29ஆம் பக்கம் பார்க்க)



இன்றைய உதயனுடன் டோனியின் நான்கு வர்ணப் படங்கள். அனைத்தையும் சேகரிக்க பிரதிகளை கேட்டு வாங்குங்கள்.

## வல்வை மீனவர் கரை சேர்ந்தனர்

வடமராட்சி, பெப்.20

வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடியிருந்து கடற்றொழிலுக்குச் சென்று கரைதிரும்பாத 6 மீனவர்களும் நேற்றுக் காலை பத்திரமாக கரை திரும்பினர்.

நேற்றுமுன்தினம் (வெள்ளி) அதிகாலை 3 படகுகளில் 6 மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்றிருந்தனர். அன்றிரவு வரை அவர்கள் கரை திரும்பாததினால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் 6 மீனவர்களும் நேற்று அதிகாலை கரை திரும்பினார்கள். (ஐ-236)

## பருத்தித்துறை முனை முதல் நெடுந்தீவு வரை கடற்படையினர் கரையோர ரோந்து நடவழிக்கை

### பாதுகாப்பு அமைச்சுடன் பேசுவேன் என்கிறார் யாழ். தளபதி

யாழ்ப்பாணம், பெப்.20

பருத்தித்துறை முனை முதல் நெடுந்தீவு வரையான கடற் பிரதேசத்தில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச் சுடன் பேச்சு நடத்துவேன்.

யாழ்.மாவட்டகட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத் துருசிங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கடற் தொழில் சங்கப் பிரநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இந்தக் கலந்துரையாடலில் மீனவச் சங்கப் பிரதிநிகள் தெரிவித்தவை வருமாறு-

உயர்பாதுகாப்பு வலய பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்டிருந்த (29ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூர் தூதராக பேரியல் அஷ்ரப்

கொழும்பு, பெப்.20

இலங்கைக்கான சிங்கப்பூர் தூதராக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பேரியல் அஷ்ரப்பை நேற்று அழைத் துப் பேச்சு நடத்தி இந்த விடயத்தை அவரிடம் தெரிவித்தார்.

பேரியல் அஷ்ரப் இதற்கு சம்மதம் அளித்துள்ளார் (29ஆம் பக்கம் பார்க்க)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட்டை ஒட்டி கொழும்பில் தீவிர பாதுகாப்புத் திட்டம்

கொழும்பு, பெப்.20

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ள பல்லேகல, சூரியவெவ, கெத்தாரகம விளையாட்டரங்குகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக விசேட பாதுகாப்புத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் கூறினார்.

(29ஆம் பக்கம் பார்க்க)




25 ஆவது ஆண்டு நிறைவு விழா

விவரம் உள்ளே...! V பக்கத்தில்

இன்று (20.02.2011) ஞாயிறு

நேரம் : மாலை 4 மணி

இடம்: வீரசிங்கம் மண்டபம்

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உதயன்

# இந்தியாவின் பயணம் வெற்றியுடன் ஆரம்பம்




## - முழங்கினார் சேவாக் -

- டிலீப் -

கொண்டாட்டம் தொடங்கியது நேற்று. முதல் ஆட்டம் ஆசியர்களுக்கிடையே. மிர்ப்பூர் மோதிய இடம். பங்களாதேஷ்-இந்தியா பார்த்தனர் பலப்பரீட்சை. 2007 இல் வாங்கிய அனுபவம் உண்டு இந்தியாவுக்கு. பழி தீர்க்கக் காத்திருந்தனர். சேவாக்கின் அதிரடியால் தீர்ந்தது பழி.

களத்துக்கு வந்தனர் டோனி -சகிப் அல் ஹசன். சுற்றினர் நாணயம். வென்றார் சகிப். வந்தார் முடிவுக்கு, களத்தடுப்புச் செய்வதென்று. தீர்மானம் பிழையானதை உணர்ந்திருப்பார் பின்னர்.

பங்களாதேஷின் அழைப்புக்கு களம் புகுந்தனர் சேவாக் -சச்சின். வந்தவர்கள் கொடுத்தனர் வில்லங்கம். வீசிய பந்துகள் திசைமாறிப் பறந்தன. இந்தியாவின் அடியில் முளைத்தது இறக்கை பந்துக்கு. பறந்து திரிந்தது பந்து எல்லைக்கு மேலால்.

முதல் ஓவரிலேயே தொடங்கியது சரவெடி. முதல் பந்தே விரைந்தது எல்லைக் கோட்டுக்கு. கணக்கு ஆரம்பித்தார் சேவாக் அதிரடியாய். புரிந்திருக்கும் பங்களாதேஷுக்கு வரப் போகும் விளைவு. சேவாக்குக்கு சளைத்தவன் அல்லன் நான். தொடங்கினார் சச்சின் மறுபுறத்தில். இருவரின் அதிரடியில் ஏறியது இந்தியாவின் ஓட்டவேகம். 53 பந்தில் எட்டப்பட்டது அரைச்சதம்.

பின்னர் குழம்பியது சச்சின் -சேவாக் இணைப்பு. கவலையீனம் சச்சினின் விக்கெட்டைப் பறித்தது. 69 ஓட்டங்கள் இடப்பட்டது ஆரம்ப அடித்தளமாய். பிரிந்தார் சச்சின், வந்தார் கம்பீர். இணைந்தனர் 'ஸ்டேட்' சகோதரர்கள். வந்தவரும் தொடங்கினார் அதிரடியை. 45 பந்துகள் கரை கண்டு சேவாக் கணக்கில் ஏற்றப்பட்டது அரைச்சதம்.

தொடர்ந்தன அதிரடி. 87 பந்தில் சதம் கண்டது அணி. இரண்டாவது விக்கெட் இணைக்கப்பட்டது 83 ஓட்டங்கள். பறந்தது கம்பீரின் விக்கெட். ஆர்பரித்தது பங்களாதேஷ். புதிதாய்ப் புகுந்தார் ஹோலி. டோனிக்கு உண்டு நம்பிக்கை இவர் மீது. நிரூபித்தார் ஹோலி தனக்கும் அதிரடி முடியும் என்பதை.

இணைந்தது பிரியாத ஜோடி. வில்லங்கம் தேடியது பங்களாதேஷ். பார்க்கவில்லை பாவம், பார்த்து பார்த்து பறந்தது பந்துகள். இந்தியர்களின் வெறியில் சிதறியது பங்களாதேஷின் பந்துகள். வீசமுடியவில்லை பந்துகளை பங்களாதேஷால். கடந்தார் சேவாக் சதம். அதற்கு 94 பந்துகள் எடுப்பு. சதம் கடந்ததும் ஏறியது அதிரடியின் வேகம். பட்டையைக்கிளப்பின சேவாக்கின் துடுப்பில் பட்ட பந்துகள். ஹோலி தக்கபடி பயன்படுத்தினார் தன் வாய்ப்பை. உறுதிப்படுத்திக் கொண்டார் தன் இடத்தையும்.

சேவாக்கின் கணக்கு ஏறிச் சென்றது. சதத்தை தொட்டவர் பின்னர் எட்டினார் 150 ஓட்டங்களை. அதையும் தாண்டித் தொடர்ந்தார். சகிப் அல் ஹசன் முடித்து வைத்தார் சேவாக்கின் ஆட்டத்தை. 140 பந்துகள், அதில் பெற்றது 175 ஓட்டங்கள். தொலைந்தது பங்களாதேஷின் சனியன்.

மறுமுனையில் ஹோலி, விடவில்லை பங்களாதேஷை. கடந்தார் கன்னிச் சதம் உலகக் கிண்ணப் போட்டியில். 83 பந்துகளில் எட்டப்பட்டது சதம்.

ஒருவாறு முடித்துக் கொண்டது ஆட்டத்தை. 370/4 இந்தியாவின் இமாலய இலக்கு நிர்ணயம். பந்து வீச்சு சொல்லத் தேவையில்லை. இந்தியாவின் அடியில் பரிதாபத்துக்குரியவர்கள் பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள்.

இறங்கினர் களத்துக்கு பதில் கொடுக்க. ரமிம் இக்பால்-இம்ருல் கைஸ். முதல் ஓவர் வீசியவர் ஸ்ரீசாந்த். சீறிபாய்ந்த பந்துகள் சென்றது எல்லைக் கோட்டுக்கு. அதிர்ச்சியில் இந்தியா. ஆரம்ப ஆட்டம் அசத்தியது பங்களாதேஷ். ஆர்முடுகியது ஓட்ட வேகம். தொடரின் இந்தியர்களின் கனவு கலையும் நிலை. மாறியது பந்து வீச்சு. முனாப்பின் முதல் ஓவர் சரித்தது விக்கெட்டை, பிரித்தது ஆரம்பத்தை. 56 ஓட்டங்கள் அதிரடியில் பகிர்வு. இம்ரு கைல்ஸ் ஆட்டம் அடங்கியது. யுனைட் சித்திக் புகுந்தார் களத்தில். ஆட்டம் நிதானம். அதிகரித்தது ஓட்டங்கள். மெதுவாய் நெருங்கினர் இலக்கை. இடையில், சுழலில் அவசரம் சித்திக்குக்கு. ஹர்பஜன் சுத்திய பந்து படவில்லை துடுப்பில். வந்து விட்டார் முன்னோக்கி சித்திக். தவறிய பந்து தஞ்சமடைந்தது டோனியை. தவறாமல் அடித்தார் விக்கெட்டை. பிரிந்தது இரண்டாவது இணைப்பு. களத்துக்கு வந்தார் தலைவர். ரமிம் கடந்தார் அரைச்சதம். முனாப் மீண்டும் கைவரிசை. பறிக்கப்பட்டது ரமிம் விக்கெட். ஏறியது பொறுப்பு தலைவருக்கு. ஆடினார் சிறப்பாய் சகிப். அதிரடிகள் அளவுடன் ஆட்டம். பதானிடம் சிக்கினார் சகிப். 55 ஓட்டங்கள் சேர்த்துக் கொடுத்தார் சகிப். தெரிந்து விட்டது முடிவு. முடியாது பங்களாதேஷால் எட்டுவதற்கு. இறுதிவரை நின்று போராடிப்பார்த்தார், ரக்புல் ஹசன். வெற்றி சாய்ந்து விட்டது இந்தியாவின் பக்கம். 87 ஓட்டங்கள் போதவில்லை வெற்றிக்கு.

அதிரடிகள் பல காட்டிய சேவாக் ஆட்டத்தின் நாயகன்.

### 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் முதல் ஆட்டம்

ஆட்டம்: இந்தியா Vs பங்களாதேஷ் நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்
முடிவு: இந்தியா 87 ஓட்டங்களால் வெற்றி ஆட்டநாயகன்: சேவாக்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சேவாக் | b சகிப் அல் ஹசன் | 175 | 140 | 14 | 5 |
| டென்டுல்கர் | Runout (ஹசன் / ரகீம்) | 28 | 29 | 4 | 0 |
| கம்பீர் | b மகமதுல்லா | 39 | 39 | 3 | 0 |
| ஹோலி | ஆட்டமிழப்பு இல்லை | 100 | 83 | 8 | 2 |
| யூசுப் பதான் | c ரகீம் b இஸ்லாம் | 8 | 10 | 0 | 0 |
| யுவராஜ் சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| டோனி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹர்பஜன் சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சகீர் கான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஸ்ரீசாந்த் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முனாப் பட்டேல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (b 1, lb 2, w 16, nb 1) | 20 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| இஸ்லாம் | 07 | 69 | 1 | 0 |
| ரூபல் ஹொஷைன் | 10 | 60 | 0 | 0 |
| அப்துர் ரசாக் | 09 | 74 | 0 | 0 |
| சகிப் அல் ஹசன் | 10 | 61 | 1 | 0 |
| நமீம் இஸ்லாம் | 07 | 54 | 0 | 0 |
| மகமதுல்லா | 07 | 49 | 1 | 0 |

TOTAL - 370/4 (50)

விக்கெட் இழப்பு: 1-69 (டென்டுல்கர்), 2-152 (கம்பீர்), 3-355 (சேவாக்), 4-370 (யூசுப் பதான்).

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரமிம் இக்பால் | c யுவராஜ் சிங் b முனாப் | 70 | 86 | 3 | 1 |
| இம்ருல் கைஸ் | b முனாப் | 34 | 29 | 7 | 0 |
| யுனைட் சித்திக் | st டோனி b ஹர்பஜன் சிங் | 37 | 52 | 1 | 1 |
| சகிப் அல் ஹசன் | c ஹர்பஜன் சிங் b பதான் | 55 | 50 | 5 | 0 |
| ரகீம் | c sub (ரெய்னா) b சகீர் கான் | 25 | 30 | 2 | 0 |
| ரக்புல் ஹசன் | ஆட்டமிழக்கவில்லை | 29 | 28 | 0 | 1 |
| மகமதுல்லா | b முனாப் | 06 | 06 | 0 | 0 |
| நமீம் இஸ்லாம் | lbw b முனாப் | 02 | 08 | 0 | 0 |
| அப்துர் ரசாக் | lbw b சகீர் கான் | 01 | 05 | 0 | 0 |
| இஸ்லாம் | Runout ஹர்பஜன் சிங் | 00 | 01 | 0 | 0 |
| ரூபல் ஹொஷைன் | ஆட்டமிழக்கவில்லை | 01 | 06 | 0 | 0 |
| உதிரிகள் | (lb 10, w 13, nb 1) | 24 | | | |


| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரீசாந்த் | 05 | 53 | 0 | 0 |
| சகீர் கான் | 10 | 40 | 2 | 0 |
| முனாப் பட்டேல் | 10 | 48 | 4 | 0 |
| ஹர்பஜன் சிங் | 10 | 41 | 1 | 0 |
| யூசுப் பதான் | 08 | 49 | 1 | 0 |
| யுவராஜ் சிங் | 07 | 42 | 0 | 0 |

TOTAL - 283/9 (50)

விக்கெட் இழப்பு: 1-56 (இம்ருல் கைல்), 2-129 (யுனைட் சித்திக்), 3-188 (ரமிம் இக்பால்), 4-234 (சகிப் அல் ஹசன்), 5-248 (ரகீம்), 6-261 (மகமதுல்லா), 7-275 (நமீம் இஸ்லாம்), 8-279 (அப்துர் ரசாக்), 9-280 (இஸ்லாம்).

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

### Action of the match



தவறியது பிடி: இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான நேற்றைய போட்டியின்போது பங்களாதேஷின் பிடியொன்றை இந்திய அணி வீரர் யூசுப் பதான் தவறவிடும் வேளை...

# உலகக் கோப்பை கிரிக்கெட்: அணிகளின் பலம், பலவீனம்

## நாளைய ஆட்டம்




அகமதாபாத், பி.ப. 2.00

ஆஸ்திரேலியா

*பலம்:*

துடுப்பாட்டம் தான் ஆஸ்திரேலிய அணியின் மிகப்பெரிய பலம். 'ஸ்டிரைக் ரேட்'டில், அதாவது அதிகமாக ஓட்டங்களை எடுத்துக் குவிக்கும் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது இந்த அணி. இளம் வீரர்கள் அதிகம் உள்ளது கூடுதல் பலம். எந்த சூழ்நிலையிலும் சமாளித்து விளையாடி ஆட்டத்தின் போக்கையே மாற்றும் திறன் உண்டு.

எதிரணிகளின் வியூகங்களை உடைத்து துடுப்பாட்டத்தில் சாதனை புரியும் ஷேன் வொட்சன் இந்த அணியின் மிகப்பெரிய பலம். நான்காவது முறையாகவும் தொடர்ந்து உலகக் கோப்பையைப் பெற்றாக வேண்டும் என்கின்ற வெறியுடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கும். அணித் தலைவர் ரிக்கி பொண்டிங்கும், டேவிட் ஹஸியும், கம்ரன் வைய்ட்டும் ஓட்டங்களைக் குவிப்பதில் சாமர்த்தியர்கள்.

*பலவீனம்:*

பந்து வீச்சு சிறப்பாக இல்லாதது பெரிய பலவீனம். பொலிஞ்சர் தவிர மற்ற வீரர்கள் ஓட்டங்களை வாரி வழங்குபவர்களாக உள்ளனர். ஆரம்பப் பந்து வீச்சில் ஷோன் ரைய்ட் தன்னுடைய வேகப்பந்து வீச்சால் எதிரணியினரைப் பயமுறுத்தக் கூடும் என்றாலும் சுழற்பந்துவீச்சாளர்கள் இல்லாத குறை ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பலவீனம். குறிப்பிட்டுக் கூறும்படியான சுழற்பந்து வீச்சாளர் அணியில் இல்லை. மூத்த வீரர்களான பொண்டிங், கிளார்க், பிரெட் லீ, வொட்சன் ஆகியோரின் ஆட்டத்தையே அணி பெருமளவில் சார்ந்துள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் களமிறக்கப்பட்ட மோசமான "உலகக் கோப்பை ஆஸ்திரேலிய அணி" இதுதான் என்பது விமர்சகர்களின் கணிப்பு.

*சிறப்பு:*

தொடர்ந்து மூன்று முறை உலகக் கோப்பையை வென்றுள்ளதால் ஆஸ்திரேலிய அணிக்குப் பொறுப்புக் கூடியுள்ளது. முன்பு இருந்தது போல சிறப்பான அணியாக இல்லாவிட்டாலும் ஆட்டத்தைத் திசை திருப்பும் வெற்றி வீரர்கள் இருக்கின்றனர். இறுதிச் சுற்று வரை இந்த அணி முன்னேறக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து

*பலம்:*

'ஸ்டிரைக் ரேட், எக்கொணமி'யில் 3ஆவது இடம். நெருக்கடியை சமாளித்து ஆடும் திறன். வலுவான துடுப்பாட்டம், தனிப்பட்ட முறையில் வீரர்கள் சிறப்பாக ஆடி வருவது இவையே இந்த அணியின் முக்கிய பலம்.

*பலவீனம்:*

பெரிய போட்டிகளிலோ, தொடர்களிலோ வெற்றி பெற்றதில்லை. இந்திய அணியைப் போன்றே இங்கும் விரைவில் விக்கெட்டை வீழ்ந்தும் பந்து வீச்சாளர்கள் இல்லை.

*சிறப்பு:*

சிறப்பாக விளையாடினால் மட்டுமே அரை இறுதி வரை முன்னேறலாம் என்று கணிக்கப்பட்டுள்ள அணி நியூஸிலாந்து. ஆனாலும் அணி சிறப்பாக இல்லாதது நியூஸிலாந்துக்கு பின்னடைவாக உள்ளது. சமீபத்திய தொடர்களில் ஏற்பட்ட படு தோல்விகள் அந்த அணிக்கு கடும் நெருக்குதலை அளித்துள்ளது.

நெருக்கடிகளில் இருந்து எப்போது விடுபடுகின்றதோ அப்போதுதான் அணியின் வெற்றி வழிகள் சாத்தியம்.



உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

# பதினைந்து வருடங்களின் பின்னர் உலகக் கிண்ணப் போட்டி இலங்கையில்

இலங்கை - கனடா அணிகளுக்கிடையிலான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இன்று அம்பாந்தோட்டையில் ஆரம்பமாகின்றது.

1996ஆம் ஆண்டு இடம் பெற்ற 6ஆவது உலகக் கிண்ணப் போட்டிகள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இடம்பெற்றன. அதன் பின்னர் பத்தாவது உலகக் கிண்ணப் போட்டி நடத்தும் வாய்ப்பு இம்முறை மீண்டும் ஆசிய நாடுகளுக்குக் கிடைத்திருக்கிறது.

அந்த வகையில் இலங்கையிலும் உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெறுகின்றன. இலங்கையில் இடம்பெறும், இலங்கை அணி மோதுகின்ற முதலாவது போட்டி இன்று அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெறுகின்றது.

இந்தப் போட்டியில் இலங்கை, கனடா அணியுடன் மோதுகின்றது.

பதினைந்து வருடங்களின் பின்னர் இலங்கையில் போட்டி இடம்பெறுவதனால், இந்தப் போட்டியைப் பார்ப்பதற்கான ரசிகர்கள் ஆவலாய் இருக்கின்றனர். இந்தப் போட்டிக்கான ரிக்கெட்டுக்கள் அனைத்தும் ஏற்கனவே விற்றுத் தீர்க்கப்பட்டுள்ளன.

நீண்ட காலத்தின் பின்னர் சொந்த மண்ணில் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி மோதுவதால் அந்த அணி மீதான எதிர்பார்ப்பு சலக இடத்திலும் தோன்றியுள்ளது.

அந்த எதிர்பார்ப்பை அணி நிறைவேற்றுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### தினமொரு பரிசுப் போட்டி

ஆஸ்திரேலியா - சிம்பாப்வே இடையிலான நாளைய (21.02.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..............................................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..............................................

..............................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (21.02.2011) நண்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.

கேற்வே வழங்கும் தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியான கூப்பன்கள்

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்பியூட்டர் ருடே இலவச சந்தா

UTHAYAN IT ISLAND

CICT GATEWAY CENTRE JAFFNA

4 1/2 லட்சம் ரூபா வழங்கும்

### மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..............................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..............................................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..............................................

..............................................

போட்டி முடிவுத் திகதி

15.03.2011

மாபெரும் காலிறுதிப் போட்டி

தினமொரு பரிசுப் போட்டி

இதற்கும் பரிசு உண்டு

1ஆம் பரிசு

தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

2ஆம் பரிசு

காத்திருங்கள்

மாபெரும் இறுதிப் போட்டி

3ஆம் பரிசு

விரைவில் உங்கள் கைகளில் லட்சங்கள்

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

### மாபெரும் காலிறுதிப் போட்டி

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. .............................. 5. ..............................
2. .............................. 6. ..............................
3. .............................. 7. ..............................
4. .............................. 8. ..............................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..............................................


..............................................

போட்டி முடிவுத் திகதி

10.03.2011

### போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.






-டிலீப்-

கரீபியன்களின் மண்ணில் ஆரம்பித்தது ஒன்பதாவது போட்டித் தொடர். அதிகரித்தன நாடுகள்; கூடின ஆட்டங்கள். இரு குழுக்களாய் இதுவரை இருந்தது. மாறியது இம்முறை நான்கு குழுக்களாய். நான்கு குழுவினுள்ளும் நான்கு நாடுகள் அடங்கின. 'பவர் பிளேகள்' ஆரம்பம் இங்கு.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கென்யா, கனடா, பெர்மூடா, மேற்கிந்தியதீவுகள், நெதர்லாந்து, நமீபியா, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து கிண்ணப் பலப் பரீட்சைக்கு காத்திருப்பு.

தொடங்கியது போட்டி. கத்துக்குட்டி அயர்லாந்து, பங்களாதேஷ் பலருக்குப் படிப்பித்தன பாடம். மார்ச் 17.2007 பலருக்குக் கரிபூசிய நன்நாள். ஒரே நாள் இரு ஆட்டம். பங்களாதேஷ் - இந்தியா, பாகிஸ்தான் - அயர்லாந்து. கத்துக் குட்டிகளுக்கு கனிவான நாள்.

முதல் ஆட்டம் பங்களாதேஷ் - இந்தியா. அதிரடிகாரர்கள் பலர் இந்தியாவில். ஆரம்பிக்க இறங்கினர் இந்தியர்கள். சேவாக் - கங்குலி ஆரம்ப வீரர்கள். ஆடமுடியவில்லை இந்தியர்களால், பங்களாதேஷின் பந்துகளை எதிர்த்து. களத்தடுப்புச் சுவரை உடைக்கமுடியவில்லை இந்தியாவால். கங்குலி தனித்து நின்று போராடினார். பங்காதேஷ் முன்னால் உடைந்து போனது இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை. போராடிப் பொறுமையாய் ஆடி 191 (10) ஓட்டங்கள் பெற்றது இந்தியா. கலைத்தது பங்களாதேஷ், கடினமான இலக்கை. எட்டிவிட்டது இலக்கை 5 விக்கெட்டுகளை இழந்து. கலைந்துபோனது இந்தியர்களின் கனவு. செருப்படிகள் விழுந்தன பலமாய், இந்தியர்களுக்கு.

பாகிஸ்தான்-அயர்லாந்து ஆட்டம், ஒருவரின் சாவுக்கே வித்திட்ட ஆட்டம். ஆட ஆரம்பித்தது பாகிஸ்தான், சரியத் தொடங்கின அதன் விக்கெட்டுக்கள். அயர்லாந்து வீசியது துல்லியப் பந்து. தகர்ந்தது பாக்கின் துடுப்பாட்ட வரிசை. 132/10 (45.4) முடிந்தது ஆட்டம். அயர்லாந்திடம் இல்லை சிறப்பான துடுப்பாட்டம். தடுமாறியது, இருந்தும் எட்டியது இலக்கை. அதற்கிடையில் அதன் போராட்டம் அதிகம். மீதமிருந்தது மூன்று விக்கெட்டுக்கள். வந்து சேர்ந்தது அயர்லாந்துக்கு வெற்றி.

மறு நாள் சடலமானார் பொப்வூல்மர். மர்மங்கள் நிறைந்தது அவர் மரணம். துயரமாகியது தொடர்கள்.

'சுப்பர் எயிட்' சுற்றுக்கு, மேற்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலியா, இலங்கை, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், நியூஸிலாந்து, அயர்லாந்து, இங்கிலாந்து தகுதி.

இலங்கை - தென்னாபிரிக்க ஆட்டம். மாறியது இறுதி நிமிடங்கள் இந்த ஆட்டத்தில். துடுப்பாட்டம் முதலில் இலங்கை. சோபிக்கவில்லை பெரிதாய். 209/10 ஓட்டங்கள் பெற்றது இலங்கை. பதிலளிக்கத் தொடங்கினர் ஆபிரிக்கர்கள். சிறப்பாய் ஆடி நெருங்கினர் இலக்கை. வந்தார் மலிங்க. சரித்தார் தொடர்ச்சியாய் விக்கெட்டுக்களை. கூடவே எடுத்தார் ஹட்ரிக்கும். இறுதி நிமிடத்தில் மாற்றியமைத்தார் மலிங்க. இருந்தும் இலங்கைக்கு எட்டவில்லை வெற்றி.

இலங்கை-இங்கிலாந்து ஆட்டம் பலரை ஈர்த்த ஆட்டம். ஆடியது இலங்கை முதலில், 235/10 ஓட்டங்கள் இறுதி வரை நின்று பெற்றது. பதிலளித்தது சீராக இங்கிலாந்து. போப்ராவின் ஆட்டம் மாற்றியது இலங்கையின் வெற்றியை. இறுதி ஓவர் வீசினார் தில்கார. வெற்றிக்கு இறுதிப் பந்தில் தேவை இரண்டு ஓட்டங்கள் இங்கிலாந்துக்கு. வீசினார் பந்தை. எதிர்பார்ப்புக்களுடன் நோக்கினர் பார்வையாளர்கள். ஏமாற்றம் யாவருக்கும், வந்தார் வீசாமல் சென்றார் பந்தை. அடுத்த பந்துக்கு அதிகம் எதிர்பார்ப்புக்கள். விழுந்தது விக்கெட். வந்தது இலங்கைக்கு வெற்றி.

இலங்கை, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா நுழைந்தனர் அரையிறுதிக்கு. முதல் மோதல் நியூஸிலாந்து - இலங்கை. நிரூபிக்கப்பட்டது இலங்கையின் பலம். மஹேல அடித்தார் சதம். 289/5 ஓட்டங்கள் இலங்கையின் கௌரவம். விரட்டத் தொடங்கியது நியூஸி. முரளியின் சுழலில் சிக்கியது. மீளவில்லை இறுதிவரை. 208/10 ஓட்டங்கள் இருந்தது ஒன்பது ஓவர்கள் மீதம்.

இரண்டாவது அரையிறுதி ஆஸி- தென்னாபிரிக்கா மோதல். ஆஸியின் பந்து வீச்சில் மாண்டது தென்னாபிரிக்கா. முதலில் ஆடினர். பெற்றனர் 149/10 (43.5) ஓட்டங்களை. 'சிம்பிளாய்' விரட்டிப் பிடித்தது ஆஸி. ஏழு விக்கெட்டுகள் இருந்தது மீதம் ஆஸியிடம்.

இறுதிப் போட்டியில் ஆஸி - இலங்கை. மழையில் நனைந்தது இறுதிப்போட்டி. கிண்ணம் சென்றது ஆஸியிடம்.

# 2007 கிண்ணம் எங்களுக்குச் சொந்தம்



## மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள்

WEST INDIES CRICKET BOARD



டரன் சமி
அணித் தலைவர் /
சகலதுறை ஆட்டக்காரர்
வயது : 27
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை வேகப்பந்துவீச்சு



ராம் நரேஷ் சர்வான்
துடுப்பாட்ட வீரர்
வயது : 30
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : லெக் பிறேக்



நிக்ரா மில்லர்
பந்துவீச்சாளர்
வயது : 28
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : சுழற் பந்துவீச்சு



கிரன் பொலாட்
சகலதுறை ஆட்டக்காரர்
வயது : 23
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை மித வேகப் பந்துவீச்சு



ஹமர் றோச்
பந்துவீச்சாளர்
வயது : 22
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை வேகப் பந்துவீச்சு



டுவையின் பிராவோ
சகலதுறை ஆட்டக்காரர்
வயது : 27
துடுப்பாட்டம் : வலது கை
பந்துவீச்சு : வலதுகை மிதவேகப் பந்துவீச்சு



டுவையின் ஸ்மித்
துடுப்பாட்ட வீரர்
வயது : 29
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : வலதுகை ஓவ் பிறேக்



கிறிஸ் கெயில்
துடுப்பாட்ட வீரர்
வயது : 31
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : வலதுகை ஓவ் பிறேக்



டரன் பிராவோ
துடுப்பாட்ட வீரர்
வயது : 21
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : வலதுகை மித வேகப் பந்துவீச்சு



ஹால்ரன் வோச்
விக்கெட் காப்பாளர்
வயது : 28
துடுப்பாட்டம் : வலதுகை



ருசெல்
பந்துவீச்சாளர்
வயது : 22
துடுப்பாட்டம் : வலதுகை
பந்துவீச்சு : வலதுகை வேகப் பந்துவீச்சு



பரத்
துடுப்பாட்ட வீரர்
வயது : 20
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : இடதுகை ஓவ் பிறேக்



சுலைமன் பென்
சகலதுறை ஆட்டக்காரர்
வயது : 29
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : இடதுகை சுழற் பந்துவீச்சு



சந்திரபோல்
துடுப்பாட்ட வீரர்
வயது : 36
துடுப்பாட்டம் : இடதுகை



ரவி ராம்புள்
பந்துவீச்சாளர்
வயது : 26
துடுப்பாட்டம் : இடதுகை
பந்துவீச்சு : வலதுகை மித வேகப் பந்துவீச்சு

# இறுதிக்கு வந்தும் எட்டாத கிண்ணம்

வந்தது மழை. தொடங்கவில்லை போட்டி. காத்திருந்தனர் 5 லட்சம் பார்வையாளர்கள். தாமதித்து தொடங்கியது போட்டி. குறைந்தது இதனால் ஓவர்கள். வெல்லப்பட்டது நாணயச் சுழற்சி ஆஸ்திரேலியாவால். இறங்கினர் துடுப்பெடுத்தாட.

கில்கிறிஷ்ட் - மத்தியூ ஹைடன். வில்லன்களாயினர் இலங்கைக்கு இவர்கள். பந்து வீச்சுக்குப் புகழ்பெற்றவர்கள் இலங்கையர்கள். வீசிய பந்துகள் கில்லியின் மட்டையில் பட்டதும், தாண்டின எல்லைகளை தொடர்ந்தது இவர்களின் சரவெடி. பந்து வீச்சுக்கள் கைமாறின. இருந்தும் ஓட்டங்கள் தொடர்ந்தும் ஏறியன.

கொடுத்துப் பார்த்தார் கில்லி பிடியை. தவறவிட்டார் தில்கார. பின்விளைவுகளை அப்போது உணரவில்லை அவர். கில்லியின் துடுப்பு, அனுப்பியது பந்தை எல்லைக்கு. மலிங்கவின் பந்து சரித்தது ஹைடன் விக்கெட்டை. வந்தார் தலைவர் பொன்டிங். நின்றார் அவர், ஆடினார் கில்லி. முடிவுக்கு வந்தது கில்லியின் ஆட்டம். அவர் முடித்துக் கொடுக்கையில் 149 ஓட்டங்கள். அணியினது அல்ல அவரது சொந்த ஓட்ட எண்ணிக்கை.

இறங்கியது ஓட்டவேகம் கில்லியின் இழப்புடன். பொன்டிங் ரன் அவுட். இழந்தது ஆஸி மூன்றாவது விக்கெட்டையும். நிறைவுக்கு வந்தது 281/4 (38). பந்து வீச்சு சொல்லத் தேவையில்லை. ஆஸியின் அடியில் கதிகலங்கியது இலங்கைப் பந்து வீச்சு.

வந்தார் அழையா விருந்தாளி வருணபகவான். குழப்பினார் போட்டியை. இலங்கைக்கு இலக்கு அதிகம். ஜெயசூர்யா ஆடினார் அதிரடியாய். ஏறியது ஓட்டம். விரட்டுவதற்காய் இணைந்து கொடுத்தனர் பதில். சங்கக்காரா-ஜெயசூரியா இணைந்தவர்கள். சதம் இவர்களுக்கு இடையில் பகிர்வு. பிரிக்கப்பட்டது இணைப்பு. வீழ்த்தப்பட்டது இலங்கையின் இலக்குகள். வந்தார்கள் சென்றார்கள் இலங்கை வீரர்கள். தாக்குபிடிக்கவில்லை ஆஸியின் பந்து வீச்சை அவர்களால்.

வந்தார் வருணபகவான் மீண்டும். நிறைவுக்கு வந்தது ஆட்டம். 215/8 (36) இலங்கை பெற்றுக்கொண்டது. 53 ஓட்டங்களால் இலங்கைதோல்வி. டக்வேர்த் லூயிஸ் தீர்ப்பு. கில்லி ஆட்டநாயகனாய் மாறினார். மெக்ரா தொடர் நாயகன்.



## 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி இறுதியாட்டம்

ஆட்டம்: இலங்கை Vs ஆஸ்திரேலியா
நாணயச் சுழற்சி: ஆஸ்திரேலியா
முடிவு: ஆஸ்திரேலியா 53 ஓட்டங்களால் வெற்றி
ஆட்டநாயகன்: கில்கிறிஸ்ட்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் | c சில்வா b பெர்னாண்டோ | 149 | 104 | 13 | 8 |
| ஹைடன் | c ஜெயவர்த்தனா b மலிங்க | 38 | 55 | 03 | 1 |
| பொன்டிங் | Runout ஜெயவர்த்தனா | 37 | 42 | 01 | 1 |
| சைமன்ஸ் | ஆட்டமிழப்பு இல்லை | 23 | 21 | 02 | 0 |
| வொட்ஷன் | b மலிங்க | 03 | 03 | 00 | 0 |
| கிளாக் | ஆட்டமிழப்பு இல்லை | 08 | 06 | 01 | 0 |
| ஹசி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹொச் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிரக்கன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரையிட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மெக்ராத் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 4, w 16, nb 3) | | | | 23 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| வாஸ் | 08 | 54 | 0 | 0 |
| மலிங்க | 08 | 49 | 2 | 1 |
| பெர்னாண்டோ | 08 | 74 | 1 | 0 |
| முரளிதரன் | 07 | 44 | 0 | 0 |
| டில்ஷான் | 02 | 23 | 0 | 0 |
| சனத் ஜெயசூரியா | 05 | 33 | 0 | 0 |

TOTAL - 281/4 (38)

விக்கெட் இழப்பு: 1-172 (ஹைடன்), 2-224 (கில்கிறிஸ்ட்), 3-261 (பொன்டிங்), 4-266 (வொட்ஷன்).

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| உப்புள் தரங்க | c கில்கிறிஸ்ட் b பிரக்கன் | 06 | 08 | 1 | 0 |
| சனத் ஜெயசூரியா | b கிளாக் | 63 | 67 | 9 | 0 |
| சங்கக்கார | c பொன்டிங் b ஹொச் | 54 | 52 | 6 | 1 |
| ஜெயவர்த்தனா | lbw b வொட்ஷன் | 19 | 19 | 1 | 0 |
| சில்வா | b கிளாக் | 21 | 22 | 1 | 0 |
| டில்ஷான் | Runout (கிளாக் / மெக்ராத்) | 14 | 13 | 2 | 0 |
| ஆனோல்ட் | c கில்கிறிஸ்ட் b மெக்ராத் | 01 | 02 | 0 | 0 |
| வாஸ் | ஆட்டமிழப்பு இல்லை | 11 | 21 | 0 | 0 |
| மலிங்க | st கில்கிறிஸ்ட் b சைமன்ஸ் | 10 | 06 | 0 | 1 |
| பெர்னாண்டோ | ஆட்டமிழப்பு இல்லை | 01 | 06 | 0 | 0 |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (lb 1, w 14) | 15 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பிரக்கன் | 06 | 34 | 1 | 1 |
| ரையிட் | 06 | 42 | 0 | 0 |
| மெக்ராத் | 07 | 31 | 1 | 0 |
| வொட்ஷன் | 07 | 49 | 1 | 0 |
| ஹொச் | 03 | 19 | 1 | 0 |
| கிளாக் | 05 | 33 | 2 | 0 |
| சைமன்ஸ் | 02 | 06 | 1 | 0 |

TOTAL - 215/8 (36)

விக்கெட் இழப்பு: 1-07 (தரங்க), 2-123 (சங்கக்கார), 3-145 (ஜெயசூரியா), 4-156 (ஜெயவர்த்தனா), 5-188 (டில்ஷான்), 6-190 (சில்வா), 7-194 (ஆனோல்ட்), 8-211 (மலிங்க).

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்





## உலகக் கிண்ணமதை உரித்தாக்கும் நாடெதுவோ?

உலகக் கிண்ணமதை
உரித்தாக்கும் நாடெதுவோ?
பலமாக மோதுகின்ற
பக்குவமே வெல்லுமையா?

பந்தினை வீசும் பாங்கு
பளிச்சிட வேண்டுமையா?
சந்ததம் களத்தடுப்பு
சாதனை செய்யுமையா!

எட்டுத் திசைகளிலும்
எழிலாக்ப் பந்தனை
பட்டுத் தெறித்திடவே
பாங்காக ஆடிடுவாய்!

சூதாட்டச் சுழியினிலே
சுழன்றுசீ ரழியாமல்
மாதாவின் மகத்துவத்தை
மனதிருத்த வேண்டுமையா!

உன்நாடு உயர்வுபெற
உழைத்திடுதல் உன்னுரிமை
பொன்னான இத்தருணம்
பொன்றாது வென்றிடுவாய்!

ஒற்றுமையே பலமென்ற
ஒளியுமிழும் கருத்தனை
சற்றேனும் சலியாது
சமர்களத்திலே சமைப்பாய்!

-சுத்தாடி வீ.சி.குஞ்சிதபாதம்-

# பிரெட் லீ எப்போதும் அபாயம்!

புள்ளி விவரங்களின்படி ஆஸ்திரேலியாவின் பிரெட் லீ உலகக் கோப்பை கிரிக்கெட்டில் சிறந்த பந்து வீச்சாளராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்.

இந்த உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலியாவின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் பிரெட் லீ, இதுவரை உலகக் கோப்பை போட்டிகளில் 22 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

ஒவ்வொரு 22 பந்துகளுக்கும் ஒரு விக்கெட் என்ற 'ஸ்ட்ரைக் ரேட்' கொண்டுள்ளார் பிரெட் லீ. அதாவது ஒவ்வொரு 4ஆவது ஓவரிலும் அவர் விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பதையே இது சராசரியாக எடுத்துக்காட்டுகிறது. இது வேறு எந்த வேகப் பந்து வீச்சாளரும் கொண்டிராத உலகக் கோப்பை கிரிக்கெட் சாதனையாகும்.

கிளென் மெக்ரா, டெனிஸ் லில்லிக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவின் சிறந்த வேகப் பந்து வீச்சாளராகக் கருதப்படும் பிரெட் லீ, லில்லி போன்று தனது பந்துவீச்சு வேகத்தைக் குறைப்பவர் அல்லர். தொடர்ந்தும் வேகப்பந்து வீச்சாளராகவே இருக்கிறார்.

இன்றும் அவர் மணிக்கு 150கி.மீ. அல்லது அதற்கு மேலும் வீசக்கூடிய திறமை உள்ளவர். ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டங்களிலும் சேர்த்து 600 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பிரெட் லீ இந்த உலகக் கோப்பை கிரிக்கெட்டிலும் மற்ற அணியின் துவக்க வீரர்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

இவரும் ஷோன் டெய்ட் என்ற ஆஸ்திரேலியாவின் மற்றொரு வேகப்பந்து வீச்சாளரும் இந்த உலகக் கோப்பை கிரிக்கெட்டில் சிறப்பாக பந்து வீச்சினை மேற்கொண்டால், ஆஸ்திரேலியாவின் வெற்றி வாய்ப்புகள் எப்போதும் அதிகரிக்கும்.



இவர்கள் இருவரதும் வேகங்கள் ஆசிய மண்ணில் எதிர்பார்க்கும் பயனைத்தரும் என்று கணிக்க முடியாது. ஏனெனில் ஆசிய மைதானங்கள் எப்போதும் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமாகவே அமைந்துள்ளன.

இவற்றையும் மீறி இவர்கள் இருவரும் சாதிப்பார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011

# 25 ஆவது ஆண்டு நிறைவு விழா

# உதயன்

**திகதி : நாளை (20.02.2011) ஞாயிறு**

**நேரம் : மாலை 4 மணி**

**இடம் : வீரசிங்கம் மண்டபம்**

பிரதம விருந்தினர்:
திரு.மு.திருநாவுக்கரசு
(ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)

கௌரவ விருந்தினர்கள்:
★ திருமதி இமெல்டா சுகுமார்
(யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்)
★ மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க
(கட்டளைத்தளபதி யாழ்.மாவட்டம்)
★ திரு.காமினி சில்வா
(சிரேஷ்ட பிரதி பொலீஸ்மா அதிபர், வடமாகாணம்)

சிறப்பு விருந்தினர் :
★ 'நல்லைக் குருமணி'
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள் - நல்லை ஆதினம்.
★ மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை
யாழ். ஆயர்.
★ மௌலவி எம்.ஐ.மஹ்மூத்
முஹமதிய்யா ஜும்மா மஸ்ஜித்

## நிகழ்ச்சிகளாக...

நல்லூர் பாலமுருகன்
குழுவினர்
மங்கள இசை

இராமநாதன் கல்லூரி
மாணவிகள்
வரவேற்பு நடனம்

பரிசளிப்பும்
கௌரவித்தலும்
மலர் வெளியீடும்

கொக்குவில்
கலாபவன மன்ற
மாணவிகள் நடனம்

யாழ்.ரமணனின்
ராஜன்ஸ்
இசைக்குழுவினர்
மெல்லிசை

**அனைவரையும் கலந்துகொள்ளுமாறு**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

உதயன்

# பாலியல் வல்லுறவுகள் குறித்து பெண்கள் அமைப்புகள் மௌனம்

சமூகத்தில் பெண்கள் பலவீனப் பிரிவினராகப் பார்க்கப்படுவது ஆதிகாலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வரும் ஒரு விடயம். இந்தப் பாகுபாட்டினை எதிர்த்துப் பெண்கள் அமைப்புக்கள் வெகு காலமாகவே போராடிவருகின்றன. இந்தப் போராட்டங்கள் எந்த அளவுக்கு வெற்றியளித்திருக்கின்றன என்பதை முறையாக ஆராய்ந்தால்தான் விவரம் தெரிந்துகொள்ளமுடியும்.

பொதுவில் ஆண்கள், தாம் எப்பொழுதுமே பலமான - பெண்களைவிட அதிக சக்திவாய்ந்தவர்கள் என்ற வகையிலேயே தம்மை நிலைநாட்டிக்கொண்டு வந்துள்ளார்கள். இதற்கு முக்கிய காரணங்கள் பல முன்வைக்கப்படுகின்றன.

ஒன்று ஆண்களின் உடல்வாகு இயற்கையாகவே வலுவாக அமைக்கப்பட்டுள்ளது. பெண்களின் உடல் இலகுவாகவும் மென்மையாகவும் காணப்படுகின்றது. இதனை ஆண்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பெண்களைத் தமது அடிமைகளாகவே நடத்தி வந்திருக்கிறார்கள். பெண்களும் தமது நிலையை உணர்ந்து உயர்வதைவிடுத்து ஆண்களின் ஆளுமைக்கு ஆட்பட்டு அடிமைகளாகவே இருந்து வந்துள்ளார்கள்.

பல நாடுகளிலும் தலையெடுத்துள்ள பெண்களின் உயர்வுக்கும் விடுதலைக்குமான அமைப்புக்கள் நல்ல பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளன. இந்த அமைப்புக்களின் போராட்டம் காரணமாக மட்டுமின்றி சில பெண்கள் தமது சொந்த முயற்சியாலும் முன்னேறி உலக அரங்கில் சாதனைகள் புரிந்துள்ளதை கண் டுள்ளோம்.

இவர்களில் சில பெண்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உயர்ந்துள்ளனர். இன்னும் சிலர் தமக்கே உரிய சாதுரியத்தாலும் அறிவு ஆற்றலாலும் உயர் நிலைகளுக்கு முன்னேறியிருக்கிறார்கள்.

பெரும்பாலான பெண்கள் அமைப்புக்கள் சமூகத்தில் தாம் பலவீனப் பிரிவினராக ஆண் சமூகத்தினால் பார்க்கப்படுவதற்கும் நடத்தப்படுவதற்கும் எதிராக செயல்படுவதை - போராடுவதை விடுத்து தமது கவர்ச்சி அலங்காரங்கள் குறித்தே அதிக அக்கறை எடுத்துக்கொள்வதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

சில வருடங்களுக்கு முன் மேற்கு நாடொன்றிலிருந்து பெண் விடுதலை அமைப்பொன்றின் தலைவி இலங்கைக்கு வந்திருந்தார். அவர் சிகரெட் பாவிக்கும் பழக்கமுடையவரென்பதால் சிகரெட்டின் சுடுசாம்பல் விழுந்து அவரது சட்டை முன்பக்கத்தில் ஓர் எரிந்த அடையாளம் காணப்பட்டது.

மாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்கு அவர் வந்தபோது தாம் காலையில் அணிந்திருந்த உடையை மாற்றிக் கொண்டு வந்திருந்தார்.

ஆனால் காலையில் விமான நிலையத்தில் அவரை வரவேற்ற அனைத்து இலங்கைப் பெண்களும் தமது சட்டைகளின் மேல்பக்கம் ஓர் எரிந்த ஓட்டையை வலிய ஏற்படுத்திக்கொண்டு வந்திருந்தார்கள்.

இதனை அவதானித்த அந்தவெளிநாட்டு அம்மையார் எதற்காக இவ்வாறு எரிந்த அடையாளம் சட்டையில் வைத்திருக்கிறார்கள் என்று கேட்டபோது - பதில் கூற முடியாமல் விழித்தார்கள்.

இதுதான் சில பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடுகள் என்று அண்மையில் ஓர் ஆங்கிலப்பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது. பிறநாட்டவர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றாது சுயமாக இந்த அமைப்புக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டப் பாடுபட வேண்டும் என்பதையே பெண்கள் விடுதலையில் அக்கறையுள்ளவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இந்த நிலையில் பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதை இல்லாதொழிப்பதற்கான ஐ.நா குழு, வன்னிப்போரின் இறுதி நாள்களில் நடந்துள்ள பெண்களுக்கெதிரான குற்றங்களை விசாரிக்கும்படியும் அதில் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்கும் படியும் கேட்டிருப்பது கவனத்துக்குரியதாகின்றது.

வன்னிப்போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் பெண்ணுரிமை மீறல்கள் சுயாதீனமாக விசாரிக்கப் படவேண்டும்.

அதற்கான சர்வதேச கட்டமைப்பொன்றும் உருவாக்கப் படவேண்டும் என்றும் அக்குழு வற்புறுத்தியுள்ளது.

இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தொடர்பான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இவ்வமைப்பு போரின்போது பாலியல் வன்முறைகள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதை மனித உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகளுக்கு எதிராக ஒரு குற்றமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஐ.நா வைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வன்னிப்போரின் இறுதி நாள்களில் மட்டுமின்றி அதற்குப் பிந்திய காலத்திலும் அங்கு சில பாலியல் வன்முறைகள் இடம்பெற்று அவை நீதிமன்றங்களின் விசாரணைகளில் இருந்து வருகின்றன. பெண்கள் மீது ஆயுதம் தரித்த அமைப்புக்களைச் சேர்ந்த வர்கள் வல்லுறவு புரிய முற்படுவது வன்மையாகத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றச் செயலாகக் கருதப்படவேண்டும். இலங்கையிலுள்ள வேறு பெண்கள் அமைப்புக்கள் எவையும் இந்த விடயங்கள் குறித்து அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. போர் நடைபெற்ற பகுதிகளில் இருந்து பாதிக்கப்பட்ட பெண்கள் குறித்து இந்த அமைப்புக்கள் இனிமேலாவது அக்கறை எடுத்து குரல் கொடுக்கவேண்டாமா?

# இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு இரு அரசுகளும் பேசித் தீர்வு காண்க

### புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வலியுறுத்தல்

கொழும்பு, பெப்.20

தொடரும் இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கு இலங்கை - இந்திய அரசுகளும் உரிய பேச்சுவார்த்தைகளை எவ்வித உள்நோக்கங்களும் இன்றி முன்னெடுத்து உடன் தீர்வு காண வேண்டும் - இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் சுட்டுக்கொல்லப்படுவதோ அன்றி தாக்கி துன்புறுத்தப்படுவதோ எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. சாதாரண உழைக்கும் தொழிலாளர்களான மீனவர்களைத் தொடர்ந்து துன்புறுத்துவது வன்மையான கண்டனத்துக்குரியதாகும். அத்தகைய சம்பவங்கள் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதேவேளை இலங்கையின் கடல் எல்லைக்குள் இந்தியப் பெரும் படகுகள் அத்துமீறிப் பிரவேசித்து குறிப்பாக வடபுலத்து மீன் வளங்களை வாரி அள்ளிச் செல்வதை எவ்வகையிலும் அனுமதிக்கவும் முடியாது. மேற்படி சம்பவங்களால் இரு நாடுகளினதும் சாதாரண உழைப்பாளர்களான மீனவர்களே கடும்பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

நீண்ட காலமாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் கொல்லப்படுதல், தாக்குதல், கைது என்பவற்றுக்கு ஆள்பட்டு வந்திருக்கிறார்கள். அதேவேளை வடபுலத்து மீனவர்கள் தமது கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலை நீண்ட காலமாகச் செய்ய முடியாத தடை, கெடுபிடி நிலைகளில் இருந்து வந்திருக்கிறார்கள். அவ்வப்போது உயிர் இழப்புக்கள், காணாமல் போதல், கைதுகளுக்கும் ஆளாகி வந்துள்ளனர். இவை அனைத்துக்கும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வந்த யுத்தம் முக்கிய காரணமாகும். ஆனால் இப்போது யுத்தம் முடிவடைந்த நிலையிலும் கூட இரு நாட்டு மீனவர் களும் முன்னரைப் போன்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டவாறே இருந்து வருகின்றார்கள்.

இந்திய மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் அண்மைய மாதங்களில் இலங்கைக் கடல் பரப்பில் இடம்பெற்றன. தாக்குதல், கைதுகளும் இடம்பெற்றுள்ளன. அதேவேளை இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லையைத் தாண்டி வந்து றோலர் எனப்படும் பெருவள்ளங்களைப் பயன் படுத்தி அதிகளவான மீன்களைப் பிடித்துச் செல்கின்றனர். இதனால் வடபுலத்து மீனவர்கள் பெரும் பாதிப்புக்களைப் பெற்று வருவதுடன் இந்த ரோலர் பெருவள்ள மீன் பிடிப்பால் மீன் வளங்கள் சேதமாக்கப்பட்டு அழிவுகளுக்கும் உள்ளாகி வருவதாக வடபகுதி மீனவர்கள் அடிக்கடி குற்றம் சுமத்தியும் வருகின்றனர். பாதிக்கப்படும் இந்திய மீனவர்களின் துன்பத்தை தத்தமது அரசியல் தேவைக்கு ஒவ்வொரு தமிழக வாக்கு வங்கிக் கட்சிக ளும்பயன்படுத்திவருகின்றன. இன் னும் சிலர் தமிழ் இன உணர்வின் பெயரால் தமிழ்க் குறுந்தேசிய வெறியைக் கிளப்பி வரு கின்றனர். அதேவேளை இந்திய மத்திய அரசு தனது பிராந்திய நலனுக்கும், இலங்கை அரசு தனது பேரினவாத நிலைப்பாட்டுக்கும் மீனவர் பிரச்சினையைப் பயன்படுத்த முன் நிற்கின்றன. இதன் மூலம் இரு நாடுகளினதும் உழைக்கும் தொழிலாளர்களான மீனவர் களே பல பக்கப் பாதிப்படைந்து வருகிறார்கள் என்பதே காணப்படும் உண்மையாகும். அத் தகைய பாதிப்பை தடுத்து நிறுத்தக்கூடிய வாறு இலங்கை - இந்திய அரசாங்கங்கள் உடன டி யான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண் டும். இந்திய - தமிழ் நாட்டினதும் இலங்கை-வட புலத்தினதும் மீனவர்கள் எவ்விதத் திலும் பாதிக்கப்படாதவாறு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் காணப்பட வேண்டும் என்பதையே எமது கட்சி வற்புறுத்துகின்றது - என்றுள்ளது. (த)

# உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களை மட்டுப்படுத்தியுள்ள மஹிந்த, ரணில்

கொழும்பு,பெப்.20

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார செயற்பாடுகளில் கலந்துகொள்வதை நாட்டின் இரு பிரதான கட்சிகளின் தலைவர்கள் மட்டுப்படுத்தியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது தேர்தல் பிரசார கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதை மட்டுப்படுத்தியுள்ளனர்.

மேலும், தேர்தல் பிரசாரச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இவர்கள் குழுக்களை நியமித்துள்ளனர்.

இந்தத் தேர்தல் பிரசாரங்களில் தலைவர்களின் தலையீடு இருக்கமாட்டாது.

அத்தோடு உள்ளூராட்சித் தேர்தலுக்கான அதிகளவான பிரசாரக்கூட்டங்களை கொழும்பு மாவட்டத்தில் மட்டுமே நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதுடன் கொழும்பு மாவட்டத்துக்கு அப்பால் இடம்பெறும் ஓரிரண்டு கூட்டங்களில் மட்டும் கலந்து கொள்வதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் முக்கியத்துவம் பெறும் ஒருசில கூட்டங்களில் மாத்திரமே கலந்து கொள்ளவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-22)

# இலங்கைக் கடற்படையினருக்கு எதிராக இந்தியாவில் வழக்கு

கொழும்பு, பெப். 20

இலங்கைக் கடற்படையினருக்கு எதிராக இந்தியாவின் மதுரை மேல் நீதிமன்றக் கிளையில் வழக்கொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதாக இந்திய நீதித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக் கடற்படையினர் இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து மீனவர்களைச் சுட்டுக் கொல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் அவர்கள் மீது கொலை வழக்குப் பதிய வேண்டுமென பிரஸ்தாப மனுவில் கோரப்பட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த சட்டத்தரணி கண்ணன் என்பவர் மதுரையிலுள்ள சென்னை மேல் நீதிமன்றத்தின் கிளையில் அந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

தமிழகத்தின் மீனவர்களில் 467 பேர் கடந்த சில வருடங்களுக்குள் இலங்கைக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக அவர் தனது மனுவில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே தமிழக மீனவர்களுக்குத் தற்காப்புக்காக துப்பாக்கி வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரது மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இலங்கைக் கடற்படையினர் மீது கொலைக் குற்றச் சாட்டின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைகள் நாளை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

உதயன்
20 பெப்ரவரி 2011 ஞாயிற்றுக்கிழமை

# இந்தியக் கடற்படையினர் கைது செய்த 4 குருநகர் மீனவரை உடன் விடுவிக்குக

நெல்லியடி,பெப்.20

இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 4 குருநகர் மீனவர்களையும் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் உடன் விடுதலை செய்ய வேண்டுமென யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குருநகரைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்ற போது மன்னார் கடற்பகுதியில் வைத்து அவர்கள் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் தற்போது மண்டபம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தமிழக மீனவர் சங்கத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நேற்று முன்தினம் எமது மீனவர்கள் நால்வர் மன்னார் கடல் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் ஒரு சுமுகமான சூழலை ஏற் படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கு பிடித்து வரப்பட்ட இந்திய மீனவரை விடுக்கும் முயற்சியில் அக்கறை காட்டிய அனைத்துத் தரப்பினரும் எமது மீனவரை விடுவிப்பதிலும் அக்கறை காட்ட வேண்டும் என்றார் அவர். (த-319)

# ஒதுக்கிய இடங்களில் மட்டும் குப்பைகள் கொட்டவேண்டும்

யாழ்ப்பாணம்,பெப்.20

வலி. மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கண்ட கண்ட இடங்களில் கழிவுப் பொருள்களைப் போடவேண்டாம் எனப் பிரதேச சபையின் செயலாளர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் திண்மக் கழிவுப் பொருள்களை கண்ட-கண்ட இடங்களில் கொட்டுவது உடன்நிறுத்த வேண்டும்.

சேதனப் பசளையாகக் கூடிய கழிவுப் பொருள்களை மக்கள் தங்கள் வீட்டு எல்லைக்குள் மண்ணில் புதைக்க வேண்டும்.

உக்கமுடியாத - பசளையாக்க முடியாத ஏனைய திண்மக் கழிவு மட்டும் பிரதேச சபையால் அதற்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் கொட்டவேண்டும்.

அறிவிக்கப்படாத இடங்களில் திண்மக் கழிவுகளைக் கொட்டுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் திண்மக் கழிவு கொட்டப்படும் பிரதேசங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

# வாழைப்பழத்தின் விலையில் வீழ்ச்சி

குருநகர்,பெப்.20

குருநகர் சின்னக் கடைப் பொதுச் சந்தையில் வாழைப் பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கதலி மற்றும் இதரை வாழைப்பழங்கள் தலா கிலோ ரூபா 35 தொடக்கம் ரூபா 40 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, வெற்றிலையின் விலை இங்கு உயர்வாக உள்ளது. நீளக் காம்பு வெற்றிலை ஒன்று ஒரு ரூபா 50சதமாகவும், கொழும்பு வெற்றிலை ஒன்று 2ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதனிடையே கீரிமீன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகின்றது. பருத்தித்துறையிலிருந்து வியாபாரிகளால் எடுத்துவரப்பட்டு இக்கீரிமீன்கள் கிலோ 350 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (ஒ-51)

## என்ன அதிசயம்...



உண்மை: தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர் எஸ்.பாலேந்திரனின் தோட்டத்தில் ஒரு வாழை இரண்டு வாழைக்குலைகளைப் போட்டுள்ளது. இந்த இதரை வாழையில் உள்ள இரண்டு குலைகளும் சம காலத்தில் ஒரே அளவில் வளர்ந்து வருகின்றன. வாழைக்குலைகளில் உள்ள காய்களும் நல்ல நிலையில் காணப்படுகின்றன. (த-86)

# ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்ப்பாணம்.வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜீ.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியும் ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் அதிவிசேட சித்தியும் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் தமது விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# மாநகர சபையின் வளாகத்தில் தங்கும் சுற்றுலாப் பயணிகள்

கொழும்புத்துறை,பெப்.20

பிரதான வீதியில் உள்ள யாழ்.மாநகரசபை வளாகப் பகுதியில் தென்னிலங்கைப் பயணிகள் தங்குவதோடு இளைஞர்கள் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு விளையாட்டு நடவடிக்கைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படவேண்டும் என யாழ். மாநகர சபை தீர்மானம் நிறைவேற்றியதையடுத்து அப்பகுதியில் தங்கி வந்த சுற்றுலாப் பயணிகள் மாநகர சபை வளாகத்தில் தங்கிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு இந்த வளாகப் பகுதி துப்பரவு செய்யப்பட்டு மைதானம் போன்று காட்சி அளிக்கின்றது. இதனையடுத்து இப்பகுதியில் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் தங்கி பொழுதைக் கழிக்கத் தொடங்கியுள்ளனர். (த-135)

# மகளிர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் போட்டிகள்

தென்மராட்சி,பெப்.20

உலக மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் சங்க அங்கத்தவர்களுக்கிடையிலான போட்டிகளை நடத்தவுள்ளனர்.

கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், கயிறிழுத்தல், வேகநடை, சங்கீதக் கதிரை, ஓட்டம், தடையோட்டம், உணவு உண்ணல் உட்பட பல போட்டிகளை நடத்தவுள்ளனர்.

போட்டியில் கலந்து கொள்வோரின் பதிவுகள் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருவர் மூன்று போட்டிகளில் பங்குபற்ற முடியுமென சங்கச் செயலாளர் திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் அறிவித்துள்ளார். (த-207)

# நெல்லியடி வாசி விபத்தில் படுகாயம்

கொடிகாமம்,பெப்.20

கொடிகாமம் நகரில் இடம்பெற்ற ஹன்டர் வாகனம் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.பேதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி, கரவெட்டி வடக்குப் பகுதியைச் சேர்ந்தவரான லோ.லோகீஸ்(வயது 57) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஒ-232)

# நெடுந்தீவு வைத்தியசாலைக்கு நிரந்தரமாக தாதியர்கள் இல்லை

தென்மராட்சி,பெப்.20

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு நிரந்தரமாக தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படமாட்டார்களா என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆண் தாதிய உத்தியோகத்தர்கள் சுழற்சி முறையில் மாதாந்தம் ஒருவர் வீதம் இந்த வைத்தியசாலையில் பணியாற்றிவருகின்றனர் வெளியிடங்களிலிருந்து தற்காலிகமாக வருவோர் அடிக்கடி விடுமுறையில் செல்வதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.'

அத்துடன் வேறுபட்ட நிலையில் உள்ளவர்கள் பணியாற்ற வருவதால் நோயாளர்கள் உரிய சிகிச்சை பெற முடியாத நிலையும் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இவ் வைத்திய சாலைக்கு சுழற்சி முறையில் பணியாற்ற வரும் மீள் நியமனத் தாதிய உத்தியோகத்தர்களிடம் சிகிச்சை பெற நோயாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

இந் நிலையில் இவ் வைத்தியசாலைக்கு நிரந்தர தாதிய உத்தியோகத்தரை நியமித்து உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (த-207)

# கைத் தொலைபேசியில் ஆபாசப்படம் இளைஞருக்கு நீதிமன்றம் அபராதம்

தென்மராட்சி,பெப்.20

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப்படங்கள் பார்த்துக்கொண்டிருந்த இளைஞரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர். கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்த இளைஞரைக் கைது செய்த பொலிஸார் மறுநாள் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்த இளைஞரை நேற்று முன்தினம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இளைஞருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார் ஆபாசப்படம் அடங்கிய மெமறிக்காட்டை பறிமுதல் செய்து பதிவுகளை அழிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-207)

# குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் மல்லாகத்தில் பொலிஸாரிடம் சிக்கினார்

வலி.வடக்கு,பெப்.20

யாழ்.குடாநாட்டில் இடம் பெற்ற சைக்கிள் திருட்டு, வழிப்பறி மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொர்புடையவர் எனக் கருதப்படும் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இரகசியப் பொலிஸார் மேற்கொண்ட புலனாய்வு நடவடிக்கையின் பயனாக குறிப்பிட்ட சந்தேக நபர் மல்லாகம் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவுடன்யாழ்.பொலிஸ் நிலைய இரகசியப் பொலிஸாரும் இணைந்து இந்த இளைஞனைக் கைது செய்து யாழ். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

மல்லாகம் பகுதியில் இவர் ஒரு பெண்ணுடன் தங்கியிருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார். குறிப்பிட்ட நபர் ஏற்கனவே குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைத் தண்டனை அனுபவித்தவர் எனவும் இவர் வேறு இடத்தில் இருந்து வந்து மல்லாகத்தில் தங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது. (த-86)

# பெண் ஒருவரின் கைப்பையை திருட முயன்றார் இளம் பெண்

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்.நகரப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் பெண் ஒருவரின் கைப்பையைப் பறித்துக்கொண்டு தப்ப முயன்ற இளம் பெண் ஒருவரை அங்கு கூடி நின்ற மக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும்தெரிய வருவதாவது -

யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து இறங்கி நடந்துவந்து கொண்டிருந்த பெண் ஒருவரைப் பின்தொடர்ந்து வந்த இளம்பெண் ஒருவர் பஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ள வைரவர் ஆலயத்துக்கு அருகில் வைத்து அவரது கைப்பையைப் பறித்துள்ளார்.

இதனைக் கண்ட அந்தப் பெண்ணின் பின்னால் வந்த உறவினர்கள் கூச்சலிட்டதை அடுத்து அங்கு திரண்ட மக்கள் திருட முயற்சித்த இளம் பெண்ணைக் கலைத்துப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (த-100)

## திறந்த பல்கலையின் கற்கைநெறிகள்

யாழ்ப்பாணம்,பெப்.20

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் பட்ட மேற் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கான சிறுவர் உரிமைகள் பாட நூல்களை இன்று பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சமூகக் கற்கைகள் துறையினால் நடத்தப்படும் சுற்றுலாத் துறையும் விடுதிச் செயற்பாடுகளும், கற்கை நெறிக்கு (2011-2012) விண்ணப்பித்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இன்று யாழ்.பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற் கொள்ள முடியும்.மொழிக் கற்கைகள் துறையினால் நடத்தப்படும் அடிப்படைச் சிங்களம், அடிப்படை தமிழ் கற்கை நெறிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன் பிராந்திய நிலையத்தில் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-10)


## சுயதொழில் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.20

தையல்துறை, கழுத்துப்பட்டி தயாரிப்புத்துறையில் எவ்வாறு பூக்கள், இலச்சினைகள் பதித்தல், சரிகை வேலைகள் செய்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆனைப்பந்தியிலுள்ள யாழ். வர்த்தகத் தொழிற்துறை மன்ற அலுவலகத்தில் நடைபெற வுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டையில் கலந்து கொள்ள விரும்புவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இந்தப் பயிற்சி பட்டறையை யாழ். வர்த்தக தொழிற்துறை மன்றமும் தனியார் ஆடை கைத்தொழில் நிறுவனம் ஒன்றும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (ஓ-10)

## அனைவருக்கும் கல்வி...



எதிர்காலத்தேவை: தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் தரம் ஒன்று கால்கோள் விழாவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ம.செல்வராசா மங்கள விளக்கேற்றுகிறார். (த)

# வெடிபொருள்களுடன் லொறி; யாழ்.பொலிஸாரிடம் சிக்கியது

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடந்த வியாழக்கிழமை இரவு லொறி யொன்றிலிருந்து பெருந் தொகையான ஜெலிக்னைட் குச்சிகள், டெட்டனேட்டர்களை ஆகியவற்றை யாழ்.பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்.பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவர் உள்ளடங்கிய பொலிஸ் குழுவொன்றே குறித்த லொறியைச் சுற்றி வளைத்து இவற்றைக் கைப்பற்றியுள்ளது.

பிரஸ்தாப லொறியிலிருந்து ஜெலிக்னைட் குச்சிகள் 115, டெட்டனேட்டர்கள் 90, உட்பட வெடி பொருள்களை தயாரிப்பதற்கான மேலும் சில பொருள்கள் யாழ் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

லொறிச் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் புத்தளம் ரத்மல்யாய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர் கூறினார்.

லொறிச் சாரதி நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். (ஓ-11)

# உரும்பிராயில் கைதான இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம்,பெப்.20

நள்ளிரவு வேளை வீடு புகுந்து குடும்பப் பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்ற இளைஞர் ஒருவரை யாழ்.மாவட்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு வேளை உரும்பிராய், செல்வபுரத்திலுள்ள வீடு ஒன்றில் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அத்துமீறி நுழைந்து உறக்கத்தில் ஆழ்ந்திருந்த பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றுள்ளார்.

திடீரென விழித்தெழுந்த அந்தப் பெண் கூக்குரலிடவே வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த அவரது கணவர் பதைபதைத்தவாறு எழுந்து அந்த இளைஞனை மடக்கிப் பிடித்தார் என்று கூறப்படுகிறது.

அதிகாலை வேளை கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் அந்த இளைஞனைக் கைது செய்தனர். தொடர்ந்து பொலிஸார் மாவட்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அந்த இளைஞனை ஆஜர்செய்தனர்.

நீதிவான் இளைஞனை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். (ஓ-14)

# எழிலூர், மகேந்திரபுரம் பகுதிகளில் மீள்குடியமர்வது குறித்து ஆராய்வு

கொழும்புத்துறை,பெப்.20

கொழும்புத்துறை எழிலூர் மற்றும் மகேந்திரபுரம் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.பணிமனையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது அடுத்த வாரமளவில் அங்கு மீள்குடியேற்றத்துக்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி வழங்கப்பட்டது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த எழிலூர் சனசமூக நிலையம் வேளாங் கன்னி ஆலயம் மற்றும் மகேந்திரபுரம் சன சமூக நிலையம் ஆகியவற்றின் நிர்வாக சபையினர் இந்தக்கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான இந்தச் சந்திப்பில் யாழ்.பிரதேச செயலர் கருணாநிதி தெய்வேந்திரன், யாழ்.மாநகர சபை பிரதிமேயர் து.இளங்கோ மற்றும் மிதிவெடியகற்றும் அமைப்பு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிதிவெடிகள் அகற்றப்பட்டதற்கான எழுத்துமூல உறுதிமொழி கிடைக்கப்பெற்றதும் இந்தப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் பலசிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் தம்மைச் சொந்த இடங்களில் விரைவில் குடியமர்த்துமாறும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தனர். (த-135)

## வலய மட்டப் பண்ணிசைப்போட்டி

தென்மராட்சி,பெப்.20

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 10,11 ஆகிய வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட பண்ணிசைப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

தரம் 10 சைவ நெறி பாடப் பரப்பில் உள்ள திருமுறைப் பாடல்கள், தோத்திரப்பாடல்கள் அனைத்தையும் மாணவர்கள் மனனம் செய்தல்வேண்டும். திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் பாடலை பண்ணோடு பக்தியோடும் பாடுதல் வேண்டும்.

இறுதிச் சுற்றுக்கு தெரிவான மாணவர்கள் பஞ்சபுராணம் பாடுதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

வரவேற்பு....



புதிதாக நியமனம் பெற்றுள்ள கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க நேற்றுமுன்தினம் காலை பொலிஸ் தலைமையகத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். இவரை பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய வரவேற்கின்றார். (204)

# நூறுகோடி ரூபா அந்நியச் செலவாணி மோசடி; நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் முடக்கம்

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, பெப்.20

நூறுகோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளன எனக் கூறப்படும் இரு வர்த்தக நிறுவனங்களின் 14 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன என மத்தியவங்கி அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் பெயரில் இலங்கையில் இயங்கும் வெளிநாட்டு வங்கிக் கிளைகளில் பேணப்பட்டு வந்த கணக்குகளே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன என்றும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

துபாயிலிருந்து புடைவை இறக்குமதி செய்வதாக போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அடிக்கடி பெருந்தொகை வெளிநாட்டுச்செலாவணி மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளுக்கான இறக்குமதிப் பொருள்களுக்கு சுங்கத் திணைக்களத்தால் வரியிறுக்கப்படாத விவரம் புலனான பின்னரே இந்த மோசடி அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்த விடயம் மத்திய வங்கியின் நிதிப்புலனாய்வுப் பிரிவின் கவனத்திற்கு வந்ததும் மத்தியவங்கி தனது அதிகாரத்தைப் பிரயோகித்து சம்பந்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் கணக்குகளை முடக்கியது.

அதனைத்தொடர்ந்து நீதிமன்ற ஆணையைப் பெற்று விடயம் புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட இரு நிறுவனங்களும் துபாயில் போலியான இரண்டு நிறுவனங்களைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு காலத்துக்குக் காலம் இந்த மோசடியைச் செய்துள்ளன.

மத்திய வங்கியும் புலனாய்வுப் பொலிஸாரும் ஒன்றிணைந்து இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# சைக்கிள் பயணியை மோதிக் கொன்ற சொகுசு பஸ் பிரதேச மக்களால் தீக்கிரை

சிலாபம் பங்கதெனிய வழியாக ஆனைமடுவ நோக்கிப் பயணித்த சொகுசு பஸ்ஸில் மோதுண்டு சைக்கிள் பயணி ஒருவர் மரணமானதையடுத்து கோபமுற்ற பிரதேசவாசிகள் அந்த பஸ்ஸை தீயிட் டுக் கொளுத்தி நாசமாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

அப்பகுதியில் வசித்துவந்த 45 வயது குடும்பஸ்தரே இவ்வாறு பலியானார். பயணியை மோதிய பஸ் நிறுத்தாமல் ஓட முயன்ற போது அயலில் இருந்தவர்கள் அதனை நிறுத்தி சாரதியையும், நடத்துனரையும் தாக்கி வெளியில் இழுத்துப்போட்டபின் பஸ்ஸைத் தீயிட்டுக் கொளுத்தினர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.காயமடைந்த பஸ் சாரதியும் நடத்துனரும் ஆனமடுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆனமடுவ பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# வெள்ளை வானில் வந்தவர்களால் இரத்மலானையில் லொறி கடத்தல்

கொழும்பு, பெப்.19

மரக்கறி மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்லும் 25 லட்சம் ரூபா பெறுமதியான லொறி ஒன்று கடந்த புதன்கிழமை மாலை இரத்மலானை மெலிபன் சந்தியில் வைத்து வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாககல்கிஸைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட லொறியின் சாரதி தனது முறைப்பாட்டில் தெரிவித்திருப்பவை வருமாறு-

லொறியைப் பின் தொடர்ந்து வந்த வெள்ளைவான் நபர்கள் லொறியை மறித்துத் தாங்கள் பொலிஸார் என்றும் சந்தேகத்திற்கிடமான லொறியொன்று தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது என்றும் கூறினர்.பின்னர் என்னைச் சாரதி ஆசனத்தில் இருந்து இறக்கி வெள்ளைவானில் ஏற்றினர். கண்கள், கைகளைக் கட்டி தூர இடத்துக்கு அழைத்துச் சென்றனர். அந்த இடத்தை விலங்குகள் நடமாடும் பிரதேசமாக உணர முடிந்தது. நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் என்னை விடுவித்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, கடத்தப்பட்ட லொறி பாணந்துறைப் பொலிஸ் நிலையத்தில் இருப்பதாக வந்த தொலைபேசி அழைப்பை அடுத்து அங்கு சென்று பார்த்தபோது அங்கு லொறி இருக்கவில்லை என அதன் உரிமையாளர் குறிப்பிட்டுள்ளார். லொறி பண்டாரகம பகுதியில் உள்ளதென தகவல் கிடைத்துள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போது விற்பனையில்




பிள்ளையையும் கிள்ளி...

மோட்டார் சைக்கிள் காரனிடம் மன்றாடிக்கொண்டிருந்த குழந்தையைக் காட்டநினைத்து அதைத் தட்டினாள். குழந்தைக்கோ நல்ல அசதி- சரிப்பட்டு வரவில்லை. நின்றிருந்த லொறியின் பின்னால் போய் குழந்தையின் தொடையில் விரல்களினால் ... 'வீல்'.. "நல்லா அழு... இப்படிப் படுத்தாய் என்றால்..."

அதிகாரம் இல்லாத பிரதேச சபைக்கு அங்கலாய்க்கும் தலைமைகள்

இதுவரை காலமும் ஆயிரம் பேருக்குக் குறைவான கூட்டம் என்றால் இடைநடுவில் திரும்பிப்போய்விடும் தலைவர்கள், இன்று ஐம்பது பேர் என்றாலும் மக்களைச் போய்ச் சந்தித்து வேண்டா வெறுப்பாகவா பல்லைக் காட்டிவிட்டு வருகின்றார்கள்.

விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர்

வெள்ளை ரோஜா

முள்

# வெற்றிக்கான மனப்பாங்கு ③

இறைவனின் படைப்புகள் யாவும் ஒரே விதமானவையே. எனினும் ஒரு குழந்தை வெற்றியடையும் நிலையில் இன்னொரு குழந்தை வெற்றி பெறமுடியாமல் தவிக்கின்றது. அவ்வாறானால் இங்கே நடந்தது என்ன? வறுமை இதற்கு ஒரு காரணமல்ல என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். மனப்பாங்கு எவ்வாறு அமைந்தது என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டும். சற்று காது கேளாத தோமஸ் அல்வா எடிசனிடம் அவனது ஆசிரியர் ஒரு கடிதத்தைத் தாயிடம் ஒப்படைக்கும் படி கொடுத்திருந்தார். ''இவர் (எடிசன்) படிப்பதற்கு லாயக்கற்றவன். அவனைத் திருப்பி அழைத்துக் கொள்ளுங்கள்'' என அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் இறுதியில் வெறும் மூன்று மாதப் பள்ளிப் படிப்பை முடித்த தோமஸ் அல்வா எடிசன் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியானார். எடிசன் மின் குமிழைக் கண்டுபிடிக்க முயன்று கிட்டத்தட்ட 10,000 தடவைகள் தோல்வியடைந்தார். இறுதியில் வெற்றி கண்டார். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் பல தடவை பல தேர்தல்களில் தோற்றார். நரம்புத்தளர்ச்சியினால் அவதியுற்ற அவர் இறுதியில் வெற்றியானார். இது எதனை உணர்த்துகின்றது? வாழ்வில் பின்னடைவு தவிர்க்க முடியாதவை. அந்தப் பின்னடைவே எமக்குச் சக்தியைத் தரக்கூடியது. நேர்மறை எண்ணம் கொண்ட ஒருவர் பின்னடைவுகளைப் படிகளாக மாற்றி முன்னேறிச் செல்வார். நான் இங்கு ஒன்றை மட்டும் கூற விரும்புகின்றேன். உங்களுக்கு ஏற்படும் பின்னடைவுகளை அனுபவங்களாக மாற்றி அதிலிருந்து நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். தொடர்ந்தும் தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் முன்னேறுங்கள். இடையிடையே பாறாங்கற்கள் வரலாம். அதை தடைகளாகக் கருதாதீர்கள். அவற்றில் இளைப்பாறுங்கள். தொடர்ந்தும் முன்னேறுங்கள். வெற்றி உங்கள் வசமாகும். பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற வார்த்தைப் பிரயோகங்களை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். அதிலுள்ள முதல் எழுத்துக்களைத் தனியாக எடுத்து ஒன்று சேர்த்தால் பதவி என்ற சொல் உருவாகும். ஆம் நீங்கள் பதவி ஒன்றைப் பெறுவதற்குப் பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பதே அதன் பொருளாகும். பற்பசையில் பல்லுக்குப் பாதுகாப்பு வளையத்தைத் தேடும் நாம் எமது முன்னேற்றத்துக்கும் உடலுக்கும் உள்ளத்துக்கும் பாதுகாப்பு வளையம் தேவையென்பதை உணர்ந்தோமா? ஆம் நேர்மனப்பாங்கு மற்றும் தன்னம்பிக்கையே உங்களுக்குரிய கவசமாகும். அதை ஒருமுறை அணிந்து பாருங்கள். அப்போது தெரியும் உங்களது பலம் என்னவென்று.

**உங்கள் வாழ்க்கையைத் திசை திருப்பும் தொடர்**

இரவும் பகலும் இயற்கையின் படைப்பே. அதுபோலவே இன்பமும் துன்பமும் இயற்கையின் நிரம்பலாகும். இருளான பகுதிகளுக்குச் செயற்கையான வெளிச்சத்தைப் பாய்ச்சி ஒளியை உருவாக்குவதுபோல், துன்பங்களை, சோதனைகளை, தன்னம்பிக்கை என்ற ஒளியைப் பாய்ச்சி பொறுப்புணர்ச்சியுடன் வாழ்வைப் பிரகாசிக்கச் செய்யலாம். ஒன்றை மட்டும் உங்களிடம் கேட்கின்றேன். தனியே இன்பத்தை மாத்திரம் அனுபவித்த ஒரு மனிதரையாவது இனக்காட்டுவீர்களா? அதேபோல் தனியே துன்பத்தை மட்டும் அனுபவித்த மனிதனை உதாரணம் காட்டுவீர்களா? உங்கள் பதில் என்ன? இல்லை என்பதே உங்கள் பதிலாக அமையும் என்பதை நான் அறிவேன். புத்தர், யேசு போன்றவர்கள் மனிதர்களாகப் பிறந்து சொல்லமுடியாத அளவுக்குத் துன்பத்தை அனுபவித்தவர்கள் தானே. ஆனால் அவர்கள் இறுதியில் வெற்றிபெற்றார்கள் அல்லவா? அதனால்தான் அவர்களைக் கடவுளாக வணங்குகின்றோம்.

பலரும் தங்களுக்குள் அறிவையும் திறமையையும் வைத்துக் கொண்டு அதை உணராதவர்களாக இருக்கிறார்கள். இதனால் தம்மைத்தாமே தோல்வியாளர்களாக நினைத்து வாழ்க்கையையே வீணடித்துவிடுகின்றனர். ஒரு கோழிக்கூட்டில் ஒரு பருந்து முட்டை வைக்கப்பட்டது. முட்டை பொரித்து பல குஞ்சுகள் வெளிவந்தன. அந்தக் குஞ்சுப் பருந்து, தான் ஒரு கோழிக்குஞ்சு என நினைத்துக்கொண்டு கோழிக்குஞ்சுகள் செய்வதையெல்லாம் செய்தது. மண்ணை விறாண்டியது, கொக்கரித்தது. கோழிக்குஞ்சுகளால் பெரிதாகப் பறக்க முடியவில்லை. அதனால் அந்தப் பருந்தும் பறக்கவேயில்லை. ஒருநாள் அழகான பருந்து ஒன்று வானில் அழகாகவும் கம்பீரமாகவும் பறந்து செல்வதைப் பார்த்த அந்தக் குஞ்சுப் பருந்து அதைப்பற்றி மற்றைய கோழிக்குஞ்சுகளிடம் வினாவியது. ''அது ஒரு பருந்து, அது தன்னிகரில்லாத பறவை. ஆனால் நீயோ ஒரு கோழிக்குஞ்சு உன்னால் அவ்வாறு பறக்க முடியாது'' எனக் கோழிக்குஞ்சுகள் பதிலளித்தன. அதனை நம்பி அக்குஞ்சுப் பருந்து கோழிக்குஞ்சின் வாழ்க்கையை வாழ்ந்து இறுதியில் இறந்து போயிற்று. வெற்றி பெறுவதற்கான அனைத்துச் சக்திகளுடனும் பிறந்தும் அது வளர்ந்த சூழலினால், எதிர்மறை மனப்பாங்கினால் வலுவிழந்து போனது. இக்கதை உணர்த்தும் விடயம் யாதெனில் நம்மை நாம் உணரவேண்டும் என்பதாகும். அவ்வாறு நம்மை நாம் உணர்ந்து தன்னம்பிக்கையோடு செயலாற்றினால் வெற்றிகளைக் குவிக்க முடியும்.

இக்கட்டுரையை வாசித்து முடிக்கும் தறுவாயில், ருசிகரமான வாழ்வை அனுபவிப்பதற்கு நேர்மறை மனப்பாங்கு அவசியம் என்பதை உணர்ந்திருப்பீர்கள். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் ஒரு மனிதனின் பிரதான சொத்தாகும். பணத்தைக் கொண்டு இவற்றை உழைக்க முடியாது. ஆனால் நிச்சயமாகத் தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சியைக் கொண்டு வேண்டுமானளவு செல்வத்தைச் சம்பாதிக்க முடியும். அனில் அம்பானியின் தகப்பனார் ஐம்பதினாயிரம் ரூபாயை வைத்திருந்த ஒருவர் என்பதையும் ஆனால் இன்று அவரும் அவரது பிள்ளைகளும் உலகப்பணக்காரர் வரிசையில் முதல் பத்திடத்தில் இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இங்கு தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே அவர்களின் இவ்வுயர்வுக்குக் காரணமாகும். தன்னம்பிக்கையைப் பெறுவதற்கு சிறிதளவும் பணத்தை செலவிடத் தேவையில்லை. அதை நாங்களாகவே வளர்த்துக் கொள்ள வேண்டும். '' உன்னால் முடியும்'' எனும் தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டே ஜப்பான் முன்னேற்றமடைந்து, உலகின் கதவுகளைத் தட்டியது. அணுகுண்டு வீசப்பட்டதன் காரணமாக புல்பூண்டுகள் முளைக்கமுடியாத இடங்களாக பேசப்பட்ட ஜப்பானிய நகரங்கள் இன்று தலைநிமிர்ந்து உலக பொருளாதாரங்களுக்கு உதாரணமாக அமைந்திருக்கின்றன. அவநம்பிக்கையை விட்டெறியுங்கள். ஏனெனில் அவநம்பிக்கையாளர்கள் எதனையும் தொடங்குவதுமில்லை; முயற்சிப்பதுமில்லை. அவ்வாறாயின் அவர்களுக்கு எவ்வாறு வெற்றி கிட்டமுடியும். அவநம்பிக்கை வளரவளர அது நஞ்சுக்கொடியாகி அவனது உடல் இதயம் என எல்லா உறுப்புக்களையும் அழிப்பதோடு மனம் அல்லது எண்ணங்களும் நலிந்து, மெலிந்து இருக்கும் இடம் தெரியாது அழிந்து போய்விடும். அவநம்பிக்கையாளர்கள் செங்கற்களைத் தவிர மற்ற எல்லாக்கற்களையும் அணிந்து கொள்வார்கள். ஆனால் தன்னம்பிக்கை கொண்டவர்கள் அக்கற்களைப் பொருளாதார அலகாக மாற்றுவார்கள்.

அதீத நம்பிக்கையாளர்கள் தமக்கு முன்னால் இருப்பவர்கள் முட்டாள்கள் என்றும் தானே பெரியவன் என்றும் நினைக்கின்றனர். எனவே என்னால் மட்டுமே முடியும் என கர்வம் கொள்கின்றனர். ஆனால் தன்னம்பிக்கை கொண்டோர் ''என்னால் முடியும்'' எனும் கவசத்தைக் கொண்டு தனக்கும் சமூகத்துக்கும் வெற்றியைத் தருகின்றனர். அதீத நம்பிக்கையுடையவர்களுக்கு தலைமைப் பொறுப்பு கிடைக்கும் போது சமூகத்தையும் நாட்டையும் அழித்துவிடுகின்றனர். ஹிட்லர் அதீத நம்பிக்கையுடையவராக இருந்தமையால் தான் உலகப்போர் ஏற்படுவதற்கும், ஜேர்மனிய வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று. உண்மையில் இவ்வாறானவர்களிடம் அன்பு, நேர்மை, பணிவு ஏதும் இருக்கப்போவதில்லை. இதிலிருந்து நீங்கள் உணரக்கூடியது யாதெனில் அவநம்பிக்கை மற்றும் அதீத நம்பிக்கையிரண்டும் எதிர்மறை மனப்பாங்கே. இப்பண்புகளை நமது உள்ளத்திலிருந்து நீக்க வேண்டும். நேர்மறை மனப்பாங்கு மற்றும் அதனுடன் இணைந்த வகையினைத் தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்கின்ற போது எமக்கு முன்னால் வெற்றி நடனமாடும், எமக்கு முன்னால் வெற்றி பணிந்து நிற்கும்.

**சி.விஜயகுமார்,**
முதுநிலை விரிவுரையாளர்,பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

# தவறுகள் திருத்தப்பட வேண்டும்

இலங்கையில் பாடசாலைகளில் ஆரம்பநிலை, இரண்டாம் நிலை என்பவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அரசினால் இலவசப் பாட நூல்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இதனைவிட தனியார் பதிப்பகம், வெளியீட்டகம் போன்றனவும் மாணவர்களுக்கான பயிற்சி நூல்கள், பாடநூல்கள் என்பவற்றைத் தயாரித்து விற்பனை செய்கின்றன. இவ்வாறு தனியாரால் வெளியிடப்படும் பாடநூல்கள், பயிற்சி நூல்கள் ஆகியவற்றை நாடளாவிய ரீதியில் மாணவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

தனியாரால் வெளியிடப்படும் பாடநூல்கள், பயிற்சி நூல்கள் என்பவற்றில் எழுத்துப் பிழைகள், எண்ணக்கரு ரீதியான பிழைகள் என்பன அதிகளவில் காணப்படுகின்றன. இத் தவறான எண்ணக் கருக்களை மாணவருக்கு வழங்கும் பாடநூல்கள், பயிற்சி நூல்கள் தமிழ்மொழி மூலமே அதிகளவு காணப்படுவது அவதானிக்கப் படுகின்றது.

தமது பிள்ளைகள் பொதுப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைய வேண்டும் என்ற நோக்கில் பெற்றோரினால் அதிக விலை கொடுத்து வாங்கும் இந்த நூல்களினால், மாணவர்களுக்கு தவறான அறிவு புகட்டப்படுவது வேதனைக்குரியது.


இளமையில் தவறான கருத்துக்களைக் கற்கும் சிறார்கள் அவற்றை தமது வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருப்பார்கள் என்பது திண்ணம்.

இது மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் தோல்வியைத் தழுவ வழிவகுத்துவிடும் ஆபத்து உள்ளது.

இவ்வாறு தனியார் வெளியீடு ஒன்றில் தரம் மூன்று மாணவர்களுக்காக எழுதப்பட்ட இலகு கணிதம் நூலில் பல தவறுகள் காணப்படுகின்றன. அவற்றில் மாதிரிக்காக சிலவற்றை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நூலின் விலை 280 ரூபா . இது 120 பக்கங்களைக் கொண்டது. இந்த நூலில் பதிப்பித்த ஆண்டு குறிப்பிடப் படவில்லை. தவறுகளில் சில இங்கே...

1. 88 ஆம் பக்கத்தில் வாரம் 27 இற்குரிய சமச்சீர், வெளிசார் கோலங்கள் எனும் அலகில் செவ்வகத்திற்கு நான்கு சமச்சீர் அச்சுக்கள் உள்ளனவெனக் காட்டப்பட்டுள்ளது. உண்மையில் செவ்வகத்திற்கு படத்தில் காட்டப்பட்டவாறு இரு சமச்சீர அச்சுக்களே உண்டு.



ஆனால், இந்த நூலில் மூலைவிட்டம் வழியேயும் சமச்சீர் அச்சுக்கள் காட்டப்பட்டுள்ளன. செவ்வகத்தை மூலைவிட்டம் வழியே சமச்சீராக மடிக்க முடியாது.

2. 60 ஆம் பக்கத்தில் ''81க்கும் 52க்கும் இடையேயுள்ள இலக்கங்கள் எத்தனை'' என்ற வினா உள்ளது.

உண்மையில் இலக்கம் (digit) எண்(Number) என்பவற்றுக்கிடையே வேறுபாடுகள் உள்ளன. இலக்கங்களால் ஆக்கப்படுவது எண். எனவே இவ்வினாவில் எண்கள் எத்தனை என்றே அமைய வேண்டும்.

3. 12 ஆம் வாரத்திற்குரிய (பக்கம் 41) திண்மங்கள் என்னும் பாடத்தில் மேற்பரப்பு என்பதற்குப் பதிலாக பக்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் மேற்பரப்பு, பக்கம் என்பன வேறுபட்டன.

4. 9, 10,11,12 ஆம் பக்கங்களில் காணபடும் வசனக் கூட்டல் கணக்குகளிலும் 16, 17 ஆம் பக்கங்களில் காணப்படும் வசனக் கழித்தல் கணக்குகளிலும் சக(+) சய(-) அடையாளங்கள் தவறான இடங்களில் இடப்பட்டுள்ளன.

5. இந்த நூலில் அனேகமான இடங்களில் ரூபாய் என்பதற்குப் பதிலாக ரூபா என எழுதப்பட்டுள்ளது. ரூபா என எழுதுவது தவறு. ரூபா. என்று எழுதப்படல் வேண்டும்.

இவை என்னால் அவதானிக்கப்பட்டவற்றில் ஒரு சில தவறுகள் மட்டுமே.

தவறான எண்ணக் கருக்கள், பிரயோகங்களைகளைக் கொண்ட இந்த நூலை நூலாசிரியர் ந.சந்திரகுமார், வெளியீட்டாளர் ராஜாஸ் புத்தக நிலையம் ஆகியோர் விற்பனை நிலையங்களிலிருந்து உடனடியாக மீளப்பெற்று, நூலில் காணப்படும் சகல தவறுகளையும் சீர்செய்து விற்பனைக்கு விடுதல் எதிர்காலச் சந்ததியினரின் மனதில் சரியான கணித எண்ணக் கருக்களை பதிக்க வழி செய்யும். எதிர்கால தமிழ்பேசும் இளஞ்சிறார்களின் நன்மை கருதி நூலாசிரியரும் வெளியீட்டாளரும் இதனைச் செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

**தேவராசா முகுந்தன்,**
(முன்னாள் சொற்பிட்ட அதிகாரி,
ஆரம்ப கணித அலகு, தேசிய கல்வி நிறுவகம் )




## தமிழுக்கு ஆங்கிலம் (4)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**'ஈ' வரிசையில்:**

ஈசன்: God
ஈடு: Mortgage , Pawn
ஈரப்பலா: Bread fruit
ஈட்டி: Spear
ஈயம்: Lead
ஈரம்: Wet
ஈரல்: Liver
ஈர வெங்காயம்: Small onions
ஈறு: Gums
ஈனு: Give birth to
ஈர்ப்பு: Atraction
ஈர்க்கில்: Rib of coconut leaf
ஈ: Fly
ஈகை: Donation
ஈமக்கிரிகை: Funeral,Lastrites

**'உ' வரிசையில்:**

உண்மை: Truth
உள்ளம்: Heart, Mind
உரல்: Mortar
உலக்கை: Pestle
உளி: Chisel
உண்ணி: Tick
உள்ளி: Garlic
உப்பு: Salt
உமி: Husk
உதயம்: Dawn
உருவம்: Figure
உடு: Dress
உடன்பாடு: Agreement
உடன்படு: Agree
உடுபுடைவை: Garments
உடும்பு: Iguana
உடை: Dress, Break
உடைமை: Possession, Property
உட்கார்: Sit down
உண்: Eat
உணர்ச்சி: Feeling
உண்டாக்கு: Creat
உண்டியல்: Seafe
உடல்: Body
உச்சி: Top
உச்சரி: Pronounce
உசிதம்: Convenience
உடன் (னே): Immediately
உணர்த்து: Make one feel
உதாரணம்: Example
உதிரம்: Blood
உத்தியோகம்: Employmenty Job

தொகுப்பு: ரம்யன்

## தெரிந்து கொள்ளுங்கள்

| விலங்கு | அதன் ஆயுட்காலம் |
|---|---|
| யானை- | 70ஆண்டுகள் |
| திமிங்கிலம்- | 50ஆண்டுகள் |
| ஒட்டகம்- | 40ஆண்டுகள் |
| அன்னம்- | 40ஆண்டுகள் |
| புலி- | 30ஆண்டுகள் |
| பென்குயின்- | 25ஆண்டுகள் |
| கரடி- | 5ஆண்டுகள் |
| குரங்கு- | 20ஆண்டுகள் |
| சிங்கம்- | 15ஆண்டுகள் |
| மான்- | 10ஆண்டுகள் |

சு.சங்கீத், தரம்-5,
யாழ்.மிருசுவில் அரசினர்
தமிழ்க்கலவன் பாடசாலை.

## தொடர் மொழிக்கு ஒரு மொழி

**அசகாயசூரன்**- எவரது துணையுமின்றித் தானே தனித்து நின்று பகைவரை வெல்லும் ஆற்றல் படைத்தவன்.
**இருட்டடிப்பு**- சில செய்திகளை ஏதோ ஒரு காரணம் பற்றிப் பத்திரிகையில் பிரசுரம் செய்யாது விடுதல்.
**ஊருணி**- ஊர் மக்கள் பருகுவதற்கான நீரைப் பெறும் கிணறு .
**எய்ப்பில்வைப்பு**- முதுமைக் காலத் தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்.
**ஒற்றி**-சொத்தை அனுபவிக்கும் உரிமையும் கூடிய அடைமானம்.
**சான்றோன்**-அன்பு, நாண், ஒப்பரவு முதலிய நற்பண்புகளை அமையப் பெற்றவன்.

**லக்ஷி இளங்கோ, தரம் 10,**
**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.**

## வெண்ணிலா



பால் போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே
நீ பகல் எல்லாம் எங்கிருந்தாய் வெண்ணிலாவே
வட்ட வடிவோடிருக்கும் வெண்ணிலாவே
நீ வர வரத் தேய்வதேனோ வெண்ணிலாவே
கண்ணுக்கு அழகு அளிக்கும் வெண்ணிலாவே
நீ காணாமல் போவதேனோ வெண்ணிலாவே
வளர்ந்திடவும் தேய்ந்திடவும் வெண்ணிலாவே
உன்னை வைத்தவர் ஆர் சொல்லுவாயோ
வெண்ணிலாவே

**வி.துவாரன், தரம்- 5,**
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

## விடை தெரியுமா? 96

1.இலங்கையின் மிகப் பெரிய மைதானத்தின் பெயர் என்ன?
2.இவ்வாண்டுக்கான உலகக் கிண்ணப் போட்டியின் இலங்கை அணித்தலைவர் யார்?
3.செஸ் விளையாடி உலக சாதனை படைத்துள்ள ஈரானிய இளைஞரின் பெயர் என்ன?
4.இந்த ஆண்டு நடக்கவிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டி எத்தனையாவது போட்டி?
5.1992 ஆம் ஆண்டில் உலகக்கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் கிண்ணத்தை வென்ற நாடு எது?

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை 94


1.டபிள்யூ.எஸ்.பி-33 பி / எச்.டி 15082
2.பிரிடேலியா மூனி
3.ரெயிலர்
4.நெதன் பிராக்கன்
5. 63

### வெற்றி பெற்றவர் விவரம்


1. சி.லதாங்கி, தரம்-02,
யாழ்.துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
2. கு.திலக்ஷி, தரம்- 9 D,
சங்கிலியன் வீதி, நல்லூர்.
3.யோ.சுபாஜினி, தரம்-4,
யாழ்.மட்டுவில் வில்கம்பவாசினி கனிஷ்ட ம.வி.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 26.02.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.





பா.தர்சிகன், தரம்-6,
யாழ்.சுதுமலை வடக்கு த.க.வி.



ர.சேயோன், தரம்- 2 f,
யாழ். இந்துக் கல்லூரி.



ஆர்.அத்மன்,
தரம்-8 'ஏ',
ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலயம்.



ஜெ.ஜெகுரன், தரம்- 7 'ஏ',
யாழ். கனகரட்ண மத்திய மகா
வித்தியாலயம்.

## பெரியோரை மதிப்போம்

ஓர் ஊரிலே ஒரு திருடன் இருந்தான். நன்மை என்றால் என்னவென்று தெரியாதவன். ஆனால் அவன் தனது குருவை, பெரியோரை மதிப்பவன். அவர்கள் சொற்படி நடப்பவன். எனவே அவனைத் திருத்துவதற்காகக் குரு, ''நீ எனக்காக நீ ஒரு தீய குணத்தை விடுவிக்க வேண்டும்'' என்று குரு கூறினார். அவனும் ''நீங்கள் ஒரு பெரியவர் என்பதற்காக நீங்கள் சொல்வதைச் செய்கிறேன்'' என்று கூறி ''என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்?'' என்றான். குருவும் ''நீ பொய் சொல்ல வேண்டாம்'' என்றார். அன்றிலிருந்து அவனும் பொய் கூறுவதில்லை. ஒருநாள் அவன் அரண்மனையில் களவாடச் சென்றான். அப்போது நகர சோதனைக்காக வந்த மன்னன் இவனைக் கண்டு ''என்ன செய்கிறாய்'' என்று கேட்டார். அதற்கு அவன் ''களவெடுக்கிறேன்'' என்றான். அரசன் ஆச்சரியமடைந்து ''நானும் அதற்குத்தான் வந்தேன், ஆகவே அதில் எனக்கு நீ அரைவாசி தர வேண்டும்'' என்றார். அவனும் அதற்கு உடன்பட்டு மூன்று விலைமதிக்க முடியாத முத்துக்கள் இருந்தபோது அதில் இரண்டு முத்துக்களை எடுத்து வந்து இருவரும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு சென்றனர். பின்னர் அரசர் அங்கு போய் பார்த்த போது ஒரு முத்து இருந்தது.

அரசர் மறுநாள் அரண்மனையில் அமைச்சரிடம், ''நேற்று அரண்மனையில் முத்து களவுபோய் உள்ளது, பார்த்து வாரும்'' என்று கூறி அனுப்பினார். அமைச்சர் அங்கிருந்த ஒரு முத்தையும் கவர்ந்து கொண்டு ''மன்னா மூன்று முத்தையும் திருடன் திருடிக் கொண்டு போய் விட்டான்'' என்று கூறினான். மன்னர் உண்மையை உணர்ந்து கொண்டு அமைச்சருக்குத் தண்டனை வழங்கியதோடு அன்றிலிருந்து திருடனை அமைச்சராக்கினார்.

இக்கதையிலிருந்து நாம் உணர்ந்து கொள்வது என்னவென்றால் அவன் பெரியோரை மதித்ததாலேயே உயர்வு அடைந்தான். எனவே நாமும் பெரியோரை மதித்து வாழ்வில் வெற்றி பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதேயாகும்.

**ஜெ.தசாந்தினி, தரம்- 11 B,**
யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

# யுத்த தர்மம் - பகைவனுக்குதவுதல் பேராண்மை

பண்டைய போர் முனைகளில் அன்றைய அரசர்கள் தமது போரிடும் முறைகளில் பல தர்மங்களைக் கடைப்பிடித்தனர். அத்தகைய தர்மங்கள் அவர்களது ஆட்சி முறையிலும் நிலைபெற்றிருந்தமையாலேயே நீதி நிலைத்திருந்தது. நாடுகள் வளம் பெற்றிருந்தன. இராமாயணத்தில் வருகின்ற இராமபிரான் இராவணனைப் போரிலே சந்திக்கிறான். போரிலே இராமபிரானுக்கு எதிர் நிற்க இயலாமல் தனது வலிமையையும் அதற்கு உதவிய அனைத்தையும் இழந்து தனியனாகத் தவித்து நிற்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிராயுதபாணியான இராவணனைக் கொன்றொழித்திருக்கலாம், ஆனால் இராமபிரான் அப்படியான நீதியற்ற செய்கையைச் செய்யவில்லை '' இன்று போய் நாளை வா'' என்கிறான். அதனை,

*''ஆளையாவுனக் கமைந்தன மாருத மறைந்த*
*பூளையாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு*
*நாளைவாவென நல்கினன் நாகிளங் கமுகின்*
*வாளைதாவுறு கோசலை நாடுடை வள்ளல்''*

எனக் கம்பர் கூறி விளக்குகின்றார்.

மிகுந்த பலசாலியும் அரக்ககுலத் தலைவனும் இராமனின் எதிரியும் மகா துரோகியுமான இராவணன் போர்க்களத்திலே அனைத்தையும் இழந்து நிராயுதபாணியாக நிற்கின்றான். அவனை அவ்விடத்திலேயே கொல்வது இராமனுக்கு இலகுவான செயல். ஆனால் அவ்வாறு இராமன் செய்யவில்லை. நிராயுதபாணியான ஒருவனைக் கொல்வது யுத்த தர்மமல்ல. பகைவனுக்கு இரங்குகின்ற - பகைவனுக்கு உதவுகின்ற பண்பான யுத்த தர்மத்தைப் போர்முனையிலே அவன் பேணுகின்றான். இராவணனைப் போர்க்களத்தினின்றும் போக விடுகின்றான். அதுதான் தர்மம் - அதுதான் வீரம்.

**இலக்கியக் காட்சி -**

*'' பேராண்மை என்ப தறுகண்*
*ஒன்றுற்றக்கால்*
*ஊராண்மை மற்றதன் எஃகு''*

என்கிறார் வள்ளுவர்.

வீரம் உயர்வானது. ஆனால் போரிடும் பகைவனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தால் அத்துன்பத்தினைப் போக்க அவனுக்கு உதவுதல் வேண்டும் என்கிறார் அவர். பகைவன் தனது போரிடும் வலிமையையும் ஆயுதங்களையும் இழந்து நிற்கும் தருணத்தில் அவனைக் கொல்வது முறையல்ல. இந்தச் சந்தர்ப்பத்திலே அவனைத் தப்பித்துச் செல்ல அனுமதிப்பதே, பேராண்மையிலும் மேலானது - மேலான பேராண்மை என்கின்றார் வள்ளுவர். அவரின் குறள் மொழியை மெய்ப்பிக்கும் வகையில் செயற்படும் இராமனைக் கம்பர் எமக்கு இராமாயணத்தில் காட்டுகிறார்.



தோல்வியைத் தழுவிய நிலையில் உள்ளமும் உடலும் சோரப் போர்முனையை நீங்கி இலங்கைக்குத் திரும்பும் இலங்கேஸ்வரனின் தோற்றத்தைக் கம்பர் இவ்வாறு எடுத்துரைக்கிறார்.

*''வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்*
*நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த நாவும்*
*தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்*
*வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோ டிலங்கை*
*புக்கான்''*

இவ்வாறு வெறுங்கையோடு திரும்பும் நிலையினனான இராவணனைக் கொல்லாது விடுத்த செயல், இராமனே பேராண்மையிலும் மேலான பேராண்மை மிக்கவன் என்பதையும் யுத்த தர்மங்களை மீறாத நீதிமான் என்பதையும் அவன் ஆட்சிக்கு உட்பட்ட கோசல நாடு பெருமையுடையது என்பதையும் வெளிப்படுத்தக் காண்கின்றோம்.

அண்மைய நாள்களில் பேசப்படும் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் குறித்த கூச்சல்களோடு இராமனின் பால் விளைந்திருந்த யுத்த தர்மத்தின் வலிமையை ஒப்பு நோக்குவதற்கு இயலாதிருப்பதனை உன்னிப் பாருங்கள். ★

**மைதிலி தேவராஜா**

---



# மழை

உதயன் 25
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
**வெள்ளிவிழா சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பெற்ற சிறுகதை 6**

பளை. அந்த ஏ-9 பாதையில் இருந்து தெற்குப் புறமாக உள்ள அந்த வீதிவழி சிறிது தூரம் நடந்து சென்று, வலது கைப் பக்கமாக இருபது மீற்றர் தூரம் நடந்து சென்றால் மாலாவின் வீடு வரும்.

மாலைநேரக் கருக்கலில் அந்தச் சிறிய குடிசையில் ஏற்றி வைத்த கைவிளக்கு சிறு தூரங்களுக்கு ஒளியினைப் பாய்ச்சிக்கொண்டிருந்தது. வீட்டுக் கப்பில் ஆணியொன்று அறையப்பட்டிருந்தது. அதில் ஒரு பற்றிரேடியோ தொங்கிக் கொண்டிருந்தது. அது ஓரளவு சத்தத்துடன் பாடிக்கொண்டிருந்தது. சின்னதொரு இரைச்சலும் பாடலுடன் கலந்து வந்தது. பாடலைக் கேட்டு இரசித்த வண்ணம், மாலாவின் மாமி அந்தத் திண்ணைக் குந்தில் இருந்து பெட்டி பொத்திக் கொண்டி ருந்தாள். சர்மியும், சாளினியும் ஆனா, ஆவன்னா எழுதி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

நன்கு வார்ந்தெடுத்த ஓலைகளால் தட்டிளைத்து, அதை நன்கு குவித்து, ஈர்க்கு வைத்து மூலை கட்டினாள். மூலை கட்டப்பட்ட பெட்டியின் ஐந்து பக்கத்திலும், பெட்டிப் பட்டத்தின் கீழ்மூலையில் வெட்டி ஒட்டப்பட்ட பட்டத்தாள்கடதாசி போல் ஓலைக்கீலங்கள் தூங்கிக்கொண்டிருந்தன.

அந்தக் கீலங்களை ஒவ்வொன்றாக எடுத்து, பெட்டியில் காணப்படும் சதுர வடிவ அடையாளங்களில் ஓலையின் ஒரு பக்கத்தின் ஊடாகச் சொருகி, அதன் எதிர்த்துவாரத்தின் ஊடாக இழுத்துப் பொத்திக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம், அன்றைய மதியச் சாப்பாடு தயாரிப்பதற்காக மாலா அடுப்படியில் இருந்து கொண்டு போராடினாள். ஒரு அந்தரம் அவசரம் தெரியாத அடுப்பு, பக்கென்று எரிய நினைக்காதாம்.

இன்று விடிய வெள்ளன கடும்மழை. அவள் வேலை முடிந்து வரும் போதும், சரியான மழை. அதனால் அவள் அரிசி, காய்கறி வாங்காது வந்துவிட்டாள். நேற்று வாங்கி வைத்த காய்கறிகள் கொஞ்சம் மிச்சம் இருந்தன. அந்தத் துணிவினால் அரிசி வாங்காது வீடு வந்து சேர்ந்திருந்தாள்.

மழையில் விறகெல்லாம் நனைந்திருந்தன. பக்கத்து வீடு சென்று பார்வதி ஆச்சியிடம் போய் இரண்டு பேணி அரிசி வாங்கி வந்திருந்தாள் மாலா. அந்த அரிசியும் நாளைக்குக் கொடுத்துவிட வேண்டும். அது பார்வதி ஆச்சி நாளைக்குக் காய்ச்ச என்று வைத்த அரிசியில் ஒரு கொஞ்சம். அந்த இரண்டு பேணி அரிசியும் மாலாவின் குடும்பம் ஒரு நேரம் வயித்தைக் கழுவவே போதுமானது.

மாலாவின் கணவன் அருண்! அவன் ஒரு ஆசிரியன். போன வருஷம் குண்டுபட்டு இறந்து போனான். இன்று சர்மி, சாளினி எனும் இரண்டு பெண் பிள்ளைகள் அவளுக்குச் சொந்தமானவர்கள். பிள்ளைகள் இரண்டும் அழகான பொம்மைக் குட்டிகள். பார்க்கவும் பிள்ளைகளின் பேச்சைக் கேட்கவும் ஆசையாக இருக்கும்.

சர்மி மூத்தவள் அவளுக்கு ஐந்து வயது. இரண்டாவதுக்கு மூன்று வயது. இவர்களுடன் அருணின் அம்மா இத்தனை பேரையும் பாதுகாத்து, வளர்த்தெடுப்பது மாலாவின் கடமை.

அவள் இப்பவெல்லாம், சனி, ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாள்களில், பகல் வீட்டில் நிற்பதில்லை. விடியவெள்ளனவே எழும்புவாள். அந்தநேரம் அவள் மாமி பெட்டி, பாய் இழைத்துக் கொண்டிருப்பாள். இவளும் தன் கடமைகளில் கண்ணாக இறங்குவாள். காலைச் சாப்பாடு தயாரிப்பாள். பிள்ளைகளைச் சுத்தம் செய்து, வெளிக்கிடுத்துவாள். வேலைக்குப் புறப்பட்டுவிடுவாள். இயந்திரம் போல் இயங்குவாள்.

மாமி பெட்டி, பாய் இழைத்த வண்ணம், தன் பேரப்பிள்ளைகளையும் கவனிப்பாள். சர்மியும், சாளினியும் மண்சோறு, கறி காய்ச்சி விளையாடுவார்கள். மாலா கிளிநொச்சிக் கச்சேரியில் முகாமைத்துவ உதவியாளாராகக் கடமை பார்க்கிறாள். அங்கு வேலை முடிந்து மாலை ஆறு மணிக்குத்தான் தன் வீடு வந்து சேருவாள். அதன் பிறகுதான் அவள் மதியச் சாப்பாடு தயார் செய்வாள். ஆனாலும் என்ன! இன்று கொஞ்சம் தாமதமாகவே அவள் வந்து சேர்ந்திருந்தாள்.

குந்தி இருந்து, குனிந்து அடுப்பு ஊதினாள். ''ஊ...! ஊ...!'' என்று ஊதினாள். முக்கி முனகிக் கொண்டு அடுப்பு சுவாலையுடன் எரியத் தொடங்கியது. அது பெரும் சுவாலையுடன் எரியும். பிறகு படக்கென்று அணையும். அடுப்பு ஊதி ஊதி களைத்துப் போனாள். அவள் வியர்வைத் துளிகளால் நனைந்திருந்தாள்.

அடுப்புடன் போராடி அலுத்துப் போனாள். ''இதென்ன விறகு! எரியாதாம்'' என்று புறுபுறுத்துக் கொண்டாள்.

பசி தாங்கமாட்டாமல் இளையவள் அழுது வாங்கிப் போனாள். அந்தநேரம் மாலாவுக்கு, மகளின் அழுகை அரியண்டமாக இருந்திருக்க வேண்டும். ''கும்... கும்...'' என்று இளையவளின் முதுகினை கும்மிக் கொண்டாள். பிள்ளை சுழண்டு போனாள். பிள்ளைக்குப் பயத்தில் சலமும் போயிருந்தது. கொஞ்ச நேரம் அழுது வாங்கி, களைத்த பிறகு அவள் தூங்கிவிட்டாள்.

**சின்னராசா உதயகுமார்**

இப்ப பிள்ளைகள் இருவரும் நித்திரை கொள்கின்றனர். பிள்ளைக்கு அடித்த அடியும் அந்த நோவினால் பிள்ளை துடித்த துடிப்பும் மாலாவின் கண்களில் நிறைந்து கொண்டன. அவள் கண்கள் கலங்கி இருந்தன. கண்ணீர் கன்னம்வழி வழிந்து பெருந்துளிகளாய் விழுந்தன. அத்தனையும் அவளின் மனச் சுமைகள். வலது பக்கப் புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
20 பெப்ரவரி 2011 ஞாயிற்றுக்கிழமை

# இயற்கையே! எம்மை என்ன செய்ய எண்ணுகிறாய்?



பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு
பகட்டுக் காட்டி
உள்ள கோவணத்தையும் இழந்துபோய்
குடிகெட்டு அலைகின்ற
கோணங்கி இனத்தார் நாம்!
உயிர்களை இழந்தோம்
உரிமையை இழந்தோம்
உரத்து விலைபேசும் உரத்தையும் இழந்தோம்
அடக்கம் காக்க வேண்டிய சமயத்தில்
அளவுக்கதிகமாய் எமை நினைத்து
இருந்த கௌரவத்தையும் இழந்து- இன்று
தெருப்பிச்சைக் காரர்கள் ஆனோம்
கேட்பதற்கு யாருமில்லாக்
கேவலங்கள் சுமந்து
ஏதிலியாய் வாழுகிறோம் - மீள வழி தெரியவில்லை!

கோட்டைகள் இடிந்து
கோபுரங்கள் தகர்ந்து
குடியிருக்கும் வீடுகளும் அழிந்து
அநாதைகளாய் வாழும் இனத்தை
ஏ! இயற்கையே! நீயும் இணைந்து நின்று
என்ன செய்ய எண்ணுகிறாய்?
எழுந்து நடக்க முடியாத ஏழைகள்
அழிந்து போக அடாவடி செய்வதுதான்
உலக இயற்கை எனில்...
உலகைப் படைத்த அந்தப் பிரமனின்
உள்ளத்தில் -
என்ன கல்லும் மண்ணுமா அடைந்து கிடக்கிறது?

மழையாய் சொரிந்தாய்
மாடு மனை மக்களைத் தொலைக்கும்
வெள்ளமாய்ப் பெருகி வீடு விட்டுக் கலைத்தாய்
கொள்ளி சொருவிக் குடியழித்துக்
குழறியழ வைத்தாய்....
ஓ இயற்கையே..,
நீ எம்மை என்ன செய்ய எண்ணுகிறாய்?
"திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை" என்றார்
வக்கற்று நிற்கும் எம்மை
தெய்வமும் காக்கவில்லை
"பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை"
நினைத்து உன் செயலாலே
நெஞ்சுருகி அலறுகிறோம்

கொல்ல நினைத்தாயா....?
குமுறிப் பொழிந்து குலமழிக்கத் துணிந்தாயா?
ஆதரிப்பார் எவருமின்றி
அவலம் சுமந்து நிற்கும் ஒரு இனத்தை
மெல்ல மெல்லக் கருவறுத்து
மெருகிழந்து அது தொலைய
கொன்று அழிப்பதுதான் அறமென்றால்
இயற்கை அன்னையே!
எம்மை- ஒன்றாகக் கொன்று விடு!
இரங்கியழ எவரும் இல்லாமல்
எல்லோரும் சேர்ந்து ஒன்றாய் வருகின்றோம்
ஏற்றுக்கொள்!

கவிஞர் த.நடேசேஸ்வரன்,
சாவகச்சேரி.

# எங்களையும் வாழ விடுங்கள்

முற்றுந் திறந்த புத்தனா நான் இல்லை
சிலுவை சுமந்த யேசுவா நான் இல்லை
வேல் எடுத்த முருகனா நான் இல்லை
இனிதாய் வாழப் பிறந்த சாதாரண பிள்ளை
விதியே ஏன் செய்தாய் எமக்குத் தொல்லை
நெஞ்சில் யார் குத்தியது சோக முள்ளை
எம்மால் உருட்ட முடியவில்லை வாழ்க்கைச் சில்லை
துன்பத்திற்குக் கோழட்டு காட்டுகின்றன; தண்ணீரால் எல்லை
அடியோடு அழித்து விடுங்கள் சாதிப்புல்லை
நயவஞ்சக பாம்புகளுக்கு பிடுங்கி எறியனும் பல்லை
எங்களையும் வாழ விடுங்கள் எம் மனமோ வெள்ளை

ம.சசிந்தன்

# ஒட்டுமா?

உங்களுக்கருகே
வந்திடில் புதுவாசம்
நீங்கள் போட்டிடும்
ஆடைகளோ எமக்குப்
புதுவேசம்
நீங்கள் பேசிடும் மொழியோ
எமக்குச் சுத்த சூனியம்

வருகிறீர்
வாரி இறைக்கிறீர்
போகிறீர்
வசதிகள் பொறுக்கியவரல்லவா
ஒட்டுமா
உங்கள் உறவு எம்மோடு?

புலோலியூர்,
வேல்வேந்தன்.


# இயற்கையின் நாசிக்குள் எவர் போட்டார் தூசி?

கூற்றுடன் சேர்ந்து கும்மியடித் தாடும் வண்ணம்
காற்றின் சிறகிற்கு கல்லெறிந்து பார்த்தவர் யார்?
தாளம் தப்பியொரு தாண்டவத்தை ஆடுகின்ற
கோலத்தைத் தென்றலிற்குக் கொடுத்தவர்கள் யாரிங்கே?
பூமகளின் பொன்னுடலை புதையலிற்காய்
தோண்டிவிட்ட காமுகர்கள் யாரிங்கே?- கண்டபடி சீழ் பிடித்து
ஓவென்று அவள் அழுது ஒப்பாரி வைக்கின்ற
பாவத்தின் சுமைதானே பாரதிரும் பூகம்பம்!
நிறைமாதக் கர்ப்பிணியாய் நிலமகளின் மடிதுயின்ற
எரிமலையின் வாய்க்குள்ளே எவர்விட்டார் விரலிங்கு?
நெருப்பு வாந்திவழி நீந்தியெவர் கரைசேர்வார்!
மோன நிலவொளியில் முறுவலித்து மெய்வளைத்து
தானசைந்து தரை(ர/ல)தடவும் தாயனைய கடலலையை
ஊளையிட்டெழுந்து உருண்டு உருப்பெருத்து-உயிர்
மாளவைக்கும் இராட்சசியாய் மாறவைத்த மர்மமென்ன?

சூரியனின் வீட்டினுள்ளே சூட்டடுப்பை மூட்டியிருந்த
பாரிற்கே நாம் விருந்து படைப்பமென விழைந்தவர் யார்?
வானத்தைத் தொட்டுவரும் வாஞ்சையிலே தப்பில்லை,
போன இடத்தினிலே பொல்லாப்புப் புரிவானேன்?
துலங்குமெழில் நீள்விசும்பின் தூயவெண் கன்னத்தில்
அமங்கலமாய் காபன்கரி அப்பியவர் யாரிங்கே!
நெருப்போடு விளையாட்டு நீரோடு வாய்த்தர்க்கம்
விருப்போடு மழைதூவும் விசும்போடு "கைகலப்பு"
பொறுப்போடு தாங்கும் பூமிக்கே "வாள்வெட்டு"
வெறுப்பேற்றி காற்றையுமே வெல்வமென்ற இறுமாப்பு!
பஞ்ச பூதமெனும் பாஞ்சாலி துகிலுரிக்கும்
வஞ்சத் துச்சாதனர் வரன்முறையைத் தாண்டுகின்றார்!
பிரளயத்தின் மறுபிறப்பை,பிரபஞ்சக் கருவறுப்பை
வரவழைப்ப மென்றுநரர் வந்து விட்டார் விதிக்கு!
ஏற்கனவே அறிகுறிகள் எழுந்தடங்கிப் போன பின்பும்
நோக்கங்கள் இன்றியிவர் நோண்டிமிகப் பார்க்கின்றார்!
சிறுபிள்ளைத் தனமான சில்மிஷங்கள் தொடருதைய்(யே)யா!
உருவழித்துப் போவதற்காய் ஊழியெழுந் தாடுதைய்யா!
இயற்கையின் நாசிக்குள் ஏற்றிவிட்ட தூசியினால்- அது
வியர்த்து, விறுவிறுத்து விடைத்தலறித் தும்முகையில்
அடங்கிவிடும் ஆட்டமெல்லாம்!
அகிலத்தை ஆறறிவால் மடக்கிக் காலடிக்குள் மண்டியிட
வைப்பமென்ற புடைப்புக்கள் எல்லாமே புழுதியெனப் போய் முடியும்!
எப்படித்தான் உலகழியும் என்றுள்ளே நகைப்பவரே
"செப்படி வித்தை"யெலாம் செயல் முடிந்த பின்புரியும்!
அலையெழுந்து பிடரியிலே அறைந்த பின்பே விழிபிதுங்கி
உலகமெலாம் "சுனாமி"யெனும் ஒரு பதத்தை அறிந்தது காண்!
ஆடுபவர் ஆடட்டும், அடங்குபவர் அடங்கட்டும்
வேடங்கள் எல்லாம் வெளுக்கும்- வெகுவிரைவில்,
இந்தத் தலைமுறையின் இறுதிக்குள், இயற்கையதன்
விந்தை முடிச்ச விழ்த்து விளம்புமொரு பொது நீதி- அது
மற்றுமொரு தடவையெமை மன்னிக்கும் பிரேரணையா?
மானிட வர்க்கத்தின் மரணத்தின் சாசனமா?!

அளவையூர்ச் சேந்தன்

# இரு நாட்டு அரசுகளின் சதி வலையில் வீழ்ந்து விடாதீர்கள்



ஞாயிறு காரம்

கடந்த வாரம் பருத்தித்துறை முனைப் பகுதியில் கடற்கரைக்கு மிக அண்மையில் இழுவைப் படகுகளில் (ட்ரோலர்) வந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த 112 இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களால் சுற்றி வளைக்கப்பட்டுப் பிடிக்கப்பட்டு இலங்கைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் ஓரிரு நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். அடுத்த நாளில் மாதகல் கடற்பரப்பில் வைத்துப் பிடிக்கப்பட்ட 24 மீனவர்களுக்கும் அவர்களின் படகுகளுக்கும் கூட இதுவே நடந்தது.

**தமிழ் நாட்டில் கொந்தளிப்பு**

மீனவர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக இந்தியாவின் தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பு ஏற்படுத்தப்பட்டது. தமிழக முதல்வரின் மகளும் மாநிலங்களவை உறுப்பினருமான கனிமொழியின் தலைமையில் பெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள், சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற போது கனிமொழி உட்பட 2,000 பேர் கைதாகினர். இந்தப் பிரச்சினை தொடர்பாகத் தமிழகப் பாரதீய ஜனதாக் கட்சியினரும் ஒரு பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் புகுந்து இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பது தொடர்பாகவும் இலங்கை மீனவர்களின் வலைகளை அறுத்து நாசமாக்கி விட்டுச் செல்வது தொடர்பாகவும் இலங்கை மீனவர்கள் நீண்ட காலமாகவே தங்கள் முறைப்பாடுகளைத் தெரிவித்து வந்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்திலும் அண்மையில் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அதுமட்டுமின்றி இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதாகக் கூறும் முறைப்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சு நடத்த வந்த இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ்விடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பிரச்சினை தொடர்பாக முறைப்பாடும் செய்திருந்தார்.

**சட்டத்தைக் கையில் எடுத்த மீனவர்கள்**

இத்தகைய அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்த இந்தியாவோ, இலங்கையோ பயனுள்ள நடவடிக்கைகள் எதையும் எடுக்காத நிலையில் இலங்கை மீனவர்கள் தாங்களாகவே நடவடிக்கையில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்று வந்த போர் காரணமாகவும் கடற்படையினரின் கொலைவெறி நடவடிக்கைகள் காரணமாகவும் இலங்கையில் வடக்கு, கிழக்கு வாழ் மீனவர்கள் கடலில் இறங்க முடியாத நிலைமையே நிலவியது. இதன் காரணமாக வறுமையிலும் துன்பத்திலும் உழன்றனர். வறுமை தாங்காது கடலில் இறங்கியோரில் பலர் சடலங்களாகக் கரையொதுங்கியதையும் நாம் மறந்துவிட முடியாது. தற்சமயம் எமது மீனவர்கள் தொண்டு நிறுவனங்களின் உதவி மூலமும் வங்கிக் கடன்கள் பெற்றுத் தொழிலை மீண்டும் ஆரம்பிக்கும் நிலையிலும் அவர்களின் துன்பங்கள் தீர்ந்தபாடில்லை.

இப்படியான ஒரு நிலையில் எமது மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுவதும் சேதமாக்கப்படுவதும் அவர்களின் எதிர்காலத்தையே இருளாக்கிவிடும்.

இப்படியான ஒரு துன்ப நிலையிலேயே அவர்கள் தவிர்க்க முடியாதபடி சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்தனர். தாங்களாகவே நேரடியாக நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

**இலங்கையில் சில மீன்பிடி முறைகளுக்குத் தடை**

இலங்கைக் கடற்பரப்பில் இழுவைப் படகுகளின் பாவனையும் சில குறிப்பிட்ட வகை வலைகளின் பாவனையும் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தகைய மீன்பிடி முறைமூலம் மன்னார் வளைகுடாவில் காணப்படும் சில அரிய மீன் வகைகளும், மீன்குஞ்சுகளும் கூட அழிவடைந்து எதிர்காலத்தில் இப்பகுதியின் மீன் வளமே அழிந்துவிடும் என்பதாலேயே அவை தடைசெய்யப்பட்டுள்ளன. மேலும் இங்குள்ள பவளப் பாறைகள் சேதமாக்கப்படுவது மீன்களின் உணவு உறை விடங்களையே நிர்மூலமாக்கும் செயலாகும். இழுவைப் படகுகளில் பயன்படுத்தப்படும் இருமடி வலைகள் பவளப் பாறைகளையும் சேதப்படுத்துகின்றன. சேதுசமுத்திரத் திட்டத்திற்கே சுற்றுச் சூழலியலாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்பதை நினைவு கூரலாம்.

இலங்கை மீனவர்களின் சொந்த வாழ்வாதார அடிப்படையிலும் இக்கடல் பகுதியின் வளம் காப்பாற்றப்படும் வகையிலும் இலங்கை, இந்திய அரசுகள் அக்கறை செலுத்தாத நிலையில் இலங்கை மீனவர்கள் இப்படி ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ஆனால், தமிழக முதல்வர் கருணாநிதியின் தலைமையிலான திராவிடர் முன்னேற்றக் கழகமும், இந்திய மத்திய அரசும் ஏதோ நடக்கக் கூடாத ஒரு பெருங்கொடுமை நடந்துவிட்டதாகக் கொதிப்படைந்துள்ளனர்.

**தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லப்படும் போது கோபமடையாத கனிமொழிக்கு அத்துமீறிய மீனவர்கள் மக்களால் பிடிக்கப்படும் போது ஆவேசம் வருவது காரணமில்லாமல் இருக்க முடியுமா?**

சென்னையில் கனிமொழி தலைமையில் ஆர்ப்பாட்டம், தூதரக முற்றுகை 2,000 பேர் கைது என ஒரு பெரும் திருவிழாவே நடத்தப்பட்டது. அதேவேளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பொதுமக்களும் மீனவர்களும் சட்டத்தைக் கையில் எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அதற்கும் ஒருபடி மேலே போய் இலங்கை அரசுக்குத் தன் ஆட்சேபனையைக் கடுமையான தொனியில் தெரிவித்தார் என்று கூறியுள்ளார்.

**வளாவிருந்த மத்திய, மாநில அரசுகள்**

இதுவரை இலங்கை இந்தியக் கடற்பரப்பில் ஐநூறுக்கு மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காயப்படுத்தப்பட்டு வந்தனர். பல படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் சேதமாக்கப்பட்டன. இவையனைத்தும் இலங்கைக் கடற்படையினராலேயே மேற்கொள்ளப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. இவை தொடர்பாக இந்திய மீனவர்கள் ஏராளமான போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இப்படியான சந்தர்ப்பத்தில் தமிழக முதல்வர் மத்திய அரசுக்கு ஒரு தந்தியோ கடிதமோ அனுப்பிவிடுவார். இறந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதுடன் அவர் தனது பணியை முடித்துவிடுவார். மத்திய அரசோ முதல்வருக்கு ஒரு பதிலை அனுப்பி வைக்கும். இது தொடர்பாக இந்திய மத்திய அரசோ தமிழக அரசோ பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பதில்லை.

அண்மையில் அடுத்தடுத்துக் கொல்லப்பட்ட இரு மீனவர்களின் கொலை தொடர்பாக மத்திய அரசு தன் கடும் கண்டனத்தைத் தெரிவித்ததுடன் இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் திருமதி நிருபமா ராவ்வையும் கொழும்புக்கு அனுப்பி வைத்தது. இலங்கையோ தனது கடற்படைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்றும் அதை ஒரு மூன்றாம் தரப்பு மேற்கொண்டிருக்கலாம் என்றும் கூறிவிட்டது. எனினும் மீனவர்கள் மீது வன்முறையைப் பயன்படுத்துவதில்லை என இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இவை நடந்து ஒரு சில தினங்களுக்கு உள்ளேயே இந்திய மீனவர்களின் அத்துமீறல் இடம்பெற்றுள்ளது. அவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவமும் இடம்பெற்றது.

**எழும் கேள்விகள்**

இங்கு சில கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகும். ஐநூறுக்கு மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்படும் போது தலைவரின் தந்தியுடனும் கடிதங்களுடன் தமது போராட்டங்களை மட்டுப்படுத்திக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இப்போது மட்டும் ஏன் பெரும் போராட்டத்தில் இறங்கினர்.

ஒன்று, வரவிருக்கும் சட்டசபைத் தேர்தல். ஏற்கனவே தமிழக அரசு மீனவர்கள் பிரச்சினைகளில் காட்டிய அக்கறையற்ற போக்கு தமிழக மீனவர்களிடம் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் தி.மு.க. அரசினதும் அமைச்சர்களினதும் ஊழல்கள், மோசடிகள், அடாவடித்தனங்கள் தி.மு.கவின் செல்வாக்கில் பெரும் சரிவை ஏற்படுத்தியுள்ளன.

**சந்திரசேகர ஆசாத்**

இதை ஈடுசெய்ய இப்பிரச்சினையை தி.மு.க. கையில் எடுத்துள்ளது. இதன் மூலம் தான் தமிழக மீனவர்களின் நம்பிக்கைக்குரிய பாதுகாவலன் என்ற மாயையை அது ஏற்படுத்த முனைகிறது.

**இரு அரசுகளின் சதி**

மற்றது என்றுமே இந்திய அரசு இலங்கைத் தமிழ் மக்களுக்கும் தமிழக மக்களுக்குமிடையே நல்லுறவு நிலவுவதை விரும்புவதில்லை. இவ்விடயத்தில் இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையே எழுதப்படாத ஒரு புரிந்துணர்வு நிலவுவதாகவே கருத வேண்டியுள்ளது.

இலங்கை இந்தியக் கடல் எல்லையை அண்மித்த பகுதிகளில் சாதாரண படகுகளில் வந்து மீன்பிடிக்கும் மீனவர்கள் கொல்லப்படுகின்றனர். அவர்களின் படகுகள், உடைமைகள் சேதமாக்கப்படுகின்றன.

*(24 ஆம் பக்கம் பார்க்க)*

## ஜேர்மன், சுவிஸ், டொச் Classes

ஜேர்மனியில் இருந்து வந்த ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றது. பரீட்சைக்கான அடுத்த பிரிவு ஆரம்பம்.
இடம்: Jaffna College
Hospital Road, Jaffna. T.P. 0778245031

## O+ சிறுநீரகம் தேவை

நோயாளர் ஒருவருக்கு அவசரமாக O+ சிறுநீரகம் தேவைப்படுகின்றது. எனவே கருணையுள்ளம் படைத்த உள்ளங்களின் உதவி எதிர்பார்க்கப்படுகிறது. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P. 0776051245

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02.03.1933



உதிர்வு 12.02.2009

### அமரர் கந்தையா பரமசாமி

[ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், Upper Balangoda Tea Estate]
திதி: தேய்பிறை திருதியை

அறிவின் ஒளியுமாய் அன்பின் திருவுருவமாய்
பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
உழைப்பின் சிகரமாய்-வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே! அலைபோன்ற
உங்கள் அன்பில், வாழ வழி கற்றுத்தந்த நீங்கள்
அமைதியாய் விண்ணுலகம் சென்று விட்டீர்கள்...
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் யாவரும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(426)

107, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே: 0777809716

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

## எமது சிகிச்சைகள்

புற்று நோய் தணிப்பு
தைராய்ட் பிரச்சினைகள்
ஈரல் கோளாறுகள்,
மஞ்சள் காமாலை,
மூட்டுவலி,முதுகுவலி,
ஒற்றைத் தலைவலி,
சுவாசப்பை கோளாறுகள்,
படுக்கைபுண் - நீரிழிவுப் புண்..
நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு நீக்குதல் பக்க விளைவுகள் இல்லை. சிக்கனமான மூலிகை மருத்துவம்

## இனி இல்லை நெஞ்சு வலி




இருதய நோயாளர் எதிர்காலத்தில் நெஞ்சு வலி இன்றி சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மருந்தினால் இரத்த ஓட்டம் சீர்பெரும் வலியிலிருந்து உடல் நலம் பெருவீர்கள்.

**HOTLINE**
**0777 08310, 011 555 8442**

A BOI APPROVED & ISO 9001-2008 OMS CERTIFIED COMPANY


**FAIR PHARMA (PVT) LTD**
Level5/ East Tower, 1 C, World Trade Centre, Col - 01
Phone - +94 11 5 517 897, 5 551 879, 5 558 442
Email - fairpharmacysrilanka@yahoo.com,
Web - fairpharmasrilanka.com

இலவச மருத்துவ ஆலோசனைகள்

| பருத்தித்துறை | யாழ்பாணம் |
|---|---|
| 21.02.2011 | 22.02.2011 |
| றோயல் வ்டார் மெடிக்கல் சென்டர் செட்டி வீதி | கமலா டிஸ்பென்சரி 1207 K.K.S வீதி |

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

| 24 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு |
|---|---|---|







**முதலி சின்னத்தம்பி**
மலர்வு: 14.07.1887
உதிர்வு: 18.01.1987

கலாபூஷணம்
**சின்னத்தம்பி செல்லையா**
மலர்வு: 17.03.1923
உதிர்வு: 13.02.2009

**செல்லையா இராசமணி**
மலர்வு: 23.05.1930
உதிர்வு: 25.12.2008

திதி:- அபரபட்ஷ சதுர்த்தி (20.02.2011)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய் எம் வாழ்வின் ஒளியாய் எம் வாழ்க்கையை வளமாக்கி வசந்தத்தின் வழியில் வலம்வர வழிவகுத்த எம் அன்புத் தெய்வங்களை இன்றைய நாளில் நினைவு கூர்வதுடன் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

'துவாரகை'
கண்டி வீதி, பளை.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

# பனை தென்னைவள அபிவிருத்தி சங்க ஊழியர் கௌரவிப்பு

தென்மராட்சி, பெப்.20

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தில் 38 வருடங்களாகக் கடமையாற்றி இளைப்பாறிய மூவருக்கு சங்கப் பணியாளர் நலன்புரிச் சங்கத்தினால் சேவை நலன் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

சங்கத் தலைமை அலுவலகத்தில் முதலாம் தர எழுதுநர்களாகக் கடமையாற்றிய நா.பொன்னுத்துரை, வெ.சுப்பிரமணியம் மற்றும் கிளை முகாமையாளராகக் கடமையாற்றிய சி.கந்தசாமி ஆகியோருக்கே சேவை நலன் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

மூவருக்கும் தனித்தனியாக கவிஞர் மு.பாலசுப்பிரமணியம் இயற்றிய வாழ்த்துப் பா வழங்கப்பட்டது.

மூவருக்கும் சங்கம் சார்பில் தங்கச் சங்கிலிகளும் வழங்கப்பட்டன.

பணியாளர் நலன்புரி சங்கத் தலைவர் க.ப.லோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் த.பத்மானந்தன், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் கி.குணரத்தினம், சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.பூபாலசிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டு ஓய்வு பெற்றவர்களின் சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர்.

(ம-207)

## வெப்பநிலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.20

தற்போது வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுகிறது. திருநெல்வேலியிலுள்ள வளி மண்டலவியல் திணைக்களத்தினால் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட வெப்பநிலை வாசிப்பின் பிரகாரம் 30.6பாகை செல்ஸியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதாகப் பொறுப்பதிகாரி பி.புஸ்பநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 31.0பாகை செல்ஸியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-14)

## வீதி விபத்துக்களில் மூவர் காயம்

தென்மராட்சி, பெப்.20

வீதி விபத்துக்களில் சிக்கி மூவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கி தூக்கி வீசப்பட்டதில் மந்துவில் மேற்கைச் சேர்ந்த எஸ்.சேகர் (வயது 20), மோட்டார் சைக்கிளும்-சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மந்துவிலைச் சேர்ந்த ரவிக்குமார் (வயது-31), வீதிக் குழியில் சைக்கிள் சில்லு இறங்கியதில் நூணாவில் மேற்கைச் சேர்ந்த எஸ். அன்பழகன் (வயது 26) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ம-207)

## ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டில்...

தோற்றம் 17.09.1964



மறைவு 20.02.2009

### அமரர் இலட்சுமணபிள்ளை கிருபாகரன்

[ஆசிரியர், வட்டக்கச்சி மகாவித்தியாலயம்]

ஞாலத்தில் நம் வாழ்வு காணப் பொறுக்காதோர்
ஜாலத்தால் நாமும் பிரிக்கப்பட்டோம்
வாழ்வு பறிக்கப்பட்டோம் தனிமைப் படுத்தப்பட்டோம்
உள்ளம் சிதைந்து உருக்குலைந்து போனதையா
விதியை நொந்து நொந்து உங்கள் காலடிக்கு வருகின்ற
காலம் வரும் வரைக்கும் உங்கள் நினைவுடன்
எங்கள் விழிநீர் சுமக்கும்.....

தாவடி தெற்கு,
தாவடி.

(523)

வேதனையில் வேகும் உங்கள்
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தியோகுப்பிள்ளை சவரிமுத்து



கரம்பனைப் பிறப்பிடமாகவும் பொந்திலேன், பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை சவரிமுத்து 17.02.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி தியோகுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற டெய்சியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, மற்றும் செல்வமணி (கனடா), ஸ்ரெலா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லெற்றீசியா (ஜெயந்தி - சுவிஸ்), நெல்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கப்பன், காலஞ்சென்ற பீலிக்ஸ் மற்றும் யோசப்நாயகம், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், தியோனிஸ் மற்றும் அலோசியஸ், அன்ரன் (கனடா), ரூபி, புனிதம் ஆகியோரின் மைத்துனரும், மன்மதன் (சுவிஸ்), நிலானி(சுவிஸ்) ஆகியோரின் மாமனும் ரொறின்ரன், கறின்ரன், ஜெறின்ரன், நிஷாந்தன், ஜெனார்த்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (21.02.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொந்தி வீதி, பண்டத்தரிப்பு.

தகவல்:
மகன்:- நெல்சன் (ஜெயா).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
03.07.1955

உதிர்வு:
03.03.2010

அமரர்
முருகேசு
பாலகிருஷ்ணன்
திதி: 20.02.2011


அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத்தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நினைவில் அகலவில்லை

கரம்பான் வீதி,
வரணி.

(349)

குடும்பத்தினர்

# பனை வளத்தின் அபிவிருத்திக்கு வழி பிறக்குமா...? (5)



கற்பகதருவின் வளங்களைப் பற்றியும் சமகாலத்தில் வடபகுதியில் நடைபெறும் அபிவிருத்திக்குள் இதனையும் உள்வாங்கவேண்டியதன் தேவைபற்றியும் எடுத்துரைத்து இதன்மூலம் பனைவளத்தையே நம்பி வாழ்ந்த, வாழுகின்ற மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி எங்களூர் வளஞ்சார்ந்த பொருளாதார விருத்தியையே இதில் மையப்படுத்தப்பட்டிருக்கின்றது. பனைவளம் என்பது வடபகுதிக்கானதும் இப்பிரதேசத்தின் சிறப்புக்குரியதுமாகும். எமது அடையாளத்தின் பிரதிபலிப்பாகவும் விளங்கும். கற்பகதருவின் வளத்தை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டியது சமகாலத்தினது தேவையாகவே இருக்கின்றது. நடந்துமுடிந்த போர்ச் சூழலுக்குள் சிக்கி அழிந்த மரங்களுள் தென்னையும் பனையும் அதிகமே. இழந்த வளத்தை கட்டியெழுப்ப நிறுவன மயப்பட்ட பனை அபிவிருத்தி சபை, தென்னைப் பயிர்ச்செய்கை சபை இவற்றுடன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சமாசங்களும் முனைப்பு காட்டித் தத்தமது திட்டங்களுக்கூடாகப் பல வேலைத்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்தி வரும் அதேவேளையில் இனிவரும் நூற்றாண்டினது தேவைக்கேற்ப மேலும் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படவேண்டியது அவசியமே.

### தன்னலமற்ற சேவை செய்த தொழிலதிபர்கள்

வடபகுதியெங்கும் பனம் விதைகளை நடுகை செய்து எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வுக்காகச் சிந்தித்துச் செயலாற்றிய முன்னை நாள் 'மில்க்வைற்' தொழிலதிபர் கனகராசாவும் அவருடனிணைந்து இப்பெருமை சார் கைங்கரியத்தினுள் தன்னையும் உள்வாங்கிய 'அண்ணாகோப்பி' தொழிலதிபர் நடராசா போன்றவர்களின் பணி ஆண்டாண்டு காலமாகப் போற்றுவதற்குரியது. தொழிலதிபர்களாக இருந்து இந்த வளத்தின்பால் கொண்ட விருப்பினால் இவர்களின் இப்பணி சிறப்புற்றதோடல்லாது இட்ட விதையனைத்தும் வளர்ந்தெழும்பி வடலிகளாக உயர்ந்து நிற்கும் போது இப்பனைகளின் பின்னால் இப்பெருமகனார்களின் சமூகசேவை எம் அனைவருக்கும் முன்னுதாரணமாகக் கட்டியங்கூறி நிற்கின்றது. இவர்கள் போல இன்னும் பல சமூக சேவையாளர்களை இத்தேசம் வேண்டிநிற்கின்றது. போர் உக்கிரமாக நிகழ்ந்த இடங்களில் இம்மரங்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுப்போக ஆங்காங்கே தடுப்பரண்களுக்காகவும் தறிக்கப்பட்டு விட்டன. இழந்த பனைகளுக்காக மீளவும் பனம் விதைகளை நடவேண்டிய தேவை எழுந்துள்ளது. பயிர்ச் செய்கைக்கான வளமான நிலங்கள் தவிர்ந்த இடங்களில் திட்டமிட்ட முறையில் பனம் விதை களை நடவு செய்தல் வேண்டும். இன்னும் வடபகுதி அபிவிருத்தியில் யாழ்ப்பாணத்தில் உயர்ந்தெழும்பும் கட்டடங்களுக்காக வளமான பயிர்ச்செய்கை நிலங் கள் உருமாறும் அதேவேளை கட்டுமானப் பணிகளுக்காகப் பனைமரங்கள் மேலும் தறிக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகமே.தேவைக்கான செயற்பாடாக இருப்பினும் அதற்கு மாற்றீடாகப் பனம் விதைகளை நடவு செய்தல் இழப்பதை மீளக் கொண்டுவருவதாக அமையும்.

### பனையிலிருந்து பெறப்படும் பொருள்களின் மதிப்பேற்றஞ் செய்வதன் அவசியம்

பனையோலையும் அதிலிருந்து தனியாகப் பிரித்தெடுக்கப்படும் ஈர்க்கும் பலவிதமான பொருள்களை உருவாக்கப் பயன்படுகின்றன. குறிப்பாகப் பெட்டி,கடகம்,பாய், உறி, திருவணை, சுளகு, நீத்துப் பெட்டி, நீர் அள்ளி ஊற்றும் பட்டை, கைப்பை, தொப்பி இன்னும் பல பொருள்களைப் பனையோலை மற்றும் ஈர்க்கினைப் பயன்படுத்தி உருவாக்குகின்றனர். குடிசைக் கைத்தொழிலாக இருக்கும் இத்தொழிற்றுறையைச் சமகாலத் தேவைக்கும் விருப்புக்குமிசைவாகத் தரமுயர்த்தவேண்டும். இப்பொருள்களின் மதிப்பேற்றத்தினை மையப்படுத்திய ஆய்வுகளே இதற்கான பதிலைத் தரமுடியும். அபிவிருத்தியின் வெளிப்பாடு யாழ்ப்பாணத்தில் தெரிய ஆரம்பித்திருக்கும் இந்த நாள்களில் இங்கு சுற்றுலா வரும் தென்பகுதி மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் விரும்பி வாங்கிச் செல்லும் பொருள்களாக இவை தரமுயர்த்தப்பட வேண்டும். இதற்காக விஞ்ஞானத்தின் எந்தவிதமான தொழில்நுட்பத்தையும் இலகுவழி முறையாகத் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம். பரிசுப்பொருள்களாக, கௌரவிப்புப் பொருள்களாக இவை உலக தரத்துடன் எங்களூர் , வெளியூர் மற்றும் உலக சந்தையில் வலம் வரவேண்டும். வேறு நாடுகளிலிருந்து இவ்வாறான பொருள்கள் உலக சந்தைக்குள் வரும்போது எமது பிரதேசத்துப் பொருள்களுக்கும் நிச்சயமாக இந்த வாய்ப்பு அதிகமே.



பேராசிரியர் கு.மிகுந்தன்,
தலைவர், விவசாய உயிரியல் துறை,விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# முல்லை, மல்லிகை மலர்கள் மருத்துவத் தேவைகளுக்கும் பயன்படுபவையே

## கொடி முல்லை

**வேறுபெயர்: தளவம், முன்னை**
**தாவரவியற் பெயர்- ஜஸ்மினம் ஒரிக்குலேற்றம்** (Jasminum auriculatum)
**குடும்பம் - ஒலியேசியே** (Oleaceae)
**சமஸ்கிருதப் பெயர் - யூதிகா**

இறைவழிபாட்டுக்குரிய பூக்களிலே முல்லை, மல்லிகை என்பன மணங்கமழ் மலர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவை பெண்கள் விரும்பிச் சூடும் மலர்களாக தமிழர் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. மல்லிகை, முல்லை என்றாலே அவை கற்பைக் குறிக்கும். மௌவலும், தளவமும் கற்பும் முல்லை'' என்று சேந்தன் திவாகரம் கூறுகின்றது. பண்டைத் தமிழகத்தின் ஐவகை நிலங்களில் காடும் காடுசார்ந்த



இடத்துக்கும் பெயர் வந்துள்ளது முல்லை. முல்லையில் வெண்ணிறமுல்லை, சாதிமுல்லை, செம்முல்லை (தளவம்), காட்டுமுல்லை, ஊசி முல்லை என்று பல பேதங்களுண்டு.

முல்லைக்கொடி சற்று வைரமாகவும் எதிரடுக்கில் அமைந்த கூட்டிலைகளைக் கொண்டதாகவும் மென்மையான மணம்வீசும் மலர்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

மல்லிகை, முல்லை போன்ற மலர்களை மாலையாகக் கட்டிப் பெண்கள் கூந்தலிலோ ஆண்கள் கழுத்திலோ அணிந்து கொள்ளும்போது அவற்றிலிருந்து உண்டாகும் நறுமணம் சிரசில் உள்ள அகச்சுரப்பியைத் தூண்டுவதால் தாம்பத்திய உறவில் ஆர்வத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. 'திருமணமான பெண்கள் பூச்சூடிக் கொள் வதற்கும் கணவனை இழந்த பெண்கள் பூச்சூடக் கூடாது என்று விதித்தமைக்கு' இதுவே காரணம். தற்காலத்தில் காகிதப் பூக்களும், மணமற்ற பூக்களும் சூடுவது வெறும் சம்பிரதாயமே. மேலும் முல்லை, மல்லிகை மலர்களின் மணம் மனதிற்கு உற்சாகத்தை ஏற்படுத்தி சோர்வை நீக்குவதால் உளவியல் ரீதியாக வும் பயன்படுகிறது. முல்லைவேர்க் குடிநீரால் வயிற்றுப்பிசம், உதிரப் பிணிகள், சோகை என்பன நீங்கும்.

முல்லைப் பூவை நீர் விட்டரைத்து மார்பகத்தின் மேல் மூன்று நாள் கட்டிவர பால்சுரப்பது நிற்கும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

## மல்லிகை

**வேறுபெயர்: மௌவல், மாலதி, குளவி**
**தாவரவியற் பெயர் - ஜஸ்மினம் பியூபெசன்ஸ்** (Jasminum Pubescens)
**குடும்பம் -ஒலியேசியே** (Oleaceae)
**சிங்களப் பெயர்-சமன் பிச்ச**
**சமஸ்கிருதப் பெயர்-மல்லிகா**
**ஆங்கிலப் பெயர்-** Jasmine

மல்லிகையில் சாதாரண மல்லிகை, அடுக்கு மல்லிகை, காட்டு மல்லிகை, ஊசிமல்லிகை என்று பல பேதங்களுண்டு.

மல்லிகையும் முல்லையும் ஒரே வகுப்பைச் சார்ந்தவையாக இருந்தாலும், மல்லிகையின் இலை தனியிலையாகவும், பூ சற்றுப் பெருத்தும் தடித்தும் இருப்பதால் முல்லையிலிருந்து வேறுபடுகிறது.

இதன் இலை, பூ என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன. மல்லிகை இலையை வாயிலிட்டு மெல்ல வாய்ப்புண் மாறும்.

இலைச்சாற்றைக் காலில் ஆணிக்கூடு உள்ளவர்கள் மீது பூசிவர அதுமாறும். மல்லிகைப் பூவை அரைத்து பால்சுரக்கும் மார்பகத்தில் கட்ட பால் சுரப்பது நிற்கும்.

பூவை அரைத்து வீக்கங்களிற் பூச வீக்கம் வற்றும்.

மல்லிகை வேரையும் வசம்பையும் தேசிப் புளிச்சாறு விட்டரைத்து தோல் நோய்களுக்கும் பூச மாறும்.

## காக்கணம்

**வேறுபெயர்: சங்கு புஷ்பம், காக்கட்டான், காக்குறட்டை, கறுத்தப் பூக்கொடி**
**தாவரவியற் பெயர் -**
**கிளிற்றோரியா ரேனேற்றா** (Clitoria ternatea)
**குடும்பம் - பப்பிலியோனேசியே** (Papilionaceae)
**சிங்களப் பெயர்-கதரோடு**
**சமஸ்கிருதப் பெயர் - சங்க புஷ்பி**
**ஆங்கிலப் பெயர்-** Butterfly Pea

இறைவழிபாட்டுக்குரிய பூக்களிலே கருங்காக் கொன்றை, வெண்காக்கொன்றை என இருவகைப் பூக்கள் பற்றி புஷ்பவிதியில் கூறப்படுள்ளன. இவை முறையே கருங்காக்கணம், வெண்காக்கணம் என்பவற்றைக் குறிக்கும். மேலும் இவை சங்க இலக்கிய நூல்களில் முறையே கருவிளை, செருவிளை என்று குறிப்பிடப்பட்டிருத்தலும் நோக்கற்குரியது.

காக்கணம், கொடி வகுப்புக்குரியது. கூட்டிலைகள் 3-9 சிற்றிலைகள் வரை காணப்படும். பூக்களின் நிறத்தைக் கொண்டே வெள்ளை, கருமை இனங்களாகப் பிரிக்கப்படுகிறன. நீலநிறப் பூக்களையுடையது கருங்காக்கணம் என்படுகிறது. பூக்கள் சங்கு வடிவை ஒத்திருப்பதால் சங்குபுஷ்பம் என்று அழைக்கப்படுகிறது. காய்கள் நீண்டு தட்டையாக அவரைக்காய் போல இருக்கும். இதன் இலை, வேர் என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

இலையை நீர்விட்டரைத்துக் கைக்குழந்தைகளுக்கு தலையிற்பூசி முழுகவார்த்துவர கிரந்திநோய் வராது. தலையவியல், மண்டைக்கரப்பன், பொடுகு முதலியனவும் நீங்கும்.

இலையைச் சிறிது உப்புச் சேர்த்தரைத்துக் கட்டி, வீக்கங்களுக்குப் பூச வீக்கம் வற்றும், கட்டியுடையும். வேரைப் பாலில் அவித்தெடுத்துப் பொடி செய்து 250-500 மில்லிகிராம் அளவில் தேனுடன் காலை, மாலை கொடுக்க வாந்தி, ஓங்காளம், மந்தம், மலச்சிக்கல் என்பன நீங்கும்.



(வளரும்...)

Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

# BRING YOUR EDUCATIONAL DOCUMENTS FOR SPOT ADM




## கடந்தவருடம் விசா கிடைத்து பயணமான யாழ் மாணவர்களில் சி



EXPONET
Overseas Consultants
(Group of Exponet (Pvt) Ltd.)

**Head Office** : 379 - 1/2, Galle Road, Colombo 06.
**Jaffna Branch** 102 - 2/2, Navalar Road, Jaffna.
**London Branch** 56, The Gradens Harrow Middlessex, HA1 4EY, UK.
**Web: www.expogroup.lk | Email: nimal@expogroup.lk**

DMISSION



சிலர்



# IELTS இன்றி

# STUDY IN UK

## Spot Admission!

### இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

Westminster Academy - London (Tier 4 Highly Trusted) இருந்து வருகை தரவிருக்கும் Director மற்றும் Miss.Kamila Katarzya வுடன் நேரடியாக கலந்துரையாடி உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளையும் உடனடி அனுமதிகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**Jaffna**

| | |
|---|---|
| காலம் | **26th February 2011: 10.30 a.m. - 3.00 p.m.** |
| வழங்குபவர் | Miss.Kamila Katarzya |
| இடம் | **Hotel Green Grass**<br>No:33 Asirvatham Lane,Hospital Road,Jaffna |

**Colombo**

| | |
|---|---|
| காலம் | **27th February 2011: 11.00 a.m. - 3.00 p.m.** |
| வழங்குபவர் | Miss.Kamila Katarzya |
| இடம் | **Hotel Sapphire-Blue Sapphire**<br>No-371,Galle Road,Colombo-06 |

| | |
|---|---|
| பதிவுகளுக்கு | **Colombo - 011 7 555511, Jaffna - 021 7538395**<br>**Hotline - 0117 555514, Fax - 0117 555517** |


விசா நடை முறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.*

**எமது சேவை முற்றிலும் இலவசமானது**

* Condition Apply

**உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்**

## சொற்சிலம்பம் - போட்டி இல: 151



அனுப்புபவர் பெயர்:.....................................................

விலாசம்:.....................................................

.....................................................

கையொப்பம்:.....................................................

### இடமிருந்து வலம்

1. தமிழை அணி செய்த ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
5. எந்நேரமும்
7.கடைசிப்பிள்ளை.
9.சமயம்.
11.கட்டை/சொறி, சிரங்களையும் இப்படிக் கூறுவர்.
12.விளக்கில் எரியும் பகுதி.
13.சொண்டு.
15.நளபாகம்.
16.கூட்டல்குறி.
17.அதிக பாரமான.
18.இலாபம்.
19.தொடர்பு.
22.தில்லை.

### மேலிருந்து கீழ்

1.வரவேண்டியது.
2.வேள்வி.
3.சேனை.
4.பேச்சுத் தடக்குதல்.
5.உடை.
6.நாடியில், கன்னத்தில் வளர்வது.
8.தலையில் கையால் போடுவது.
10.காட்சிக்குத் தெரிதல்/தோன்றுதல்.
14. இயற்கை அனர்த்தம்
16.கழித்தல் குறி.
17.ஒரு சுவாச நோய்.
18.இப்படி நட
20.இது வந்திடப் பத்தும் பறந்திடும்.
21.மறைவில் அடிப்பது/ தங்களது

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 149 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)சீவகசிந்தாமணி. (7)மன்னன் (8) கண். (9) கானகம் (12) தலம். (13)ஆடை. (14)பரப்புரை. (17) நிரம்பல். (19)ஆழம் (20) வாளி . (21)வில். (22)பதினொன்று.

### மேலிருந்து கீழ்

(1)சீமந்தம். (2)வன். (3)கனகாம்பரம். (4)சின்ன. (5)தாகம்.(6)மண் (10)கர்ப்பவதி.(11)விடை. (13)ஆரை. (15)ரம். (16)புல். (17)நிழல் (18)களிறு. (19)ஆவி. (20)வான்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 149 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** தீபிகா சிவலிங்கம்,
இல.577, 6 ஆம் யூனிற், இராமநாதபுரம், கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு** திருமதி க.கருணேஸ்வரி,
புல்லாந்தி வைரவர் கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு** ஆர்.ராஜசந்திரன்,
இல.26, கண்ணபுரம் நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** யோ.ஆன்டினுஜா,
புனித செபஸ்தியார் வீதி, சில்லாலை.

**5 ஆம் பரிசு** ஏ.எஸ்.அகஸ்ரின்,
இல.7 நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) ஞா.டிலான்,
இல.18,ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு.

(2) சிவரம்பா சிவநாதன்,
24/4,1/1 பிரான்சிஸ் வீதி,
வெள்ளவத்தை.

(3) க.கிஷோதரன்,
புதவராயர் வீதி, பருத்தித்துறை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப் பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட் டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங் களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 151**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 02.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.151 இல் வெற்றி பெறுவோர் களது விவரம் 06.03.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# மழை....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. இவள் நெஞ்சும் குமுறிக் கொண்டது. நினைவுகள் ஆள் மீண்டும் மேலெழ அவளுக்கு அழுகை வந்தது.

''நாளை பகல் இடியுடன் கூடிய மழை வன்னி நிலப்பரப்பைத் தாக்கக் கூடும்!'' கரகரத்த ஒலியிலும் ரேடியோவில் இருந்து வந்த செய்தி அவளுக்கொரு எச்சரிக்கையாகவே இருந்தது.

இந்தச் செய்தியால் மாலாவின் மனம் உருக் குலைந்து போனது. மழை என்றால் பயப்படும் ஒரு சூழல் உருவாகியிருந்தது.

முன்பெல்லாம் மழை என்றால் நல்ல விருப்பம். மழையில் நனையலாம். மழை வந்தால் குண்டும் குழியுமான ஒழுங்கை வீதி எங்கும் வெள்ளம். அதைப் பார்த்தால் அதில் இறங்கித் துள்ளிக்குதித்து ஆடுவோம்! அந்த வெள்ளநீரை அள்ளி ஒருவருக்கொருவர் எறிந்து மகிழ்வோம்! மழை வெள்ளத்தில் விளையாடினால், நீர்ச்சிரங்கு ஒன்றைத் தவிர வேறெந்தத் தீங்கும் எங்களுக்கு வந்ததில்லை! அப்பிடி மழை என்றால் நல்ல விருப்பம்! அதில் நனைந்து ஓடித் திரிவதென்றால் கொள்ளை விருப்பம்! கடதாசியில் கப்பல் செய்து அதில் ஓட விடுவோம்! மழை வெள்ளம் நிற்கும் சில இடங்களில் காகங்கள் குளிக்கும். அதை நாங்கள் இரசித்துப் பார்ப்போம். அதில் இறங்கி உடல் முழுவதையும் நனைத்துவிட்டு பறந்து போய் மரங்களில் இருந்து சிறகுகளை உதறும் போது சிறகுகளுக்குள் ஒளிந்திருந்த மழை வெள்ள நீர்த்துளிகள், சிறு சிறு துமிகளாய் விசிறப்படும். மனிதரும் ஒரு சிலர் இப்படிக் குளியல் குளிப்பர். கிணத்தடியில் இப்படிக் குளிக்கும், குளிப்பைத்தான் 'காகக் குளிப்புக் குளிக்கிறான்' என்று இன்றும் சொல்லக் கேட்கிறோம். அது மட்டுமே! ''மழையே மழையே மெத்தப் பெய்! மண்ணில் வெள்ளம் நிறையப் பெய்! பாடசாலை முடிகிற நேரம் மழை வந்தால், மழை போ! வெயில் வா! மழை போ! வெயில் வா!'' என்று பாட்டெல்லாம் பாடியிருக்கிறோம்.'' இப்படியாக அந்தக் கால மழை பற்றிய ஞாபகங்கள் மாலாவின் நினைவுகளுக்குள் நுழைந்து ஓடிச் சென்றன. அவை என்றும் பசுமையான நினைவுகள்.

ஆனால் இப்ப மழை என்றால் எல்லாரும் பயப் படுகிறார்கள். செல் குண்டுகள், விமானக் குண்டுகள், கடல் பீரங்கி வெடிகள் என்று இப்படி எல்லாவற்றுக்கும் பயந்து பழக்கப்பட்ட சனங்கள் இப்ப மழையென்றால் நல்லாகவே பயப்படுகிறார்கள். மழை வந்தால் வெள்ளம் வரும்! வெள்ளம் வந்தால் பாம்பு வரும்! கரும் தேள் வரும்! அவையும் மழை வெள்ளத்தில் மிதந்து வருகின்றன. அவை வீடுகளுக்குள் புகுந்து பதுங்குகின்றன.

ஷெல்பட்டுச் செத்தான்! வெடிபட்டுச் சிதறிச் செத்தான். இப்ப பாம்பு கொத்தி, தேள் கடித்து விசம் ஏறியும் சாகிறான். இவற்றினை நினைத்துப் பார்த்தவளின், உள்ளம் பதட்டம் அடைந்தது. இப்ப மழை வந்தாலும் சாவு வரும் என்று எல்லோரும் பயப்படுகின்றனர்.

அரிசி பொங்கி வழிகிறது. கொழ... கொழ... என்ற சத்தம் மாலாவின் ஊஞ்சல் நினைவுகளைத் தடுத்து நிறுத்தின. கஞ்சி வடித்தாள். சோற்றவிழ் விழ கஞ்சி வடித்தாள். வடித்து முடிந்ததும், அந்தச் சிறு பானையை ஒரு குலுக்குக் குலுக்கினாள். நீர் நீங்கிய வெந்த சோறு, அசைந்து கொண்டது. சோற்றுப் பருக்கைகள் ஈச்சங்காய் கொட்டைகள் போல் அழகாய் தெரிந்தன. உலை மூடியால் சோற்றுப் பானையை மூடிக் கொண்டாள்.

அன்றிரவு நல்ல மழை, பலத்த காற்றும் வீசியது. மழை வெள்ளம் வீட்டுக்குள் வருமளவுக்கு இருந்தது. பிள்ளைகள் நித்திரை. மாலா முழிப்பிருந்தாள். பாம்பும், தேளும் வரும் என்ற பயம் அவளுக்கு. வேறு ஜந்துகளும் வரலாம்.

குந்தி இருந்து, நித்திரை முழிப்பிருந்தாள். தூக்கம் வர, கழுத்துச் சரிந்து விழுந்தது. திடுக்குற்று திடுக்குற்று நிமிர்ந்து இருந்தாள்.

மழை பெய்து ஓய்ந்திருந்தது. நித்திரை கண்ணை உருட்டிக் கொண்டு வந்தது. ஒருவித பயத்துடன் படுத்துக் கொண்டாள். போர்வை எடுத்துப் போர்த்துக் கொண்டாள். நித்திரை வந்தது. தூங்கி விட்டாள். மாமி இந்த நேரத்திலும் பாய் இழைச்சுக் கொண்டிருந்தாள்.

டொக்... டொக்... என்று மழைத்துளிகள் வீட்டுக் கூரையில் விழுந்து கொண்டிருந்தன. வீட்டு அருகோரமாக நின்ற அந்த பூவரசு மரம் நனைந்திருந்தது. இலைகளில் தேங்கி நின்ற மழை நீர் வடிந்து, ஒன்று சேர்ந்து குமிழ்களாக வந்து விழுந்தன.

காலை ஆறு மணி. மாலா கண்களைக் கசக்கி கொண்டு எழுந்தாள். ''இண்டைக்கு விறகுகள் எடுத்துக் கொட்டிலுக்கை போட வேண்டும். பார்வதி ஆச்சிக்கு அரிசி குடுக்க வேண்டும்.' என்ற நினைவுகள் அவளை ஆக்கிரமித்தன.

இளையவளுக்கு முதுகில் கும்மினதையும் நினைத்தாள். மனம் துவண்டு கொண்டது. அவளைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டாள். ஒரு அருட்டுதல் அருட்டி விட்டு, மற்றப் பக்கம் திரும்பிப் படுத்தாள் சின்னவள்.

மாலா, விறகு எடுக்கவென்று பின் வளவுக்குள் இறங்கி நடந்தாள். விறு விறு என்று நடந்தாள். அடுத்த மழையும் வந்து விடும் போலிருந்தது. மேகம் இருட்டாகி இருந்தது.

பின் காணிக்கான ஒற்றையடிப் பாதை வழி நடந்தாள். வெள்ளத்தில் மிதந்து வரும் பாம்புகளும், கரும் தேள்களும் அவள் நினைவுகளில் ஓடி பயம் செய்தன. அவதானமாக நடந்து போனாள்.

பனம் மட்டைகள், காவோலைகள், கொக்கறைகள், தென்னம் மட்டைகள், காய்ந்த தென்னம் பாளைகள் எல்லாம் விழுந்து கிடந்தன. அவை போராட்டத்தில் விழுந்த போர் வீரர்கள் போல் காட்சி கொடுத்தன.

அள்ளி எடுத்து வந்து கொட்டிலுக்குள் சேர்த்தாள். அவை மலைபோல் குவிந்திருந்தன. முருங்கைமரம் முறிந்து விழுந்து கிடந்தது. கத்தியால் கிளைகளை வெட்டினாள். ஆங்காங்கே காய்களும் இருந்தன. அதையும் ஒடித்து எடுத்துக் கொண்டாள். வெட்டிய முருங்கை மரத் தண்டு களைத் தூக்கி ஓரமாகக் கொண்டு சென்றாள். வேலைக்குப் போகும் அவசரத்தில் பதற்றத்துடன் செயற்பட்டாள். கிளைகளை ஒன்று சேர்த்து அணைத்துக் காணியின் வேலியோரமாகக் கொண்டு சென்றாள்.

'டமார்' என்ற பெரியதொரு வெடிச்சத்தம். 'ஐயோ...! அம்மா...! என்று குரல் கொடுத்து அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்து விட்டாள் மாலா. அவள் குரல் அனுங்கலாக ஒலம் செய்தது. ஈரமான நிலம் சிவப்பு நிறமாக மாறியிருந்தது.

''இப்ப, வெள்ளத்தில் மிதிவெடியும் மிதந்து வருகுதாம் பொடிச்சியள்! கவனமாய் கால் வைச்சு நடவுங்க பொடிச்சியள்...!'' என்று சொல்லிக் கொண்டு பதகளித்தபடி ஓடி வருகிறாள், பக்கத்து வீட்டுப் பார்வதி ஆச்சி. ✱

# மருத்துவத்துறையில் நோயாளர் உரிமைகள்

**நோயாளர்களின் அடிப்படை உரிமைகள் சில மறுக்கப்படுவது ஏன்?**

ஒரு தனிமனிதனின் மனித உரிமைகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் மதிக்கப்பட வேண்டும். அது மீறப்படுவது ஒரு சமுதாய வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக அமையாது. ஒருவன் நோய்வாய்ப்பட்டு விட்டான் என்பதற்காக அவனுக்கு இருக்கும் அடிப்படை உரிமைகளை பொதுவாக யாரும் மறுத்துவிட முடியாது.

ஆனால் ஒரு நோயாளியினால் பிறருக்குத் தீங்கு ஏற்படும் அபாயம் இருந்தால் அவரின் நடவடிக்கைகள் சிலவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. உதாரணமாக கட்டுப்பாடற்ற வலிப்பு நோய் உள்ள ஒருவரினுடைய வாகனங்கள் செலுத்தும் உரிமையை மறுக்க வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. இது பாரதூரமான வாகன விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையே. அதேபோல் சிலவகையான தொற்றுநோய்கள் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால் அவர் சம்மதம் தராதவிடத்தும் அது சம்பந்தமான தகவல்களை சில சுகாதார உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து நோய்ப் பரம்பலை கட்டுப்படுத்த வேண்டிய ஒரு கட்டாய நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக நோயாளிக்கும் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

வைத்தியசாலையில் நோயாளி ஒருவரின் நடவடிக்கை சக நோயாளர்களுக்கு இடையூறாக இருப்பின் அவரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்படும்.

நோயாளி ஒருவரின் மனநிலை சரியான தீர்மானங்கள் எடுக்கக் கூடிய நிலையில் இல்லை என்று மருத்துவக் குழு கருதுமிடத்து அவருடைய விருப்பத்துக்கு மாறாகவும் சில மருத்துவ முறைகளையும் மருத்துவத்தையும் செய்யும் உரிமை மருத்துவக்குழுவுக்கு இருக்கிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மருத்துவக் குழுவானது நோயாளியின் குடும்ப அங்கத்தவர்களுடன் உரையாடி அவர்களின் சம்மதத்துடனேயே மருத்துவ முறைகளைத் தெரிவு செய்யும்.

நோயாளர்களின் உரிமைகளை மதித்து நடப்பது மருத்துவக் குழுவின் கடமையாகும். அதேபோல் நோயாளர்களுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் சில முக்கியமான கடமைகள் இருக்கின்றன. அவையாவன:

1. சகநோயாளர்களை மதித்து நடத்தலும் அவர்களுக்கு இடையூறு செய்யாது இருத்தலும்.

2.வைத்தியசாலையை அசுத்தம் செய்யாது தூய்மையாகப் பாதுகாத்தல்.

3.தமது நோய் நிலை பற்றிய போதிய விளக்கம் ஏற்படாதவிடத்து மருத்துவக் குழுவுடன் நேரடியாக நீங்கள் பேசி நிலைமையை தெளிவுபடுத்திக் கொள்ளுதல், மூன்றாம் நபரினூடாக உங்கள் சுகம் பற்றி அறிய முயற்சிப்பது நல்லதல்ல.

4.மருத்துவத்துறையின் மேம்பாட்டிற்கு உங்கள் பங்களிப்புக்களை வழங்குதல்.

5. உங்கள் உடற்சுகத்தில் கவனமெடுத்து நீங்கள் நோயாளியாவதைத் தவிர்ப்பதன் மூலம் சுகாதாரத்துறைக்கு ஏற்படும் வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ளல்.

6.இன்னொரு நோயாளியின் சுகம் பற்றி மருத்துவக் குழுவிடம் வினவுவதைத் தவிர்த்தல். காரணம் ஒவ்வொரு நோயாளியின் நோய்நிலை சம்பந்தமான தகவல்கள், அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட வேண்டும். இந்த நோயாளியின் நேரடியான அனுமதி இல்லாமல் அந்தத் தகவல்களை வெளிப்படுத்தும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை.

7.வைத்தியசாலையின் சட்ட விதிகளை மதித்து நடத்தல்.

*சி.சிவன்சுதன்,*
*வைத்திய நிபுணர்,*
*யாழ்.போதனா வைத்தியசாலை*

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# வைத்தியசாலையில் தொற்றும் நோய்த்தொற்றுக்களைத் தடுத்தல்

வைத்தியசாலையில் பல்வேறு வகையான நோயுடைய நோயாளிகள் இருப்பதனால் பல தொற்றுநோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும். எனவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் தங்களைத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

**தொற்று நோய்களிலிருந்து நாம் பாதுகாப்பு பெறுவது எப்படி?**

1.வைத்தியசாலையில் தங்கியிருக்கும் நாள்களை இயன்றவரை குறைத்துக் கொள்ளவேண்டும்.

2.தொற்று நோயுடைய வேறு நோயாளிகளுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக சுவாசத் தொற்றுடைய நோயாளிகளை (TB)

3.கைகளைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் சரியான முறையில் கழுவிக் கொள்ள வேண்டும்.

- சாப்பாட்டுக்கு முன்
- மருந்து வில்லைகளை உட்கொள்ள முன்னர்
- மலங்கழித்த பின்னர்
- வேறு நோயாளிகளை கையாண்ட பின்னர்

ஏனெனில், எமது கைகளின் மூலமாக ஏராளமான நுண்ணங்கிகள் ஒருவரில் இருந்து இன்னொருவருக்கோ அல்லது வேறு ஒருவரிடமிருந்து எமக்கோ தொற்ற முடியும்.

கைகளைக் கழுவும் போது எமது புறங்கைகளுக்கும் விரல் மற்றும் நக இடுக்குகளுக்கும் சவற்காரமிட்டுக் கழுவிக் கொள்ளவேண்டும்.

4. வைத்தியசாலையில் எமது விடுதியில் உள்ள மலசலகூடங்களைச் சுத்தமாக பேணுவதற்கு ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

5.நோயாளிகளான எம்மிலிருந்து நோய் பரவக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன என்பதை மனதில் கொண்டு, இன்னொருவர் நோய்த்தாக்கத்துக்கு உட்படுவதைத் தவிர்த்துக் கொள்வதும் எமது கடமையாகும்.

நாம் தும்மும் போதோ அல்லது இருமும் போதோ கைக்குட்டைகளைத் தடுப்பாகப் பாவிக்கலாம்.

நுளம்புகள் மூலம் பரவும் நோயுள்ளபோது நாம் நுளம்புக்கடியிலிருந்து பாதுகாப்புப் பெறுதல் வேண்டும். இதனால் இன்னுமொருவர் நோயைப் பெறுவதைத் தடுத்துக் கொள்ளலாம்.

*வைத்தியர்கள் பரிசோதனை செய்யும்போது எமது முகத்தை எதிர்ப்புறம் திருப்பி வைத்தியர்கள் நோய்த் தொற்றடைவதைத் தடுக்கலாம்.

இதனால் வைத்தியர்கள் நோய்களைப் பெறுவது தடுக்கப்படுவதால் வைத்தியசாலைப் பணிகளும் இடையறாது நடைபெறும்.

*இன்னுமொரு நோய் எமக்குத் தொற்றலடையக் கூடாது என்பதில் நாம் எவ்வளவு கவனமாக இருக்கிறோமோ அதேபோல் மற்றவர்களும் எமக்குள்ள நோயினால் பாதிப்பு அடைவதைத் தடுக்கும் மனநிலையை எம்முள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

*இவற்றால் நாங்களும் எமது சமுதாயமும் சுகாதாரமான ஆரோக்கியமானதாகவும் மாறலாம் என்பதில் ஐயமில்லை.

மருத்துவ மாணவர்கள் (28 ஆவது பிரிவு)
**எஸ்.ரகுராமன், பி.கலாவேந்தா, வி.செந்தூரன்**

**வைத்திய மலர் 7 இல் 'ஒற்றைத் தலைவலி' என்னும் தலைப்பில் வெளியான ஆக்கம் யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு நிலையத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டதல்ல.**

# பீடைநாசினிகளும் மரக்கறிகளும்

மனிதவாழ்க்கை அமைதியாகவும் சந்தோசம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டுமாயின் நோயற்ற வாழ்க்கை அவசியமாகும். வாழ்வதற்குப் பல்வேறு காரணிகள் முக்கியமானவையாகக் காணப்படினும் ஆரோக்கியமான நிறைவான உணவும் சுத்தமான நீரும் நோயின்றி நீண்டகாலம் உயிர் வாழ இன்றியமையாதவை எனலாம். எவ்வளவுதான் உணவுப்பழக்க வழங்கங்களில் அக்கறை கொண்டிருந்தாலும், நியம முறைப்படி நிறைஉணவுக் கூறுகளைத் தேர்ந்தெடுத்தாலும் கிருமிநாசினித் தாக்கமற்ற காய்கறிகளைத் தற்காலத்தில் பெறமுடிவதில்லை. அதிகரித்துவரும் பீடைநாசினிப் பாவனையால் தாக்கம் விளைவிக்காத காய்கறி, இலைக்கறி வகைகளைப் பெறல் அரிதே எனலாம்.

அதிகரித்துவரும் பீடைத் தாக்கங்களைக் கட்டுப்படுத்த உற்பத்தியாளர்கள் பீடைநாசினிகளைப் பாவிக்க வேண்டிய தேவை உள்ளவர்களாக இருந்தாலும் நுகர்வோர் நலனையும் கருத்திற் கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது. பீடைநாசினிகள் செறிந்த மரக்கறி வகைகளை நீண்ட காலத்திற்கு உண்ணும் போது உடலில் ஆபத்தான நோய்கள் ஏற்படும் சாத்தியம் அதிகரித்துச் செல்கிறது. உடலின் பல்வேறு உறுப்புக்களில் ஏற்படும் புற்றுநோய்க்கு உணவினூடாக வந்த பீடைநாசினிகளும் ஒரு காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு கீழ்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

*கிருமிநாசினி விசிறிய பின்னர் இயன்றளவு அதிகரித்த கால இடைவெளியின் பின்னர் சந்தைப்படுத்துதல், கிருமிநாசினி விசிறி மறுதினத்தில் அதிகமான மரக்கறிகள் சந்தைப்படுத்தல் ஆகியன இடம்பெறுகின்றன.ஆனால் பீடைநாசினி விசிறி 14 நாள்களின் பின்னரே பீடை நாசினி நஞ்சு பிரிந்தழிகின்றது என்பதனை யாவரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

*அதிகரித்த அளவில் தேவையின்றிப் பீடைநாசினிகள் தெளிப்பதைத் தவிர்த்தல். பீடைநாசினி கொள்கலனில் உள்ள அளவினைவிட அதிகரித்த அளவில் பாவித்தால் வினைத்திறன் அதிகம் என்ற போலியான நம்பிக்கை உள்ளது. எனவே விவசாய வள நிலையங்களின் ஆலோசனையைப் பெற்ற பின்னர் பீடைநாசினிகளைப் பாவித்தல் நன்று.

*இரு வேறுபட்ட வகைக் கிருமிநாசினிகளை ஒன்றாகக் கலந்து விசுறுவதைத் தவிர்த்தல். இவ்வாறு கலக்கும்போது இலகுவில் பிரிந்தழியாத கலவையாக மாறி அதிக தீங்கு விளைவிக்கின்றது.

*பூச்சி, பீடைத்தாக்கம் அதிகம் இல்லாத மரக்கறிகளுக்கும் பீடைநாசினி தெளிப்பதைத் தவிர்த்தல். உதாரணமாக வல்லாரை, கரட், பீற்றூட் போன்றன நுகர்வோர் காய்கறி வகைகளைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

*எந்தவொரு மரக்கறிகளையோ இலைவகைகளையோ சுத்தமான நீரில் நன்கு கழுவிய பின்னரே பயன்படுத்துதல் வேண்டும். குறிப்பாகச் சமைக்காது உள்ளெடுக்கும் மரக்கறிகளைக் கழுவுவதில் அதீத கவனமெடுக்க வேண்டும்.

*மரக்கறிகளைக் கூடிய அளவில் திறந்து அவிப்பதன் மூலம் குறிப்பிட்ட அளவு நச்சுதன்மை குறைவடைகின்றது.

*மரக்கறிகள் வாங்கியவுடன் சமைப்பதைத் தவிர்த்தல். ஏனெனில் முதல் நாள் பீடைநாசினி விசிறப்பட்டிருப்பின் மறுநாள் சமைப்பதை விட சில நாள்கள் கழித்து சமைக்கும் போது அதன் தாக்கம் குறைவாக இருக்கும்.

*பீடை நாசினிகள் பாவனை அற்ற மரக்கறிவகைகளைப் பாவித்தல்

உதாரணமாக:-கடலைவகை, கௌபி, சிறகவரை, பூசணிக்காய், நீற்றுக்காய், வாழைக்காய், மரவள்ளிக் கிழங்கு, வற்றாளங்கிழங்கு, கருணைக்கிழங்கு, பனங்கிழங்கு, கரட், பீட்றூட் போன்றன.

*நஞ்சு கொண்ட மரக்கறிகளை உண்ணுவதற்கு மாற்றீடாக ஒவ்வொருவரும் தங்களுக்கென வீட்டுத்தோட்டம் அமைத்தல்.

*உற்பத்தியாளர் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரும் மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திற் கொள்வதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயம் உருவாக வழி செய்யலாம்.

**டாக்டர் ஆர்.பரமேஸ்வரன்,**
**நீரிழிவு நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை.**

### இயந்திரங்கள் விற்பனைக்கு

- ஜெனரேட்டர் Ruston (England) 1500RPm, Rated Load 11.5, Skw A/c.
- Ruston (எஞ்சின்மட்டும்)
- Yanmar- 6HP, 2000RPM (Japan)

0774686429 K.K.S. Road, Inuvil
(இணுவில் மத்தியகல்லூரி ஆரம்பப் பிரிவு முன்பாக)


## பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.20

ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட மடிக்கணினியைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் பயிற்சிக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

மடிக் கணினிகளுடன் அனைவரையும் வருகை தருமாறு யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ம-313)


### மின்சார வேலையாள் தேவை

வயது-25-45
தகைமை: O/L சித்திபெற்றிருத்தல் வேண்டும்
வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்
தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். (தேவைப்படின்)
தொடர்பு முகவரி:
அதிதீரன் மின்சார தொழில்நுட்ப நிலையம்
இணுவில் வீதி, மானிப்பாய்.
Hot Line No: 0777179911


### கண்ணீர்க் காணிக்கை



அமரர் தம்பு தியாகராஜா
(முன்னாள் அதிபர், யா/ நாவற்குழி ம.வி.)
17.02.2011 இல் அமரத்துவம் அடைந்த எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் தம்பு தியாகராஜா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துகின்றோம். ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பா.அ.சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/நாவற்குழி ம.வி.

(554)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.


# உடனடி பயணம்



# சவூதி அரேபிய ராஜ்யத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

Cosy Hotel & Restaurant, No 15, Sirambiady Lane, Off Stanley Road, Jaffna.
என்ற முகவரியில் 2011 பெப்ரவரி 21, 22, 23 திகதிகளில்

## WALK-IN-INTERVIEWS

| பதவிகள் | தேவையான எண்ணிக்கை | சம்பளம் (சவூதி சியால்) | கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| பொறியியலாளர்கள (சிவில், இயந்திரவியல், மின்சாரவியல்) ENGINEERS - Civil / Mechanical / Electrical | 25 | பேசி தீர்மானிக்கலாம் | இலவசம் |
| கட்டுமான பணியாளர்கள் - MASONS | 100 | 1,000 | 60,000 |
| தச்சு பணியாளர்கள் - CARPENTERS | 115 | 1,000 | 60,000 |
| குழாய் பணியாளர்கள் - PLUMBERS | 120 | 1,000 | 60,000 |
| மின்சாரவியல் பணியாளர்கள் ELECTRICIANS | 100 | 1,000 | 60,000 |
| மோட்டார் வாகன திருத்துநர்கள் MOTOR MECHANICS | 50 | 1,200 | 60,000 |
| டீசல் வாகன திருத்துநர்கள் DIESEL MECHANICS | 50 | 1,500 | 60,000 |
| கூலியாட்கள் - LABOURERS | 300 | 600 | 36,456+டிக்கட் |
| உலோக ஒட்டுநர்கள் - WELDERS | 40 | 1,200 | 60,000 |
| தீந்தை பூசுவோா - PAINTERS | 90 | 1,000 | 60,000 |
| கனரக வாகன சாரதிகள் HEAVY VEHICLE DRIVERS | 100 | 900+Trip Allowance | 60,000 |
| குளிரூட்டி தொழில்நுட்பவியலாளர்கள் A/C TECHNICIANS | 45 | 1,000 | 60,000 |
| உருக்கு பொருத்துநர்கள் - STEEL FIXERS | 50 | 1,000 | 60,000 |

1 சவூதி ரியால் = 31 ரூபா    * Government Approved Charges Only

இலவசம் ✓ உணவு ✓ தங்குமிடம் ✓ இருவழி பயண சீட்டு ✓ காப்புறுதி ✓ மருத்துவ செலவு ✓ மேலதிகநேர கொடுப்பனவு

## DINESH MANPOWER AGENCIES (PVT) LTD.

No. 10, Masjid Road, Kirulapone, Colombo 06, Sri Lanka.
Tel: 0117388791 / 0117388792 / 0113181409 /0113181471
Mobile : 0777-760122, 0777-906716.
E-mail : info@dineshgroup.lk. Website : www.dineshgroup.lk
HOTLINE : 078 566 8565

AL/583/ADV/01/11

எங்கள் கம்பனி இலங்கை வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டது. எமக்கு வேறு கிளைகள் எதுவும் இல்லை.



### தவறிவிட்டது

வட்டுக்கோட்டை, வட்டு தெற்கு இரத்தினம் சுரேஸ் என்பவரின் 861464415V தேசிய அடையாள அட்டை 17.02.2011 மாலை 6.00 மணியளவில் சங்கானையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசிக்கு தொடர்புகொள்ளவும்.
:- 0778488057 :- 0778956957

### தேவை

மின்சார விற்பனை நிலையத்தில் பணி புரிவதற்கு ஆள்கள் தேவை. (ஆண் / பெண்)
பலாலி றோட், கோண்டாவில்.
தொ.இல.0750398933

### விற்பனைக்கு

மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்குப் பொருள்களைக் கொண்டு செல்லும் தூக்கு (Lifte) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777568685

### வாகனம் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள NISSAN ATLAS CREW CAB A/C, P/S, வெள்ளை நிறம்.
தொடர்பு: 0774242327, 0718565479

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 205-XXXX எனும் இலக்கமுடைய முச்சக்கரவண்டி விற்பனைக்குண்டு.
(இன்று 2 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்)
தொடர்பு: பிரசன்னா 0772151987

### வீடு விற்பனைக்கு

உயரப்புலம், ஆனைக்கோட்டை பிடாரி கோயில் பின்வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776090926

### தேங்காய் விற்பனை

தேங்காய் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாக விற்பனைக்குண்டு.
விலை 30/= விலிருந்து
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி,
0773001763

### WANTED

PHARMACEUTICALS IMPORTING COMPANY Looking for,
1. Distributor for Jaffna.
2. Medical & Sales Representatives
Apex Pharmaceuticals (pvt) Ltd.
No.11, Gnanathilaka Rd, Mountlavinia.
0777906430/0773544840

### விற்பனைக்கு

பாவித்த ரெலிபோன் Booth, LG21 "TV, LG32" LCD TV, Damro washing Machine, Panasonic Home theator 1000w, i phone 4, Counter table - wood.
Electric Motor bike. உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774361589

### காணி விற்பனைக்கு

837/1, கே.கே.எஸ். வீதியில் உள்ள ஒன்றரைப் பரப்பும் ஒரு குழியும் உள்ள காணி விற்பனைக்குண்டு. பெரிய வீட்டுக்கான சகல அத்திபாரமும் மிகப் பெரிய அளவிலான நீர்த்தாங்கியும் கட்டப்பட்டுள்ளது.
விவரத்துக்கு: 0774942379,
தொடர்புகொள்ளவும்.

### விற்பனைக்கு

கலர்மீன்கள், தொட்டிகள், அழகு சாதனப் பொருள்கள், குருவிகள், பூங்கன்றுகள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
யாழ். அக்கூரியம், குட்டி அண்ணா,
0759910060

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 புறொயிலர் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும். அத்துடன் சிறந்த Gold Win கோழித் தீவனங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
மகமாயி ஸ்ரோர்ஸ்
866, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
சிற்றி பாம் ரேடர்ஸ்
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. தொ.பே.: 0777238573.

### தென் இந்திய யாத்திரை

திருச்சி, இராமேஸ்வரம், கன்னியாகுமாரி, திருச்செந்தூர், மதுரை, பழனி, தஞ்சாவூர், வேளாங்கன்னி ஆகிய முப்பது (30) திருத்தலங்களுக்கு பத்து (10) நாள் யாத்திரை. சித்திரை 5 ஆம் திகதி யாத்திரை ஆரம்பம். தொடர்புகளுக்கு:
Suvarna Travels
International (pvt) Ltd.
No.305C, Sea Street,Colombo-11.
0112435902, 0770856058,0729884606, 0114380792

# பாவம்! பகடைக்காய்கள்



யாழ்ப்பாணத்தில் கோழிச்சண்டைகள் அடிக்கடி நிகழ்வதுண்டு. ஆடுகளம் படத்தில் வருவது போன்று, பந்தயத்துக்காக நடத்தப்படும் சேவல்களுக்கு இடையிலான போரைத் தவிர கோழிகளின் எல்லை மீறல்களால் மனிதர்களுக்கிடையே மூளுகின்ற சண்டைகள் சுவாரசியமானவை. அதுவும் வேலிப் பொட்டுக்குள்ளால் பக்கத்துவீட்டுக் கோழிகள் தங்கள் வளவுக்குள் அத்துமீறியதைக் கண்டுவிட்டால் நமது தாய்க்குலங்கள் பொங்கியெழுந்து விடுவார்கள்.

ச்சூய்! ச்சூய்! எளிய சனங்கள்! மற்றவயின்ர காணியை நம்பியே கோழி வளக்குதுகள்? இதுகளின்ர கோழியால எங்கட வீடு முழுக்க நாறுது. இனி வரட்டும் . காலை அடிச்சு முறிச்சு விடுறன் இவ்வாறு முதலாவது போர்ப் பிரகடனம் செய்யப்பட்டவுடன் பக்கத்து வீட்டிலிருந்தும் பதிலடி வரும்.

ஆமோ! அப்பிடிச் செய்து போட்டு இருப்பியோ? அப்பிடி ஏதாவது நடந்தால் உன்ர ஒரு கோழியும் உயிரோட இருக்காது.

கோழியைக் கலைக்கும் சாட்டில் பக்கத்து வீட்டுக்காரர் மீது கொளுவலுக்கு போகின்ற பண்பாடு நம்முடையது. இந்த உரசல்களின் வெளிப்பாடாக வேண்டுமென்றே கோழிகள் வேலிகளுக்கால் அடுத்த வீட்டுக்கு விரட்டப்படும். ஆனால் எச்சரிக்கையையும் மீறி, தொடர்ந்து கோழிகளின் அத்துமீறல்கள் நிகழும்பட்சத்தில் கோழிகள் மீதான கல்லெறி, நாயைச் சூக்காட்டுதல் என்பன போன்ற போர் உத்திகள் முழுமுனைப்போடு மேற்கொள்ளப்படும். அதுவும் தோல்வியுறும் பட்சத்தில் கடைசி ஆயுதமாகச் சாப்பாட்டில் ஏதோ ஒரு மருந்தை வைத்துக் கோழியின் கதையை முடித்துவிடுவார்கள். பாவம்! மனிதர்களின் முரண்பாட்டால் அப்பாவிக் கோழிகள்தான் பாதிக்கப்படுகின்றன.

இலங்கை- இந்தியக் கடற்பரப்பிலும் இதுபோன்ற கோழிகளின் எல்லைமீறல் போல, மீனவர் எல்லை மீறுகின்ற பிரச்சினை நீண்டகாலமாகவே நடந்து வருகின்றது. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் பரப்பை அண்டிய பகுதிகளுக்கு வந்து மீன்பிடிப்பதும், இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குச் சென்று கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதும் அடிக்கடி நடைபெறும் ஒரு விடயம். இதன் போதெல்லாம் இரு நாட்டு அரசுகளும் ஒன்றுக்கொன்று முறுகிக் கொள்வதும், பரஸ்பரம் மீனவர்களைக் கைது செய்வதும் வாடிக்கையானவை. இதன்போதெல்லாம் இருநாட்டு அரசுகளின் படைகளே இந்த விடயத்தைக் கையாண்டிருந்தன.

தமது எல்லைக்குள் நுழைந்த இந்திய மீனவர்களின் றோலர்கள் தனியே கடலுணவுகளை மாத்திரம் வாரியெடுக்காமல் தமது பெறுமதி மிக்க வலைகளையும் நாசமாக்குவதாக இலங்கை மீனவர்கள் கவலை தெரிவித்துவந்தனர். இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்கவேண்டுமென அவர்கள் எல்லோரிடமும் மனுக்கொடுத்து சோர்ந்ததுதான் மிச்சம்.

இதேபோன்று தமது கடலெல்லைக்குள் இலங்கை மீனவர்கள் அத்துமீறுவதாகக் கூறி, இலங்கை மீனவர்களை இந்தியக் கடலோரக் காவல்படை கைது செய்வதுண்டு.அந்த வலையில் பெரும்பாலும் சிங்கள மீனவர்களே சிக்குவர். பதிலுக்கு இலங்கைக் கடற்படையினர் இந்தியமீனவர்களைப் பலியெடுப்பதாக இந்திய மீனவர்கள் கண்ணீர் விடுகின்றனர். ஒரு வாரத்துக்கு ஓர் இந்திய மீனவரின் உயிரையாவது பறிக்காவிட்டால் இலங்கைக் கடற்படைக்கு நித்திரையே வராது என்ற நிலை. குருவியைச் சுடுவது போன்று ஒவ்வொரு தமிழக மீனவர்களின் உயிரையும் இலங்கைக்கடற்படை பறிப்பதால், அவர்கள் ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தம் என்பனவற்றையெல்லாம் செய்து, இந்திய அரசு இவ்விடயத்தில் தலையிட்டுத் தமது உயிருக்குப் பாதுகாப்புத்தரவேண்டும் எனக் கோருவர்.அப்போதெல்லாம் விழுந்தடித்துக் கொண்டு சத்தியமாக நாங்கள் இந்திய மீனவர்களைக் கொல்லவில்லை எனப் பிலாக்கணம் பாடும் இலங்கையரசு.ஆனால் உலகின் வல்லரசுகளில் ஒன்றாகத் தன்னை மார்தட்டிக் கொள்கின்ற இந்திய அரசு இலங்கையிடம் கடுமையான தொனியில் பேசுவதைத் தவிர்த்து , வேணாம்! வேணாம்! வலிக்குது! இனியும் அடிச்சா அழுதிடுவேன் என்கிற கணக்காக ஒப்புக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துவிட்டு அமைதியாகிவிடும். நித்தியகண்டம், பூரண ஆயுசு என்றும் வாழ்வே தொடர்ந்தது. இதேவேளை தமது உயிரைக் காவு கொள்ள இலங்கைக்கடற்படை காத்திருப்பது தெரிந்த போதும், அதையும் தாண்டி இலங்கைக் கடற்பரப்பில் -அதுவும் வடக்குக் கடலில்- உள்நுழைந்து இங்குள்ள கடல்வளங்களை அள்ளியெடுத்துச் செல்வதில் தமிழக மீனவர்கள் சூரர்கள். அப்படியான ஊடுருவல்களின்போது இந்திய றோலர்கள் கடல்படுக்கைகளில் உள்ள கண்டல் தாவரங்களையும் அழித்து விடுகின்றன. அதனால் அங்கு மீன்களின் பெருக்கம் மட்டுப்படுத்தப்பட்டதாக மாறும். இதைவிட இலங்கை மீனவர்கள் கடலில் கட்டியிருக்கும் வலைகளையும் அந்த றோலர்கள் போகிற போக்கில் வெட்டித் தள்ளிவிடும். இதனால் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி அந்த வலையை வாங்கித் தொழில் செய்துவரும் யாழ்ப்பாணத்து மீனவர்கள் பெரும் துன்பங்களைச் சந்திக்கவேண்டியிருந்தது. இந்திய மீனவர்களால் தமது உடைமைகள் நாசமாகுவதால் கடற்றொழில் செய்யமுடியாத நிலைக்கும் சில மீனவர்கள் தள்ளப்பட்டனர்.

அண்மைக்காலமாக இலங்கைக் கடற்படையினரால் தமது சக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது அல்லது துன்புறுத்தப்படுவது அதிகரித்திருப்பதாக தமிழக மீனவர்கள் போர்க்கொடி தூக்கி, தமது போராட்டங்களையும் தீவிரப்படுத்தியிருந்தனர்.தமிழக சட்டசபைத் தேர்தல் நெருங்கும் சமயத்தில், மீனவர்களின் இந்தப்பிரச்சினைக்குக் காதுகொடுக்க வேண்டிய கட்டாயம் அங்குள்ள எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்பட்டுவிட்டது. இத்தனை நாளும் தமிழக மீனவர்கள் குறித்து ஆழ்ந்த உறக்கம் கொண்டிருந்தவர்கள் கூட திடீரென விழித்தெழுந்து மீனவர் உரிமைக்காக முழக்கமிடத் தொடங்கிவிட்டனர். ஏற்கனவே ஸ்பெக்ட்ரம் விவகாரத்தால் சேடமிழுத்துக் கொண்டிருக்கும் இந்திய மத்திய அரசு, மீனவர் விடயத்திலும் பாராமுகமாக இருந்தால் நிலைமை கைமீறிப் போய்விடும் என்பதை உணர்ந்து, தன்னுடைய வடிவேலுப் பாணியிலான கெஞ்சலை ஒதுக்கி விட்டு, கொஞ்சம் காரமாகவே இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்தது.

இலங்கை அரசுக்கும் இந்த எச்சரிக்கை தர்ம சங்கடத்தை உண்டாக்கிவிட்டது.போர்க்குற்ற விசாரணை என்ற பூச்சாண்டிகளால் நடுங்கிக் கொண்டிருந்த இலங்கை அரசு, தமிழக மீனவர் கொலையுடன் தனக்குத் தொடர்பிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தால் அது நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும் என்று நினைத்தது.அத்துடன் தமிழ்த் தேசியத்துக்கான உரிமைக்குரல் எழுப்பும் தளம் போர் முடிவுற்ற பின்னர் இலங்கையில் கிடையாது என்பதால் இப்போது புலம்பெயர் மக்களும் , தமிழக மக்களுமே அந்தப் பணியைச் செய்துவருகின்றனர். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளும் , இலங்கை அரசு மீதான போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமென்ற அழுத்தங்களும் தமிழகத்தில் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் அடங்கிக் கிடந்த ஈழத்தமிழர் ஆதரவு அலை மீண்டும் பிரவாகிப்பது தனக்கு ஆபத்து என்பதையும் சிங்களப்பேரினவாதம் தெரிந்தே வைத்திருந்தது.

இந்த நிலையில்தான் கடந்த வாரம் இலங்கைக் கடற்றொழிலாளர்களால் சுற்றி வளைக்கப்பட்டு, இந்திய மீனவர்கள் 106 பேர் ஒரே தடவையில் வடமராட்சிக்கரைக்குக் கொண்டு வரப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர். தமது வாழ்வியல் அடிப்படையான கடற்றொழிலுக்கு இந்திய மீனவர்கள் சேதத்தை உண்டு பண்ணுவதைப் பொறுக்க முடியாமல்தான் வடமராட்சி மீனவர்கள் இந்தக் காரியத்தை நிகழ்த்தினர்.ஆனாலும் ஒரு சந்தேகம். போர் முடிவுற்ற பின்னர் சில மாதங்கள் வரை வடமராட்சிக் கடற்கரையை அண்டிய பகுதியில்- கண்ணுக்கெட்டிய தூரத்தில் - நாள்கணக்கில் தரித்து நின்று, மீன் பிடித்து, அந்த மீன்களை வடமராட்சிக்கரையில் வரவழைக்கப்பட்ட கூலர் வாகனங்களில் சிங்கள மீனவர்கள் கொண்டு செல்லும் போது நம் மீனவர்களின் இந்த வீரம் எங்கே போயிருந்தது? வருடக்கணக்கில் இந்திய மீனவர்கள் சேதம் விளைவித்த போது அடங்கியிருந்த துணிச்சல் சட்டென வெளிப்பட்டதெப்படி? என்ற வினாக்களுக்கு விடைகளில்லை. எனினும் இலங்கை மீனவர்களால் தமிழக மீனவர்கள் சுற்றிவளைக்கப்பட்டபோது எட்டத்தில் இலங்கைக்கடற்படைப் படகுகள் நின்றதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு தமிழ் மீனவர்களாலேயே , தமிழக மீனவர்களைப் பிடித்ததன் மூலம் ஒரே கல்லில் பல மாங்காய்களை இலங்கையால் வீழ்த்த முடிந்திருக்கிறது.

-இதுவரையும் தொப்புள்கொடி உறவாக இருந்த இலங்கை-இந்தியத் தமிழ் மீனவர்களிடையே ஒரு தீராப்பகையை உருவாக்குதல் (இதன் விளைவாகவே தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்ட தினத்தில் தமிழக மீனவர்களின் துணையுடன் இலங்கைத் தமிழ்மீனவர்களை இந்தியா கைது செய்தது)

- இதன் மூலம் தமிழகத்தில் கொழுந்து விட்டெரியும் ஈழ ஆதரவு நெருப்பை ஓரளவுக்கேனும் குறைத்தல்.

-இனிவரும் நாள்களில் இந்திய மீனவர்கள் கொலை செய்யப்பட்டால் அதை இலங்கைத் தமிழ் மீனவர்கள்தான் செய்தார்கள் என்று பழிபோடல்

-இந்திய மீனவர்கள் தொடர்ந்து எல்லைமீறல்களை நிகழ்த்தியபடியே இருக்கிறார்கள் என்பதை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தல்

- இந்தியாவின் கோரிக்கையை அடுத்து அவர்கள் சொன்ன திகதியில் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவித்ததன் மூலம் இந்தியாவுக்கும் பட்டர் பூசுதல் என்பன போன்ற ஏராளமான நன்மைகள் ஒரேநேரத்தில் இலங்கை அரசின் காலடியில் வந்து வீழ்ந்திருக்கின்றன. யாருடைய தூண்டுதலுமின்றி, எந்தவொரு பின்புலமுமின்றி வடமராட்சி மீனவர்கள் தாமாகவே இந்த அதிரடி நடவடிக்கையைச் செய்திருந்தாலும் கூட அதனால் அவர்களுக்கு எவ்வித நன்மையும் விளையவில்லை என்பதே உண்மையாகும். மாறாக தமிழக மீனவர்களின் உறவை இழந்ததுதான் மிச்சம் (தன் மீதான வழக்கில் தமிழக அரசை ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்காக மீனவர்களை வைத்துப் பேரம் பேசி, தமிழக முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி, தனது லாபத்துக்காக வடமராட்சி மீனவர்களின் நன்மையை அமைச்சர் டக்ளஸ் பலியிட்டு விட்டதாகவும் கதையடிபடுகிறது).

எப்படியோ மீனவர்களைப் பகடைக்காய்களாக்கி இருநாட்டு அரசுகளும் நடத்தும் விளையாட்டில் சீவன் போவதென்னவோ அப்பாவி மீனவர்களுக்குத்தான். இருநாட்டு கடற்படைகளும் தம் நாட்டு மீனவர்கள் அத்துமீறாமல் பார்த்துக் கொள்வதன் மூலம் இத்தகைய அவலங்களை முளையிலேயே தவிர்க்கலாம். அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டுகளுக்குள் மூழ்காது இருநாட்டு மீனவர்களும் தமக்கிடையே பரஸ்பர நட்புறவான பேச்சுக்களின் மூலமே இப்பிரச்சினைகளுக்கு ஒரு சரியான தீர்வை எட்ட முடியும். இல்லாவிட்டால் ஏட்டிக்குப் போட்டியான கைதுகளும், பழிவாங்கல்களுமே கடலில் தொடரும்.

ஒளண்யன்

## வேலைக்கு ஆட்கள் தேவை

மன்னாரில் பிரபல்யமான டிஜிற்றல் ஸ்ரூடியோவுக்கு மூன்று வருடங்களுக்கு மேல் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

* போட்டோ ஷொப் - 3 நபர்
* வீடியோ கெமராமான் - 2 நபர்
* வீடியோ எடிட்டிங் - 2 நபர்
* எக்கவுண்டிங் மனேச்சர் - 1 நபர்

குடிப்பழக்கம் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படும். சம்பளம் 20,000/= தொடக்கம் 30,000/= வரை வழங்கப்படும்

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0750366700

(இருப்பிட வசதி இலவசமாக செய்து கொடுக்கபடும்)

## கொக்குவில் இந்துக் கல்லூரி

### பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந் தப் பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 2011ஆம் ஆண்டு 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பஞ்ச லிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் எல்லோ ரையும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். விலாசங்கள் மாறி இருப்பவர்கள் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ள வும். அழைப்புக் கிடைக்காதவர்கள் இவ் அறிவித்தலை தனிப் பட்ட அழைப்பாக ஏற்றுச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**திரு.சி.இராசதுரை,**
செயலாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

## மரண அறிவித்தல்



**திருமதி இரஞ்சிதமலர் அபிமன்னன் (பெரியக்கா)**

கோயில் வீதி, மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு மதி இரஞ்சித மலர் அபிமன்னன் அவர்கள் நேற்று (19.02. 2011) சனிக்கிழமை இறை பதமடைந்துவிட்டார்.

அன்னார் சின்னத்துரை அபிமன்னனின் அன்பு மனைவியும், விஸ்ணுஜனின் அன்புத் தாயாரும், செல்லத்துரை- இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இராசமலர், நேசமலர் (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை), மோகனச்செல்வம் (தபாலகம், மல்லாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(20.02.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வீதி,
மல்லாகம்.

தகவல்: S.மோகனச் செல்வம் (சகோதரன்)
தொ.பே.0770204129, 0213214925

## இரு நாட்டு அரசு.....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியான ஒரு சூழ்நிலையில் பெரும் இழுவைப் படகுகள் இலங்கைக் கரையிலிருந்து கண்ணுக் கெட்டிய தூரத்தில் வந்து எப்படி மீன்பிடிக்க முடிகிறது? இவர்களை ஏன் இந்தியக் கரையோரக் காவற்படையோ, கடற்படையோ கைது செய்வதில்லை.

இலங்கைக் கரையை அண்டிய பிரதேசங்களில் வந்து இலங்கை மீனவர்கள் பயன்படுத்தும் வலைகளைச் சேதப் படுத்தும் போது இரு தரப்பினருக்கும் முரண்பாடுகளும் மோதல்களும் எழும்.

இதன் காரணமாக தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இடையே நிலவும் நல்லுறவைப் பலவீனப் படுத்தலாம்.

இந்திய இலங்கை நிகழ்ச்சி நிரலில் இப்படி ஒரு கூட்டுச்சதி இல்லையென்று நம்பமுடியுமா?

அண்மையில் விடுதலைப் புலிகள் இந்தியாவைத் தளமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் எனவும் இந்திய அரசியல் தலைவர்களைக் கொலை செய்யத் திட்டமிடுகின்றனர் எனவும் இந்திய புலனாய்வுத் துறை வெளியிட்டு வரும் கருத்துக்களையும் ஏதோ ஒரு பெரிய சதி விரிப்பின் முன்னோடி நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது.

இதன் மூலம் இலங்கைத் தமிழக மக்களிடையே முரண்பாடுகளை உருவாக்குவதையும் தமிழக ஈழத்தமிழ் மக்களின் ஆதரவாளர்களைக் கட்டுப் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கலாம்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லப்படும் போது கோப மடையாத கனிமொழிக்கு அத்து மீறிய மீனவர்கள் மக்களால் பிடிக் கப்படும் போது ஆவேசம் வரு வது காரணமில்லாமல் இருக்க முடியுமா?

எனவே இப்போது எமது மீனவ அமைப்புகளுக்கும் தமிழக மீனவ அமைப்புகளுக்கும் ஒரு பெரும் பொறுப்பு உண்டு.

இரு தரப்பினரும் தாங்களாகவே எல்லை மீறாமல் பார்த்துக் கொள் ளவும் ஒருவருக்கு ஒருவர் இடையூறு கொடுக்காமல் ஒத்துழைத்து தொழில் செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

இல்லையேல் இலங்கை இந்திய அரசுகளின் கூட்டுச் சதிக்குள் நாம் இரு தரப்பி னருமே பலியாக வேண்டிய அவலம் தவிர்க்கப் பட முடியாததாகி விடும்.

## வீடு விற்பனைக்கு

ஏழாலை மேற்கில் மல்லாகம் - குரும்பசிட்டி வீதியில் உத்தமன் சிலைக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: S.முருகவேல்,
தொலைபேசி: 0776407934

## சதாபிஷேக வாழ்த்து



இன்று முத்து விழாக்காணும் எமது மன்றப் பணிப்பாளர் சபை உறுப்பினரும் மூத்த கைத்தொழில் அதிபர் சிவநெறிப் புரவலர்

**திரு.தம்பியப்பா சண்முகலிங்கம்**
**மற்றும் திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்**

தம்பதியர் மேலும் பல்வேறு சிறப்புக்களைப் பெற்று நீடூழிகாலம் வாழவும், சமூகத்துக்குச் சேவையாற்றவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
அங்கத்தவர்கள் மற்றும் மன்ற உத்தியோகத்தர்கள்.
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்.

## வாடகைக்கு கட்டடம் தேவை

யாழ்.நகரில் புதிதாக
ஆரம்பிக்கப்படவிருக்கும்
பிரபல்யமான நிறுவனம் ஒன்றின்
காட்சியறை ஒன்றுக்கு
குறைந்தது 1700 சதுர அடி
பரப்பில் நகர் மத்தியில்
வாடகைக்குக் கட்டடம் தேவை.

உடன் தொடர்புக்கு:
**0777755204.** (சி/576208)


**UK STUDENT VISA**

* ★ IELTS: Not Necessary
* ★ College Admission arranged
* ★ Bank Sponsors arranged
* ★ 100% Visa Success

(109648)

**SIC CENTER**
734, Hospital Road, Jaffna.
Tel: 0776209887/ 0777767818


## அறிவித்தல்

இல.268, பிறவுண் றோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(பழைய இல 66, பிறவுண் றோட், நரியன்குன்று)

மேற்குறித்த ஆதனத்தின் சொந்தக்காரர் சாள்ஸ் மரியாம்பிள்ளையாகும். இவ்வாதனம் விற்பனைக்கோ கைமாற்றலுக்கோ இல்லையென்றும் இவ்வாதனத்தை விற்கவோ கைமாறவோ எத்தனிப்பவர்களுக்கும் அவ்வாறு செய்பவர்களுக்கும் அதற்கு உடந்தையாக இருப்பவர்களுக்கும் எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் இதனால் ஏற்படும் நஷ்டம் எதற்கும் தாம் பொறுப்பு இல்லை என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**சட்டத்தரணி C.R.மித்திரகிறிஸ்னன்**


நல்லூர்
**சரவணா ரெக்ஸ்**

இன்று மட்டுமே..!

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள்,
பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள்
எங்கும் காணாத வாங்காத விலையில்

**மாபெரும் சிறப்புத் தள்ளுபடி**

Special Offer

இடம் : நல்லூர் (பூங்கனிச் சோலைக்கு முன்பாக)
காலம் : 20.02.2011 ( இன்று மட்டும்)
நேரம் : காலை 9.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை

அலை அலையாக வாரீர் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

வாடிக்கையாளர் நலன்கருதி பிரத்தியேகமான இடம்
கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், பஞ்சாபிகள்,
ஏராளம், ஏராளம் அள்ளி அள்ளி செல்லுங்கள்

**Saravana Tex**
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:021 222 1723.



# கிடைக்கும் வாய்ப்புக்களை தவறவிடும் யாழ். அணிகள்



விளையாட்டுத்துறை இன்று பணம் செழிக்கும் ஒரு துறையாக மாற்றம் பெற்றுள்ள போதிலும் இதில் அக்கறைகாட்டி பேரட்டிகளில் கலந்து கொள்பவர்களின் ஆர்வம் தொடர்ந்தும் குறைவாகவே காணப்படுகின்றது.

கடந்த இரண்டு, மூன்று வருட காலப்பகுதியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பலர் இராணுவ, பொலிஸ் அணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

பலரை உள்வாங்க எடுத்த முயற்சிகள் கைகூட வில்லை. சில வீரர்கள், வீராங்கனைகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத்துறையில் காட்டப்படும் ஆர்வமும் இது எமது தவறுகள், பிழைகளுக்கு நாம் கற்பிக்கும் நியாயமே அன்றி அடுத்து வேறொன் றும் அல்ல.

கோட்டமட்டதில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற அணிகள் வலயமட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளமையையும் தேசிய மட்டம் வரை சென்றுள்ளமையையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தொடர்பயிற்சியும் வீரர்களின் ஆர்வமுமே போட்டிகளில் வெற்றிகளை ஈட்டிக் கொடுக்கின்றன. இதற்குச் சிறந்த உதாரணமாக உடற்பயிற்சிப் போட்டியில் கடும் உழைப்பின் மூலம் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஆனைக்கோட்டை பால சுப்பிரமணியம் வித்தியா லயம், இளவாலை புனித கன்னியர்மடம் மகாவித்தியாலயம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இதே போன்று உதைபந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி-

மெய்வன்மைப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி கிரிக்கெட்டில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி என்று பட்டியலை அடுக்கிக் கொண்டேபோகலாம்.

எதிர் காலத்திலேனும் குறிப்பாக இந்த ஆண்டில் இருந்தேனும் நல்ல திட்டமிடல் மூலம் வீரர்கள், வீராரங்களைகள் தெரிவு இடம் பெற்று அணிகள் உருவாக்கப்பட வேண்டும்.

அணிகளைப் பெயருக்காக உருவாக்கும் நிலைமை நிறுத்தப்பட வேண்டும். இந்த வகையில் யாழ்.கல்வி வலயத்தில் ஜீ.சி.ஈ சாதாரணம் மட்டும் உள்ள பாடசாலைகளில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் முன்னோடியான சில பாடசாலைகளில் கூட 19வயதுப் பிரிவு அணி அமைக்கப்படாமல் தேவையற்ற ஆலோசனை வழங்கப்பட்டு அது செயற்படுத்தப்பட்டும் வருகின்றது.

இது கூட பாடசாலை வளர்ச்சிக்கும் விளையாட்டுத் துறைக்கும் பெரும் வீழ்ச்சியை எற்படுத்தும்.

இத்தகைய நிலைமை ஏற்படாது முற்கூட்டியே நடவடிக்கை மேற்கொள்வது சாலப்பொருத்தமுடையதாகும். மாணவர்களின் எதிர்காலச் செயற்பாடுகளையும் கருத்தில் கொண்டு அணிகளை உருவாக்குவது மிகவும் பொருத்தப்பாடு உடையதாக அமையும்.

இவ்வாண்டு யாழ்.மாவட்டப் பாடசாலைகள் உதைபந்தாட்டத்தில் தேசிய மட்டம் வரை சென்று சாதிக்க அனைவரும் பாடுபட வேண்டும்.

* * *

# அக்கறை இல்லாமையே அனைத்துக்கும் காரணம்

-விண்ணன்-

ஆற்றலும் சில சந்தர்பங் களில் பாடசாலை மட் டத்திலும் கழக மட்டத்திலும் மழுங்கடிக்கப்படும் நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன.

கடந்தவாரம் வலிகாமம் கல்வி வலயக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான வலயமட்டப் போட்டிகள் இடம்பெற்று முடிவடைந்துள்ளன.

இப் போட்டிகளில் வலய மட்டத்தில் மோத வேண்டிய் பாடசாலை அணிகள் அதில் கலந்து கொள்ளாது தவிர்த்துள்ளன.

கடந்தாண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பாடசாலைக்கு வரவில்லை பயிற்சிகளுக்கு மாணவர்கள் சீராக வரவில்லையெனக் காரணம் கூறிய பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் தமது கடமை முடிந்துவிட்டதாகக் கூறி விலகிக்கொள்கின்றார்கள்.

இத்தகைய நடவடிக்கை போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும், சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்று ஆர்வத்துடன் காணப்படும் ஏனைய வீரர்களையும் வீராங்கனைகளையும் பாதிப்படையச் செய்யும் ஒரு செயற்பாடாகும்.

இதே போன்று சில பாடசாலைகள் தமது அணியைப் போட்டியிட்டுக் கோட்டம் வலயம் ஆகிய மட்டங்களில் வெற்றி பெற வைத்துவிட்டு அதற்கப்பால் செல்லாது ஒதுங்கிக் கொள்கின்றன.

இதன் மூலம் தொடர்ந்து ஏனைய போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடிய அணிகள் தடைசெய்யப்படுவதும் குறிப்பிட்ட சில பாடசாலைகள் மாண வரின் விளையாட்டு வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதும் விரும்பத்தக் கதல்ல.

இத்தகைய தடைகளைத் தவிர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உரிய பாடசாலைகளில் உள்ள விளையாட்டுத் துறைப் பொறுப் பாசிரியர்களுக்கும், அதிபர் களுக்கும் உரியதாகும்.

மாணவர்கள் பாடசாலைக் கட்டுப்பாட்டுக்குள் நிற்கமாட்டார்கள், பயிற்சிகளுக்கு சீராக வரமாட்டார்கள் என்று இனம் கண்டால் அவர்களை விட்டுப் புதியவர்களை ஆரம்பத்திலேயே இணைத்துக் கொள்வது பாடசாலையின் பெயரைக் காப்பாற்ற உதவியாக இருக்கும்.

முதலிடம் பெற்ற பாடசாலை அடுத்த போட்டியில் கலந்து கொள்ளாமல் விட்டால் அடுத்து அந்தப் பாடசாலைகளில் இரண்டாம் இடம் வந்த பாடசாலை மட்டுமே அடுத்த போட்டியில் பங்கு கொள்ளலாம். மூன்றாம் இடம் பெற்ற பாடசாலை அதில் கலந்துகொள்ள முடியாமல் போகும். அத்துடன் அந்த சந்தர்ப்பம் தமக்கு கிடைக்கவில்லையே என மூன்றாம் இடம்பெற்ற பாடசாலை அணியின் வீரர்களுக்கு மன வருத்தமும் ஏற்படும்.

இதற்கு வெற்றி பெற்ற அணிகள் முன் வைக்கும் ஒரு கேள்வி எங்களையே கோட்ட வலய மட்டத்தில் வெல்ல முடியாதவர்கள் எப்படி மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறுவார்கள் என்று.-

# இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பதற்கு கரப்பந்தாட்டம்

நாட்டின் அபிவிருத்தி எதிர்கால இலக்கு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மிகவும் பிரம்மாண்டமான முறையில் புத்தலவில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியை பார்வையிட வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் இ.அங்கஜன் இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கவும் சகோதரத்துவத்தைப் பேணும் நோக்குடனும் குடாநாட்டிலிருந்து பெருமளவான மக்களை இக் கண்காட்சியில் கலந்துகொள்ள வைத்ததுடன் குடாநாட்டிலிருந்து வலைப்பந்தாட்ட அணிகளான யூனியன் மற்றும் யுனைட்டெட் அணிகளைத் தனது முழு அனுசரணையுடன் அழைத்து வந்து அவர்களுக்கான போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து புத்தலவில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றச் செய்தார்.

இப்போட்டி தமிழர், சிங்களவர் என்ற பேதமின்றி சகோதரத்துவத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது. இ.அங்கஜனின் ஏற்பாட்டில் ஈ.பி.அல்விஸ் என்பவரின் கண்காணிப்பின் கீழ் குடாநாட்டு அணியினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வு குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் இ.அங்கஜன் கருத்துத் தெரிவிக்கையில்:-

குடாநாட்டிலிருந்து வந்த மாணவர்கள்,விளையாட்டு வீராங்கனைகள் இதில் கலந்து கொண்டமை இனங்களுக்கிடையே நல்லுறவையும் சகோதரத்துவத்தையும் புரிந்துணர்வையும் வளர்க்க மிகவும் உறுதுணையாக அமைந்தது. அத்துடன் குடாநாட்டு மாணவர்கள் புதிய அனுபவங்களையும் விழிப்புணர்வையும் இதன் மூலம் பெற்றுக் கொண்டதுடன் இன்னும் தமது ஆளுமைத்திறனை வளர்த்துக் கொள்ளவும் எதிர்கால சமுதாயத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்பவும் இது உதவியுள்ளது எனக் குறிப்பிடலாம் என்றார்.

உதயன்
20 பெப்ரவரி 2011 ஞாயிற்றுக்கிழமை

## காணி விற்பனைக்கு

அரியாலை மணியம் தோட்ட வீட்டுத்திட்ட பின்புறத்தில் கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 50 பரப்பு மேட்டுக்காணி (புளியடி வயலிற்றிடல்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திரு.ப.தர்மலிங்கம் 262/3, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். T.P: 0212228828.

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

புதுக்காட்டுச் சந்திக்கும், பளைக்கும் இடையில் பெரிய சூட்கேஸ் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொ ர்பு- குட்டிப்பிள்ளையார் ரவல்ஸ் உரிமையாளர், 3ஆம் ஒழுங்கை, மாவிப்பாய் வீதி, மருதனார் மடம்

## ஆங்கிலபாட பயிற்சிப்பட்டறை

தென்மராட்சி, பெப்.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3 வகுப்புக்களில் ஆங்கிலபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிதொடக்கம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடை பெறும்.

பயிற்சிப் பட்டறைக்கு வரும் போது பாடநூல்களின் வழிகாட்டல்கையேடுகளையும் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-207)

220 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL உத்தரவு பெற்ற முகவர்



வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுக்கான கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், உணவுப்பண்டங்கள், CD, DVD போன்றவற்றை பாதுகாப்புடன் விரைவாக குறைந்த கட்டணத்தில் அனுப்பிட DHL

WESTERN UNION®

வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள பாதுகாப்பான விரைவான நம்பிக்கையிலான சேவை

MMBL Money Master

திருமுருகன் கொம்நெற்

259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.

(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்)

## விழி நீர் சொரிய 31 ஆம் நாள் நினைவுகளோடு..



மண்ணில்: 1941.09.01

மனங்களில்: 2011.01.21

அமரர்

### வேலுப்பிள்ளை இராசையா

வாசத்தை மறைப்பதுண்டோ பூக்கள் - உம்
பாசத்தை மறைப்பதுண்டோ மக்கள்
நாசம் செய்தானோ காலன் - மாமா
நேசம் இழந்து தவிக்கின்றோமே....
தேசம் கடந்தென்றால் கண்டிருப்போம் ஓர் நாள்..!
யாசித்திருக்கின்றோம் உம் ஆத்ம சாந்திக்காய்..!!!

அனைவருக்கும் உற்ற உறவினராக நண்பனாக, நல்ல சகோதரனாக எமக்கு மாமாவாக நல்ல வழிகாட்டியாக நாம் கண்கண்ட தெய்வமாக மேலாக எமக்கு எல்லாமாக விளங்கி எம்முடன் வாழ்ந்து இன்று தெய்வமாகிவிட்ட எம் மாமாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீளாத் துயரத்துடன்:
க.பூபாலசிங்கம் குடும்பத்தினர் (மைத்துனர்)

பாடசாலை வீதி,
நாவற்குழி, கைதடி.

## விற்பனைக்கு

மண்போறனை, நல்லநிலையில் உள்ளகாஸ் அவன், மாக்குழைக்கும் மெசின், றஸ்க்தூள் அடிக்கும் கிறைண்டர், பாண்தட்டு மற்றும் பேக்கரி உபகரணங்கள் அனைத்தும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0212225707.

## VACANCY

கணினி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
நேரில் வரவும்.

Midea Electro Mart
No: 1-1, 1- H, Stanley Road, Jaffna.

## கண்டர் வாடகைக்கு

11½ அடி கண்டர் சாரதி இல்லாமல் வாடகைக்கு விடப்படும்.
தொடர்புக்கு:- 738, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 0779963456

## காணி விற்பனை

கோப்பாய் மத்தி, வெருவளவு பிள்ளையார் கோயிலடியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0777448488

## தவறிவிடப்பட்டுள்ளது

இரகுநாதன் வசந்தகுமாரின் தேசிய அடையாள அட்டை (870233272V) மற்றும் முக்கிய ஆவணங்களுடன் (17.02.2011) தாவடி பாமசி ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0778448032 என்னும் தொ.பே இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

## UK VISAS

எமது சேவையில் எல்லா விதமானவிசாக்களும் ஒழுங்கு செய்துதரப்படும்.

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

4, IBC Road, Colombo 6,
Contact: 0774-550747

FLEX Graphic

## STUDY IN UK



VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!

NO NEED IELTS

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic

## மரண அறிவித்தல்



### திருமதி சுப்பிரமணியம் செல்வரெத்தினம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் செல்வரெத்தினம் கடந்த (17.02.2011)வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விஜயரெத்தினம் மற்றும் விஜயகுமாரி ஆகியோரின் தாயாரும், பரமேஸ்வரன், சதானந்தி ஆகியோரின் மாமியாரும், வாமினி, திருச்செல்வம், கோகுலன் (சுபான்), குகன் (லிகித்தா) விதுஜெனா, கேசகுமரன் ஆகியோரின் பேர்த்தியும், கோபிராம், லதுசன், கனிஸ்ரா ஆகியோரின் பூட்டியும், செல்வநாயகியின் சகோதரியும், துரைராசா, கோபன்ஸ் நாகராசா, சிறீஸ்கந்தராசா ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அவறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 649, கே.கே.எஸ். வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். தொ.இல - 0750423876

தகவல்
லி.கோகுலன் (குலன்)
பேரன்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02.09.1978

உதிர்வு: 20.02.2009

### சிவபாதம் அருணன்

(சட்டவாளர்)

காலத்தின் கோடுகள் கண்ணீரில் என்றுமே
கரைந்திடப் போவதில்லை
எங்கள் அழுகையின் ஓசை வானத்தை எட்டியும் உயிர்வலி ஆறவில்லை
மாசற்ற மனத்தை மலர்த்திய அழகுற நீ சிரிப்பாய்
அறிந்திராரோடும் கனிவுடன் பேசியே புன்னகைப் பூ விரிப்பாய்
ஆண்டிரண்டு உருண்டோடியும் அழகிய பூ முகம்
கண்களினின்றும் நீங்கவில்லை
ஆறிடாத் துயரினில் நின்று நாம் வாடுகின்றோம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி உன் பூ முகம் தேடுகின்றோம்

சி.மயூரி, 00447947886059

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### காசிப்பிள்ளை கனகசபை

இணுவில், மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கனகசபை நேற்று (19.02.2011) சனிக்கிழமை இறைவ னடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை -செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும் மூத்ததம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் கண்மணி யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திலகம்மா, சரஸ்வதி, குமாரசாமி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜோதிலிங்கம் (சுவிஸ்), அருந்ததி, கணேசலிங்கம் (Sun City, யாழ்ப்பாணம்) யோகேஸ்வரி (Sun City, யாழ்ப்பாணம்), ஜெகதீஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் சாந்தி (சுவிஸ்), முத்துலிங்கம் (M.S.K. தாவடி வர்த்தகர்) காலஞ்சென்ற நாகேந்திரராசா மற்றும் பேரின்பநாயகி, செல்வதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் கயல், கௌசிகா, நர்மிதா, சோதிகா (சுவிஸ்), ஆரணி, நித்தியானந்தா, தர்சிகா, சுபங்கரி, கீர்த்திகா, ஜெனகன், ஜெனனி, சுருதி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மைத்துனரும் சிவயோகத்தின் உடன்பிறவா சகோதரரும் சசிகரன் (Sun City, யாழ்ப்பாணம், சசிகலா (ஜேர்மனி) காலஞ்சென்ற விசிகலா மற்றும் தயாகரன் (சுவிஸ்) வாறுதி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2011) காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.கணேசலிங்கம் (மகன் - Sun City)

காரைக்கால் வீதி,
மஞ்சத்தடி, இணுவில் .T.P: 021 3008357

## மாபிள் வகைகள் விற்பனைக்கு



வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நில மாபிள்கள், சுவர் மாபிள்கள் மற்றும் கொமட் செற் வகைகள், குளியலறை சாதனங்கள், பிளாஸ்ரிக்கிலான கதவு வகைகள் அனைத்தும் உங்களுக்குத் தேவையான வர்ணங்களில் நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Sajei Ceramics
281 C, Colock Tower Road, Jaffna.
0750404314, 0771230845.

## புத்தகயாவுக்கு யாத்திரை சென்ற இலங்கையர்கள் இருவர் மரணம்

இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கையர்கள் இருவர் பீகார் மாநிலத்திலுள்ள புத்தகயா மலைச் சிகரங்களில் ஏறும் போது மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளனர். 60 வயதான விதானபதி ரணாவதி என்ற பெண்மணி குன்றில் ஏறும்போது மயங்கி விழுந்து இறந்துள்ளார் என்றும் மற்றொரு இலங்கையர் குன்றில் ஏறும்போது சுவாசக் கோளாறு ஏற்பட்டு இறந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரின் சடலங்களும் இந்த மகாபோதி சமூக நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன. இந்திய மாவட்ட அதிகாரிகள் இது குறித்து இலங்கைத் தூதரகத்துக்கும், இறந்தவர்களின் உறவினர்களுக்கும் அறிவித்துள்ளனர்.50 பேர்கொண்ட இலங்கையர் குழுவுடன் யாத்திரை மேற்கொண்டிருந்தவர்களில் இருவரே இவ்வாறு இறந்துள்ளனர். (சி)

## பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் பொறுப்பை பல்கலைக்கழகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்

கொழும்பு, பெப். 20

பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் சகல மாணவர் களும் உரிய தொழில் வாய்ப்பைப் பெறும் பொறுப்பை பல்கலைக்கழகங்கள் பொறுப் பேற்க வேண்டும் எனத் தெரிவிக்கும் சுற்று நிருப மொன்றை உயர்கல்வி அமைச்சு சகல பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத் துள்ளது.

பல்கலைக்கழகங்களில் சித்தி பெற்று வெளியேறும் மாணவர்களுக்கான தொழில் வாய்ப் பைப் பெற்றுத்தருவது சம்பந்தப் பட்ட பல்கலைக்கழக நிர்வாகத் தின் பொறுப்பாகும். இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தருவது அந்தக் கல்லூரியின் பொறுப் பாகும் என்பதும் இந்த சுற்று நிருபத்தில் வலியுறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சுற்றுநிருபத்துக்கமைய பல்கலை மாணவர்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் பொறுப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வுக்கு வழங்கப்பட்டுள்ளது என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

இந்தச் சுற்றுநிருபம் அடுத்த வாரத்தில் சகல பல்கலைக்கழகங்களுக்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பப் படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## மடு-மன்னாருக்கான ரயில் பாதையும் விரைவில் நவீன மயப்படுத்தப்படும்

கொழும்பு, பெப். 20

காலி - மாத்தறை அதிவேக ரயில் பாதையைப்போன்று மடு, மன்னாருக்கான ரயில் பாதையும் நவீன மயப்படுத்தப்படும் - என்று இலங்கைக்கான இந்தி யத் தூதர் அசோக் கே காந்தா கூறினார். காலி - மாத்தறைக்கு இடையில் அதிவேக ரயில் பாதையை புதன்கிழமை திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார். இத்தகைய அதிவேக ரயில் பாதை கொழும்புவரை நீடிக்கப்படும். மணித்தியாலத்துக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யக் கூடிய காலி - ரயில் நிலையத்திலிருந்து மாத்தறை நோக்கி நேற்றுமுன் தினம் பிற்பகல் 1.30 மணிக்கு புறப்பட்டது.இந்த நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, போக்குவரத்துப் பிரதியமைச்சர் ரோஹண திசாநாயக்க, இந்திய நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மோஹன் திவாரி ஆகியோரும் கலந்து

CREATIVE DESK
UDUVIL ROAD MANIPAY
வீடியோ எடிட்டிங், ஆல்பம் வடிவமைத்தல் மங்கள நிகழ்வுகளுக்கான...
வீடியோ, புகைப்படப்பிடிப்பு, மண்டப ஒலி, ஒளி அமைப்பு (Music Mixation& Club Lights) இவற்றுடன் சிறப்பாக Multi-Media Projector (அகலத்திரை ஒளி அமைப்பு) விளம்பரப் பதாகைகள், வியாபார அட்டைகள், DVD,CD ஸ்ரிக்கர்கள் போன்ற அனைத்து வகையான வேலைகளையும் நேர்த்தியாகச் செய்து தருகின்றோம்.
தொடர்புகளுக்கு: 0777778529, 0212255073, 0778658894.

### காலி - மாத்தறை கடுகதி ரயில் பாதை

## 6 நிமிடங்கள் முன்னதாகச் செல்ல அரசுக்கு 360 கோடி ரூபா செலவு

கொழும்பு, பெப். 20

காலி - மாத்தறைக்கு இடை யிலான 41 கிலோ மீற்றர் தூரத்தை ரயிலில் ஆறு நிமிடங்கள் துரித மாகக் கடக்க அரசு 360 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது என ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகிறது.

ஜே.வி.பி. செய்தியாளர் மாநாட்டில் அதன் பிரசாரச் செய லாளர் விஜித ஹேரத் இது குறித்துத் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மறுசீரமைக்கப்படுவதற்கு முன்னர் ருஹுணுகுமாரி, காலுகுமாரி ஆகிய கடுகதி ரயில்கள் இத்தூரத்தை 50 நிமிடங்களில் கடந்தன. இரு ரயில்வே நிலையங் களில் நிறுத்தப்படும் இந்த ரயில்கள் 50 நிமிடத்தில் கடந்துள்ளன.

ஒரு ரயில் நிலையத்தில் ஆறு நிமிடங்கள் என்ற ரீதியில் நிறுத்தப்பட்டாலும் இந்த ரயில் 38 நிமிடங்களில் இத்தூரத்தைக் கடந்துள்ளது.

அப்படியானால், ரயில் பாதை மறுசீரமைக்கப்பட்டதில் மக்களுக்கு பயனுள்ளதா? காலியிலிருந்து மாத்தறை வரையிலான ரயில் பாதையை மறுசீரமைக்க 360 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ மீற்றருக் கான செலவு 930 லட்சமாகும். இந்தப்பாதை மறுசீரமைப் புக்கு எமது ரயில்வே பொறியியலாளர்கள் ஒரு கிலோ மீற்றருக்கு 430 லட்ச ரூபா செலவாகுமென மதிப்பிட்டனர். ஆனால் இந்திய பொறியியலாளர்களிடமே இப் பணி ஒப்படைக்கப்பட்டது. (த-சி)

## போலிப் பொலிஸ் சான்றிதழ்கள் தயாரிப்பு நிலையம் முற்றுகை

கணேமுல்லப் பிரதேசத்தில் பொலிஸ் சான்றிதழ்களைப் போலியாகத் தயாரித்து விற்பனை செய்து வந்த நிறுவனமொன்று கம்பஹா பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு அங்கிருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கணேமுல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் இறப்பர் முத்திரை உட்பட பல ஆவணங்கள் அங்குகைப்பற்றப்பட்டனஎனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இறப்பர் முத்திரை மருதானையில் தயாரிக்கப் பட்டது எனவும் போலிப் பொலிஸ் சான்றிதழ்கள் பிரபலமான இரு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகிறது. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர்கள் கணே முல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

STUDY IN CHINA
March/April Intake
4 Years  in English Medium
MBBS
Architecture
Chinese Language
Trade and Economy
Aeronautical Engineering
Telecommunication Engineering
Spot Admission !
27th February 2011
10.00 a.m. - 4.00 p.m.
Tilko Jaffna City Hotel
70/6, K.K.S. Road, Jaffna.
FOR MORE DETAILS...
Neil - 077 77 69699, 072 77 69699, 077 51 49965
SINO – LANKA EDUCATIONS (PVT) LTD.
E-mail : bislanka@yahoo.com
Webpage : www.aerolankaedu.com

## பிரதியமைச்சர் பசீர் வாகனம் விபத்துக்குள்ளானது

கொழும்பு, பெப்.20

உள்நாட்டு வர்த்தக கூட்டுறவு பிரதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளருமான பசீர் சேகுதாவூத் பயணித்த வாகனம் தம்புள்ளயில் வைத்து விபத்துக்குள்ளாகியமையால் மூன்று பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை ஏறாவூரிலிருந்து கொழும்பு நோக்கி பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் சென்று கொண்டிருந்தபோது தம்புள்ள பிரதான வீதியில் வைத்து அவர் பயணித்த வாகனம் மற்றும் அவருக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற மற்றுமொரு வாகனம், இராணுவ ட்ரக் ஒன்று, ஒரு கார் மற்றும் பஸ் ஆகியன விபத்தில் சிக்கியுள்ளன. மேற்படி கார், நடிகை மேதா ஜயரட்ன பயணம் செய்த காராகும்.

இதன்போது தனக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லையெனவும் அதில் பயணித்த பொலிஸாருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாகவும் பிரதியமைச்சர் பசீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

இந்த விபத்தின் போது தனது இரண்டு வாகனங்களும் முழுமையாக சேதமடைந்துள்ளதாக பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் மேலும் தெரிவித்தார். நடிகை மேதா ஜயரட்னவும் காயமின்றி தப்பியுள்ளார். (ம)



Study in UK
LBBA
UK border Agency Tier 4 (A Rating)
abe CTH
Courses Offered
* Business Management * Marketing
* Human Resource Management
* Financial Management
* Hotel Management * Tourism And Hospitality
London Bridge Business Academy
7-13 Melior Street Se1 3QP
www.lbbablobal.com
One Stop Destination for Education Information
iCS Integrated Corporate Solutions Pvt Ltd
107 B -1/1, Galle Road, Colombo-06.
(Opposite to Colombo plaza NOLIMIT.)
தொடர்புகளுக்கு 011 2553520 077 3013060

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
தோற்றம் 25.09.1944

மறைவு 21.01.2011
அமரர் தம்பிராசா துரைராசா
கடந்த 21.01.2011 வெள்ளிக் கிழமையன்று சிவபதடைந்த எமது குடும்ப உறுப்பினரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தோருக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரிகை சிறப்புற நடைபெற தோள் கொடுத்து அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
இன்று [20.02.2011] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய். குடும்பத்தினர்.

# ACCA ACCA ACCA

JAFFNA TECHNICAL INSTITUTE - SRI LANKA

**Association of Chartered Certified Accountants**
**New Batch- Computer Based Education- July 2011 Exam**

Time Table

| Day | Time | Subject | Lecturer |
|---|---|---|---|
| Saturday<br>Sunday | 08.00- 09.00<br>09.00- 10.00 | Business IT (BIT)<br>Business English | Special Lecturers<br>For orientation |
| Saturday<br>Sunday | 10.00- 12.00<br>01.00- 03.00<br>03.00- 05.00 | F3 (FA)<br>F1 (AB)<br>F2 (MA) | Super Grade<br>lecture Panel |
| Paper Class (May- June) | | | |
| Tuesday<br>Thursday (BI) | 09.00 - 12.00<br>12.30 - 03.00<br>03.00 - 06.00 | F1 (AB)<br>F2 (MA)<br>F3 (FA) | Shaan Jayasekara, Rikzy Easa<br>R.Kiriwaran, Asitha Bandara<br>R.Syamalan, George Fernando |
| Saturday<br>Sunday | 09.00 - 12.00<br>01.00 - 04.00<br>04.00 - 07.00 | F3 (FA)<br>F1 (AB)<br>F2 (MA) | R.Syamalan, George Fernando<br>R.Kiriwaran, Asitha Bandara<br>Thillina Ukwatta, Asitha Bandara |

July- 2011 ACCA (CBE) பரீட்சை பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
க.பொ.த. (சா/த) 3 பாட சித்திகள் or 16வயதிற்கு மேற்பட்டவர்கள் தகுதி பெறுகின்றனர்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: **Mr.S.Baskarasingam, Coordinator,**
**Jaffna Technical Institute** (JTI) No.46 மணிக்கூட்டு வீதி/
92/1, சேர்.பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

வலுவான ACCA கல்வியுடன் இன்றே இணையுங்கள். T.P: 0215670345, 0777111205.

## வீடு வாடகைக்கு விடப்படும்

தனியார் நிறுவனங்கள், சிறுகம்பனி நடாத்தத்தக்க பெரிய குடும்பம் வாழக் கூடிய வாகனத்தரிப்பிட வசதிகள் கொண்ட இலக்கம் 21, றக்காலேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் இருக்கிறது. தொலைபேசி வசதி உண்டு (SLT).
தொடர்பு கொள்ள - 0770761976, 0778894334

## அறிவித்தல்

### வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பொதுச் சபைக்கான உறுப்பினர் விண்ணப்பம்

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பொதுச்சபை உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்திசெய்து ரூபாய் 20 அங்கத்துவச் சந்தாப்பணத்துடன் 2011 மார்ச் மாதம் 20 திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பரிபாலன சபை அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நா.பாலச்சந்திரன், தலைவர்.
சு.சுந்தரலிங்கம், செயலாளர்.
வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலன சபை



ADSL/Broad band Routers, Switches, Network Card, Internal/External Modem & Dintek Cat5e/ Cat6e
D-Link Building Networks for People — 3 years warranty

EPSON EXCEED YOUR VISION — Photo printers pm 235
புகைப்பட பிரதி சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.



**As a Valued Customer Get EPSON** EXCEED YOUR VISION
3 LCD Technology
2300 - 7000 ANSI Lumens
Contrast Ratio (2000:1)
Light weight
In Build Speakers
AV Mute Slide Lens Shutter
USB Display Function
5000 Hrs. Lamp Life



Debug

**DCP UPS**
**650w**
**1200w**
2 years warranty with Battery



சகல விதமான கணனி உதிரிப்பாகங்களை ஒரேஇடத்தில் பெற்றுக்கொள்ள
**திருமுருகன் கொம்நெற்**
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.

Intel 3.0 GHz
1 GB DDRII Ram
80 GB Hard disk
DVD Writer
LCD Monitor
Key board
Mouse
Speaker
**25000/=**



## SAN INTERNATIONAL Pvt (Ltd).
### எமது சேவை உங்களுக்காக யாழ். நகரில் ஆரம்பம்.

- Student Visa Arrangements for UK - (March, April Intake)
- O/L உடன் UKBA Highly Trusted Colleges இல் அனுமதிகள்
- Diploma, Degree Courses க்கான அனுமதிகள்
- UK இல் இருக்கும் எமது Staff மூலம் கல்லூரி அனுமதிகள் பெற்றுத்தரப்படும் Filing ஒழுங்குகள் செய்துதரப்படும்.
- பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்
- Sponsor வசதிகள்
- Food & Accommodation வசதிகள்

***Note:-*** April இன் பின் கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுவதால் அனுமதிகளுக்கு விரையுங்கள்.

- Admissions in India Universities
- சகல நாடுகளுக்கும் சகல விதமான விசா சேவைகளும் Air Ticket Booking உம் செய்து தரப்படும்.



எமது அனைத்து சேவைகளையும் யாழ்ப்பாணத்திலேயே இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0212223440, 0774745642,
**69, Arasady Road, Jaffna.**

## நீங்களும் ஆங்கில ஆசிரியர் ஆகலாம்!

# ENGLISH LANGUAGE TEACHER TRAINING - DIPLOMA

சர்வதேசரீதியாக ஆங்கீகரிக்கப்பட்ட Diploma பாடநெறி — 6 Months Week- Ends

ஆங்கில ஆசிரியர்களாக விரும்புவோருக்கும் ஆங்கிலத்தை சரளமாகப் பேச, எழுத விரும்புவோருக்குமான விஷேட பாடநெறி

| IELTS | DIPLOMA CERTIFICATE | ENGLISH | GRAMMAR PLUS SPEECH TRAINING WEEKENDS /WEEKDAYS |
|---|---|---|---|
| BRITISH BUSINESS SCHOOL ஆங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சைப்பதிவு நிலையம் | எம்மிடம் சென்றவருடம் கற்ற 500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளனர். | இப்பாடநெறிகள் நல்லூர் வளாகத்தில் மட்டும் நத்தப்படும் | |

# ENGLISH COURSES FOR CHILDREN
## சிறுவர்களுக்கான ஆங்கில பாடநெறிகள்

**PRE-FOUNDATION, FOUNDATION - LEVEL 1,2,3,4**
**SCHOOL SYLLABUS COVERED - 6 MONTHS /1 YEAR COURSE**
சனி ஞாயிறு தினங்களில் BBS இன் அனைத்து வளாகங்களிலும் நடாத்தப்படும்

**PRE-SCHOOL MONTESSORI** | **PLAY GROUP** | BBS இன் 10 பாலர் பாடசாலை வளாகங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்

- Nallur - 140, Temple Road, Jaffna.
- Kopay - Point Pedro Road, Kopay Central
- Neervely - 1st Mile Post, Irasa Veethy, Neervely.
- Chavakachcheri - Near the Chavakachcheri Hindu Primary Lane.
- Manipay I - 252, Aalady Junction, Jaffna Road, Manipay.
- Manipay II - Sankgarapillai Road, Manipay.
- Chunnagam - Laksmi Cottage, K.K.S Road, Mallakam
- Puloly - Sri Patmanthan Illam, Manthigai.
- Achuvely - Adjoining Base Hospital Achuvely.
- Changanai - Adjoining A.G.A. Office

021 222 5796
077 408 3656
077 664 6357

# BRITISH BUSINESS SCHOOL

# மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.20

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் திருமதி என்.முகுந்தன் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்துகொள்வார். (ஐ-207)

* * *

கொடிகாமம் போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகளும் சமயலறை திறப்பு விழாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

பாடசாலை அதிபர் ஆ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்துகொள்வார். (ஐ-207)

சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி த.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து கொள்வார். (ஐ-207)



இணுவில் மக்லோட் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு 112 ஆண்டுகள் (1898 -2011) நிறைவு பெற்றதை நினைவு கூர்ந்து இடம்பெற்ற திருப்பலி நிகழ்வைக் காணலாம். (படம் - கதிரவேல்)

## சிங்கப்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அதனைத் தொடர்ந்து இந்த நியமனத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு ஐ.நா அதிகாரிகளோ செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் அதி காரிகளோ அனு மதிக்கப்படு வதில்லை.

அதேவேளை மேலும் 5000 முன்னாள் போராளிகள் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடபகுதியைப் புனரமைக்க 280 மில்லியன் டொலர் தேவைப்படுகிறது.

இதற்கென இலங்கையின் அரசு டன் ஐ.நாவும் அனைத்துலக உதவி நிறுவனங்களும் இணைந்து செயற் பட்டு வருகின்றன.

வீடுகளை மீளக்கட்டுவதற்கும், பாடசாலைகள், அரச பணியகங்கள், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை மீளவும் ஏற்படுத்துவதற்கும் இன்னும் ஏராளமான நிதி தேவைப்படுகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## உலகக்கிண்ண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெறும் தினங்களில் மைதானத்துக்குள் 3 ஆயிரம் பொலிஸார் கடமையில் இருப்பர். அவர்களுக்கு மேலாக விசேட படை அணி ஒன்று தயார் நிலையில் இருக்கும். வன்செயல் சம்பவங்கள் ஏதும் இடம்பெறும் பட் சத்தில் அக் குழு மைதானத்தில் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபடும்.

இதற்குப் புறம்பாக மைதானத்துக்கு வெளியே இராணுவத்தினர் பணியில் இருப்பர். தேவை ஏற்படின் அவர்கள் உடன் பணிக்கு அழைக்கப்படுவர். இதே வேளை -

போட்டியில் பங்குகொள்ளும் அணியின் வீரர்களுக்கும் பொலி ஸார் பூரண பாதுகாப்பு வழங்குவர். (உ-ஐ)

## பருத்தித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பிரதேசங்களில் சில பகுதி களில் தற்போது தான் மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பித் திருக்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் எமது மீன்பிடி வலை களை இந்திய மீனவர்கள் அத்து மீறி உள்நுழைந்து அறுத்துச் செல்கின்றனர். அவர்கள் மேலும் தம்மை அச்சுறுத்தியும் வருகின்றனர்.

இந்தச் செயற்பாடுகள் தொடடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் தடைசெய்யப்பட்ட றோலர் மற்றும் வலைகளைக் கொண்டுதான் இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கை கடற்பரப்பினுள் புகுந்து மீன் பிடிக்கின்றனர்.

சில வேளைகளில் இலங்கையின் கரையோரப் பிர தேசங்களுக்கு சட்டவிரோதமாக உள் நுழையும் இந்திய மீனவர்கள் போதைவஸ்த்துக்களையும் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

எனவே இவற்றைத் தடுக்கும்பொருட்டு பருத்தித்துறை முனை முதல் நெடுந்தீவு வரையிலான பிரதேசத்தில் கடற்படையினர் தினமும் ஆகக் குறைந்தது 10 தடவைகளாவது கடல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த கட்டளைத் தளபதி இந்த விடயத்தை பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மீனவச் சங்க பிரதிநிதிகள் பங்குத் தந்தை ஆனந்குமார் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-15)

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், உதயபுரம்

## அறிவித்தல்

எமது சங்கத்தால் வழங்கப்பட்ட உதயபுரம் காணிகளின் உறுதியை பதிவு செய்யாதவர்கள் இன்றும் (20.02.2011) நாளையும் (21.02.2011) பதிவுகளை மேற்கொள்ளவும்.

நிர்வாகம்.

## CHANGE OF NAME

This is to inform the General Public, that I have changed my name from Asvin Jeyarajah as appearing in my Certificate of Birth to Ashvini Jeyarajah and I will be known as Ashvini Jeyarajah and will sign all documents as Ashvini Jeyarajah henceforth.

*143, 3rd Cross Street,*
*Jaffna*

*Ashvini Jeyarajah*

## காணி விற்பனைக்கு

சங்கானை கிழக்கு, மல்லாகம் சந்தியி லிருந்து 100யார் தூரத்தில் 3¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
0773864480, 0770411525

## Spoken English & Grammar

(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)
உள்நாட்டில், வெளிநாட்டில் உயர் கல்வி பெற, தொழில் வாய்ப்பு பெற உகந்த கல்வி
By: Mr.B.Ruban (A/L Eng. Teacher & B.B.A)
More Details: 0779785749

## காணியும் வீடும் விற்பனைக்கு

இருபாலை கிழக்கில் 8 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு
தொடர்பு 0777448488, 0112514195

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1972 புனர்பூசம் நட்சத்திரம் 5இல் செவ்வாய் உள்ள பட்டதாரி ஆசிரியைக்கு அழகிய 40 இக்கும் 43 வயதுக்கும் இடைப்பட்ட மணமகன் தேவை.
*தொடர்புகளுக்கு: 0773238015*

## வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. Channelling centre, Super Market, Bank மற்றும் நிறுவனங்கள் நடத்த உகந்த இடம்.
*தொடர்பு: 0778162392, 0779037167*

ஜெய் குருதேவ்

## எப்பொழுதும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ, வாழும் கலைப் பயிற்சி

சுதர்சன கிரியா, மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், யோகா,தியானம்



இடம்: *யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.*
பயிற்சிக் காலம் :
*21.02.2011- 27.02.2011 வரை*
*பிற்பகல் 4.45 - மாலை 6.45 வரை*
தொடர்புக்கு : 0770474757, 0777740593.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை இராசசிங்கம்



(முன்னாள் முகாமையாளர், கொமஷல் அச்சகம் )

கண்டியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராசசிங்கம் (17.02.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் சிவாம்பிகையின் அன்புக் கணவரும் சண்முகராசா, யோகராசா, விஷயலட்சுமி, கமலாதேவி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரன், இராஜாம்பிகை ஆகியோரின் பாசமிகு தந்தையும் சங்கரலிங்கம் (தொலைத் தொடர்பு SLT), பேரின்பநாயகி ஆகியோரின் மாமனாரும் பாஸ்கரன் - துர்க்கா (பிரான்ஸ்), துஷ்யந்தன் (SLT மன்னார்), கஜேந்திரன், காயத்திரி, கிருபாகரன்- சுந்த ரேஸ்வரி (லண்டன்), அசோகன்- துஷ்யந்தினி (லண்டன்), பிரதீபன் - துஷித்தா (லண்டன்), கம லேஸ்வரன் (கனடா), குனேஸ்வரன் (கனடா), ஆகியோரின் அன்புப் பேரனும் கரீஸ், பிரித்தி, கரணி (பிரான்ஸ்), பிரனாஸ், பிரித்வீன், பிரவீன், கவீன் (லண் டன்), அஸ்னவி, அஸ்வின் (கனடா) ஆகியோ ரின் பூட்டனும் சிவராசா, சிவராஜரட்ணம், சிவஜோதி ஆகியோ ரின் மைத்துனரும் சவுந்தலாதேவியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32, சுவாமியார் வீதி,*
*கொழும்புத்துறை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்

## துயர்பகிர்வு

### *நா. வியாக்கிரமபாதர்*

நா,வியாக்கிரமபாதர் நேற்று (19.02.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியரும் மகாதேவ ஆச்சிரம ஆரம்ப கால உறுப்பினரும் ஆச்சிரம பண்ணிசைப் புலவரும், திருமுறை இசைப் புலவருமாவார்.இவரின் ஆத்மா சாந்தியடைய குருநாதரின் திருவருள் பாலிப் பதாகுக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தொ.பே.:
0243243443,
0770790461

தலைவர், மகாதேவ ஆச்சிரமம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி
ஆச்சிரம நிர்வாகம்.

## மரண அறிவித்தல்

### *ஐயாத்துரை வள்ளிநாயகி*



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை வள்ளிநாயகி 17.02.2011 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை யின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான பொன்னையா - நாகரத்தினம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான சிவசுப்பிரமணியம், கனகலிங்கம், பத்மநாதன் மற்றும் ராஜேஸ்ரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதனரூபி, தேவராணி, நகுலானந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் கிரிதரன் (கனடா), காலஞ் சென்ற கிருசா, சியாமளா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் விஜயபாலன் (லண்டன்), நாகநந்தினி (சுவிஸ்), தேவறஜனி (கனடா), செல்வக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் ஜெயபாணு (தொழில் நுட்பவியலாளர்- கைதடி, சித்த மருத்துவக் கல்லூரி), ஜெயமதனா (லண்டன்), ஜெயமலர், அனுஷன் (உதவி முகாமையாளர்- ஜனசக்தி காப்புறுதி), அனுஷியா, அனிதா (கனடா), வாமணன் (மாணவன், யா/ இந்துக் கல்லூரி),விதூர்ஜன் (மாணவன், யா/ இணுவில் இந் துக் கல்லூரி), நிரூபன், நிதூர்ஜன், நிவேதன் (சுவிஸ்), நேசராஜ், துவாரகா, தினேஷ்ராஜ், சஜிதா (கனடா), செந்தமிழ்மாறன், தமிழரசி, செந்தாளன், தமிழினி (ஜேர்மனி), குகானந்தன் (முகாமையாளர்- நல்லூர் ப.நோ. கூ. சங்கம்), சிறிதரன் (லண்டன்), சொரூபன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஜதுர்சஜனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.02.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தியேட்டர் லேன்,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# மீனவர்கள் பிரச்சினை குறித்து சரவணபவன் எம்.பி. ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.20

இந்திய மீனவர்களால் வடமராட்சி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று மீனவ சங்கப் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து ஆராய்ந்தார்.

மீனவர் பிரச்சினைகள் குறித்துக் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் மீனவர்களுக்குச் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தவும் அவர் முன்வந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வல்வெட்டித்துறை மற்றும் ஆதிகோயிலடி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வல்வெட்டித்துறையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கடற்றொழிலாளர்கள் தற்போது தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள்



மற்றும் இக்கட்டான நிலைமைகள் பற்றி நடாளுமன்ற உறுப்பினரிடம் விளக்கியுள்ளனர்.

''கடலுக்குச் சென்று சுதந்திரமாக மீன் பிடித்துக் கரை திரும்பும் சூழல் வேண்டும். நாட்டின் ஏனைய பகுதி மீனவர்களை ஒரு விதமாகவும் எம்மை வேறொரு விதமாகவும் அதிகாரத்தில் உள்ளவர்கள் நோக்குகின்றனர். ஏனையவர்களுக்கு உள்ள சுதந்திரம் எமக்கு இல்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். ஒரு பிரதேசத்துக்குள்ளேயே இரு வேறுபட்ட வகையில் மீனவர்கள் கையாளப்படுகின்றனர். இதன் பின்னணியில் சில தீய அரசியல் சக்திகள் நின்று சுயநலத்துக்காகச் செயற்படுகின்றன.

அவை எமக்குள்ளே பிளவுகளை உண்டுபண்ணி அதனை மேலும் வளர்த்தெடுக்க முயல்கின்றன. இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையே தற்போது வலுவடைகின்றது. எனவே இது பற்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் விளக்கினர்.

அவர்களது பிரச்சினைகளை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குக் கொண்டு செல்வதுடன் மீன்பிடித்துறை அமைச்சருடன் குடாநாட்டில் உள்ள கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க ஏற்பாடு செய்து தர முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.(உ-ரி)




யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களில் மழை பெய்யும் சாத்தியம் உண்டு.

# இந்திய ஊடுருவலைத் தடுப்பதற்கு முனைக் கடலில் கடற்படை ரோந்து

## வலியுறுத்துகின்றனர் மீனவர்கள்

யாழ்ப்பாணம், பெப்.20

வடமராட்சி முனைக் கடலில் கடற்படை ரோந்தை நடைமுறைப்படுத்தி இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர் வடமராட்சி மீனவர்கள். இதன் மூலம் அத்துமீறி மீன்பிடிப்பதனை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை மற்றும் ஆதிகோயிலடி கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகள் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

''பருத்தித்துறை முனைப் பகுதியில் கடற்படையினரின் ரோந்து இடம்பெறுவதில்லை. இதனால்தான் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிக்கின்றனர். இதனால் எமது மீன்பிடிச் சாதனங்களை சேதமாக்குகின்றனர். எமது வளங்களையும் அள்ளிச் செல்கின்றனர். நாம் மீன்பிடித் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைமை உருவாக்கப்படுகின்றது. எமக்குக் கிடைக்கும் தொழில்களும் இழக்கப்படுகின்றன.

எனவே பிராந்தியத்தின் கடலில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கை முன்னெடுப்பது போன்று பருத்தித்துறை முனைப் பகுதியிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்'' - இவ்வாறு மீனவர்கள் வலியுறுத்தினர்.

(உ-ரி)

# அனுமதி பத்திர வரி அதிகரிப்பு

குருநகர், பெப்.20

மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திர வரியை அரசு 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாகப் பிரதேச செயலகங்கள் தெரிவித்தன.

யாழ்.பிரதேச செயலகத்தில் தமது மோட்டர் சைக்கிள்களுக்குரிய இந்த ஆண்டுக்கான வரியைச் செலுத்தியவர்கள் சென்ற வருடம் செலுத்திய வரியை விட ரூபா 40 ஐ அதிகமாகச் செலுத்தினார்கள்.

சென்ற வருடம் இவ்வரி ரூபா 400 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-51)

# மருத்துவ கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப்.20

யுனிசெப் செயற்றிட்டத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு மருத்துவக் கொடுப்பனவுகள் கிடைத்துள்ளன. அவர்களின் விவரம் வருமாறு:

இ.சக்திவேல் - ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை, ர.இரசேஸ்வரி - கற்கோவளம், ர.ரகீசன் - அல்வாய் வடக்கு, கு.கிருஷ்ணகுமார் - திக்கம், க.புஸ்பலதா - கல்தூரி வீதி, பருத்தித்துறை, வ.உதயகுமாரி - சக்கோட்டை, க.சற்குணசிங்கம் - புலோலி வடக்கு, வே.தெய்வேந்திரம் - அல்வாய் மேற்கு.

இந்தக் கொடுப்பனவுகளைப் பிரதேச செயலக சமூக சேவைத் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-236)

# போசாக்கு சுகவாழ்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் நடத்திவரும் கருத்தரங்குத் தொடரில் நேற்று சனிக்கிழமை 'போசாக்கும் சுக வாழ்வும்' எனும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெற்றது.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் வலுவூட்டலாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நிலைய விரிவுரை மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.சுரேந்திரகுமார், உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள்.

காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரையும் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.



நிகழ்வின் இறுதியில் நடத்தப்பட்ட கருத்தமர்வு தொடர்பான தொகுப்புரையும் இடம்பெற்றது. (ஐ-14)

# நிகழ்வுகள்

**முன்பள்ளிகளுக்கான கால்கோள் நிகழ்வு**

வடமாகாண முன்பள்ளிகளுக்கான முகாமைத்துவத் திட்டக் கால்கோள் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் கல்வி பண்பாட்டலுவல்கள் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியும், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ற)

**வருடாந்த மஹோற்சவம்**

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு ஆரம்பாகி எதிர்வரும் பங்குனி மாதம் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரதோற்சவம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி தீர்த்த உற்சவமும், 5ஆம் திகதி சண்டேஸ்வரர் உற்சவமும் இடம்பெறவுள்ளது. தெப்ப உற்சவம் இறுதி நாளான 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ற-190)

**பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு**

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலிகைக் கந்தசுவாமி கோயிலில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த பொதுச்சபை உறுப்பினர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் மார்ச் மாதம் 22ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (ற)

# இலட்சிய வேட்கையையும் பலத்தையும் தமிழ் மக்கள் நிரூபிக்க வேண்டும்

## தொழிற்சங்கத் தலைவர் தெரிவிப்பு

அம்பாறை, பெப்.20

உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் தமது ஒன்றுபட்ட பலத்தையும், இலட்சிய வேட்கையையும் மீண்டும் நிரூபிக்கவேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் கூறினார்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்திற்கும், அதன் இணை நிறுவனங்களான அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி, வடக்கு, கிழக்கு ஜீவோதய நலன்புரி நிறுவனம் என்பவற்றுக்கும் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கும் வைபவம் கல்முனை செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் லோகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும்.

குறிப்பாக தமிழ் மக்கள் தமது ஒன்றுபட்ட பலத்தையும், நோக்கையும் மீண்டும் நிரூபித்து நாட்டின் நிர்வாகத்துக்கும், சர்வதேசத்திற்கும் உணர்த்த வேண்டும்.

இந்தத் தேர்தல் களத்தில் மீண்டும் தமிழ்மக்களின் வாக்குகளைச் சூறையாடித் தமது எஜமானர்களான பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்கு நம்மவர்களே களமிறங்கியுள்ளனர்.

அபிவிருத்தி என்றும் அனர்த்த நிவாரணமென்றும் தமது தேர்தல் யுக்தி கையாள்வதிலும், பசப்பு வார்த்தைகள் மூலம் மக்களை ஏமாற்றுவதிலும் இத்தகைய பேர்வழிகள் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

இத்தகையோர் குறித்து நமது மக்கள் மிகவிழிப்புடன் செயல்படவேண்டும். இத்தகைய சுயநலநோக்குகளைக் கொண்டவர்களின் பசப்பு வார்த்தைகளில் நம் மக்கள் மயங்கிவிடக்கூடாது.

எதிர்காலத்தில் நமது பிரதேசங்களில் சிறந்த உள்ளூராட்சி நிருவாகம் ஏற்பட நாம் வழிவகுக்கவேண்டும்

இதற்கென தமிழ் மக்கள் மீதும், தமிழ்த் தேசியத்தின் மீதும் பற்றுக் கொண்ட சுயநலமற்று, பொதுநல நோக்கில் செயற்படும் வேட்பாளர்களை இனம்கண்டு அத்தகையவர்களை நாம் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யவேண்டும்.

அபிவிருத்தி எனும் மாயைக்கும், அற்ப சொற்ப சலுகைகளுக்கும் ஏமாந்துசோடை போகவும், இனத்தைக்காட்டிக் கொடுக்கவும் எம்மக்கள் தயாரில்லை என்பதை உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முடிவுகள் நிச்சயம் நிரூபிக்கும்.

மேலும், நாட்டை ஒன்றிணைக்கும் சமஷ்டியைத் தமது கட்சி ஆதரித்து ஏற்றுக்கொள்ளுமென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அந்தக் கட்சியின் மாநாட்டின் போது தெரிவித்துள்ளார்.

இதுவரவேற்கத்தக்க விடயமாகக் கொண்டாலும், மேடைப்பேச்சாக மட்டும் அமைந்துவிடக்கூடாது.

உதட்டளவில் மட்டும் இத்தகைய கருத்துக்கள் வராது, யதார்த்தத்தை உணர்ந்து உண்மையின் வெளிப்பாடாக அவை அமையவேண்டும்.

எமது அகில இலங்கை அரசாங்க பொதுஊழியர்கள் சங்கம் தொழிலாளர் வர்க்கத்தினரதும், மக்களதும் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-30)



புண்ணிய நாச்சியம்மையார் தினத்தையொட்டிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அந்த நிகழ்வில் யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவிகள் பண்ணிசை இசைத்தனர். (311)

# தங்கமுலாம் பூசப்பட்ட நகைகளை அடகு வைக்க முயன்றவர் கைது

தென்மராட்சி, பெப்.20

தங்கமுலாம் பூசப்பட்ட நகைகளைக் கையளித்து ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறமுயன்ற கைதடி தெற்கு வாசியை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை வங்கியின் கைதடிக் கிளையில் நகைகளை அடகு வைத்துப் பணம் பெற முயன்றபோது பரிசோதனை செய்தவேளையில் அவை தங்கமுலாம் பூசப்பட்டவை எனத் தெரியவந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக கிளை முகாமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் இந்த நபரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபரைப் பிணையில் விடக்கோரி சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி மனுத் தாக்கல் செய்தார். வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை நபரைப் பிணையில் செல்ல அனுமதித்துப் பிரதி வெள்ளிக்கிழமைகளில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார்.

(ஐ-207)



## சந்தியடிச் சோமு

## முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா

காலேல ஒரு முட்டைக் கோப்பி அடிச்சுக் குடிச்சாத்தான் கொஞ்சம் உஷாரா சந்திப்பக்கம் நடந்து போய் பலதையும் பத்தையும் கதைக்க முடியும். வயசு ஏற ஏற உருவம் சிறுத்துக் கொண்டு போகுதுதென்று காணுறவையள் எல்லாம் சொல்லுகினம் என்று போட்டு நாகேந்திராம்மாட்ட கொண்டு போய் காட்டினான். அவ, ''சலரோகம் கூடிப்போச்சு. என்ன கலியாண வீட்டுச் சாப்பாடுகள் சாப்பிட்டிருக்கிறீங்கள் போலயிருக்குது''! எண்டு கேட்டுப் போட்டு ''வீட்டில கட்டுப்பாடா இருக்க ஏலாட்டி வாட்டில வந்திருங்கோ'' எண்டு சொல்லிப் போட்டா. நான் ஒருமாதிரி கிடந்த பல்லுகளைக்காட்டி சிறுத்த உடம்மை வில்லா வளைச்சு தப்பி வந்திட்டன்.

இந்தக் கதையைச் சந்தியில சொல்ல கதிரண்ணை சொன்னார், ''உந்தச் சலரோகம் வராதவையே இல்லைப் போல. சின்னதிலயிருந்து வயது போனதுகள் வரை சலரோகமெண்டுதானே புலம்புதுகள். உதக் கட்டுப்படுத்தேலாமத் தானே உந்தப் பெரிய இயக்கமும் போராட்டமும் தோத்துப் போனது'' எண்டு புது விளக்கம் ஒண்டும் சொல்லிச்சு மனிசன். இதக் கேட்டுக்கொண்டு பக்கத்தில பேப்பர் வாசிச்சுக் கொண்டிருந்த 'பெடி'யொண்டு விடுக்கெண்டு கேட்டுது, ''ஏனய்யா அப்பிடிச் சொல்லுறியல்'' எண்டு.

கதிரண்ணை ஒரு முழி பதுங்கி நிண்டு போட்டுச் சொன்னார், ''பெரியவருக்கு சலரோகம் அதால கடல் பயணம் செய்யேலாது; வெளிக்கிட மாட்டார் எண்டு கடைசிக் காலத்தில பேப்பரெல்லாம் விலாவாரியா விவரிச்சதை நீர் அறியேல்லைப் போல'' எண்டு நறுக்கென்று முடிச்சுப் போட்டார். பிறகு அந்தப் பெடி போகும் வரைக்கும் காய்கறி விலை கூடி மூச்சை முட்டுறது பற்றி ஒரு உசாவல் போச்சுது.

பிறகு, நாஷனல் பள்ளியல்ல நடக்கிற விசயங்கள் தெரியுமே என்று கேட்டுக்கொண்டு அங்க வந்த கம்பசு வாத்தியாரால சந்தி கொஞ்சம் சூடு பிடிச்சுது. ''என்ன... என்ன... நடந்தது?'' எண்டு நாங்கள் எல்லாரும் ஒரேயடியாக் கேட்க அந்தாள் விசயங்களை அவிட்டு விட்டுது

''ஓயல்ல பத்து ஏ எடுத்த பெடியள ஏலெவல்ல எல்லாப் பாடத்திலயும் எவ் எடுக்கப் பண்ணியிருக்கிறாங்கள். போதாக்குறைக்கு அது பெடியளின்ர பிழையெண்டு பனையால விழுந்தவன மாடேறி மிதிக்கிறது போல ஒரே அடியா அடிச்சு நொருக்கியும் போடுறாங்களாம் எண்டு ஒரு மூச்சில சொல்லி முடிச்சார்.

இதக்கேட்ட நடேசண்ணை ''அது சரி தானே! உந்தப் பெடியள் ஏலெவலுக்கு வந்தா வெடிவால் முழைச்ச சேவல் பேட்டுக் கோழிய விட்டுத் துரத்துறது போல சயிக்கில்ல பொம்பிளைப் பிள்ளயலுக்குப் பின்னால வலிக்குறதுதானே வேலை. பிறகென்னெண்டு பாஸ் பண்ணுறது?'' என்று தன்ர விளக்கமொன்றைச் சொன்னார்.

இதைக் கேட்ட வாத்தியாருக்கு கொஞ்சம் கோவம் வந்திட்டுது. ''நீங்கள் அப்பிடி எடுத்தன் கவுத்தன் எண்டு பெடியளில குறை சொல்லக் கூடாது. இதே பெடியன் பத்து 'ஏ' எடுக்கேக்க தூக்கி தலையில வைச்சு கொண்டாடுறியல். பாராட்டு எல்லாம் பத்திரிகையில போடுறியள். அப்ப இந்த நியாயமெல்லாம் எங்க போச்சு? நல்ல ரிசல்ட் வந்தா தங்கட கொலரத் தூக்கிறவை குறைய ரிசல்ட் வந்தா ஏன் பெடியனக் கவுப்பான். கொலசிப் பாஸ் பண்ணின பெடியன நஷனல் ஸ்கூலென்று கொண்டேச் சேர்த்தா ஆறு வருஷமா வைச்சிருந்து போட்டு மொக்குப் பட்டம் சுட்டி அனுப்புகினம். உதில வாத்திமாரின்ர பிழையொண்டும் இல்லையே?'' எண்டு வாத்தியார் பொருமு எல்லாரும் கப்சிப் பாருங்கோ!

அந்தாள் அதோட விட்டிச்சே போதாக்குறைக்கு, ''பெயில் விட்ட பெடியல இரண்டாவது தடவை அதே பள்ளிக்கூடத்தால 'டெஸ்ட்' எடுக்கேலாதெண்டு சேட்டிபிக்கேட்டையும் குடுத்து அனுப்பினாராம் பிறிஞ்சிப்பல். ஏனெண்டு கேட்டா, பள்ளிக்கூடத்தின்ர பேர் கெட்டுப்போயிடுமாம்'' எண்டார்.

அதைக்கேட்டுட்டு கதிரண்ணை சொன்னார், ''உதென்ன நியாயம்? சட்டத்துக்கு மாறாயெல்லோ நடக்கிறாங்கள். இந்த விசயத்தக் கொஞ்சப் பெற்றோர் கல்வித் திணைக்களத்தில தன்னட்ட அதிகாரம் இருக்கெண்டு சொல்லித் திரியிற மேலதிகம் ஒருத்தரின்ர கவனத்துக்குக் கொண்டு போனவையாம். அவர் அதைக் கேட்டிட்டு அரசியல்வாதிகள் மாதிரி பேப்பருக்கு ஒரு அறிக்கை விட்டிட்டுப் பேசாமல் இருந்திட்டாராம். அதாவது இரண்டாவது தடவையும் அதே பள்ளிக்கூடத்தால டெஸ்ட் எடுக்கலாம் எண்டு அறிக்கை விட்டிட்டு பேசாமல் இருந்திட்டார். நாஷனல் பள்ளிக்கூடப் பிறின்சி அதை ஒரு கணக்கிலயும் எடுக்கேல்லையாம். பெயில் பண்ணிணவைய எடுக்க விடமாட்டன் எண்டு தொடர்ந்தும் நிக்கிறாராம் அவர்.

முதலையும் மூர்கனும் கொண்டது விடா எண்டது போல அந்தப் பிறின்சி அசையிறதாக் காணம். நாங்கள் என்ன செய்யிறது? எண்டு பெற்றாரும் பிள்ளையளும் ஓடித்திரியுதுகள். வடக்கால இருக்கிற நாட்டின்ற பெயரால இருக்கிற பள்ளியின்ர மைந்தன் எண்டு தூக்கியாடின பெடியன் இண்டைக்கு துரத்தின பெடியனா நிக்கிறான் எண்டால் பாருங்கோவன், எவவளவு மனசு பாதிக்குமெண்டு. ''எதிர்கால சமூதாயத்தை உருவாக்கிறாங்களோ சிதைக்கிறாங்களோ ஒன்றுமா புரியேல்லை. நல்ல ரிசல்ட் வந்தா தங்களாலதான் வந்தது எண்டுகினம். நல்ல ரிசல்ட் வராட்டி தாங்களில்லை எண்டு கைவிரிக்கிறாங்கள் உந்த வாத்தி மனப்பாங்கு மாறினாத்தான் எங்கட சமூகம் உருப்படும் பாருங்கோ?'' எண்டு சொல்லிப்போட்டு நான் வீட்டுப் பக்கமா எழும்ப நடந்தன்.

வீட்ட போகேக்க வழியில கண்ட கணேசண்ணை கேட்டார் ''உன்னோட கனபேர் கனவிசயம் கதைக்கவேணும் என்டுறாங்கள்; உன்ன என்னெண்டு தொடர்பு கொள்ளுறது'' எண்டு கேட்டார். இத நான் பேப்பர்காரப் பெடியனிட்ட சொல்ல அவன் ஒரு ஈமெயில santhiyadisomu@gmail.com தொடக்கிப் போட்டு தந்தவன் அத உங்களுக்கும் தாரன். ஏதும் தேவையெண்டா இதுக்கும் எழுதுங்கோ எனக்கு பேப்பர்காரப் பெடியன் கொண்டந்து தருவான் நான் சாய்மனைக் கதிரேல்ல கிடந்து வாசிச்சு பதில் தருவன்.

# கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகள் முழு வீச்சில் முன்னெடுப்பு

அம்பாறை, பெப் 20.

மட்டக்களப்பு - கல்முனை கரித்தாஸ்-எஹெட் நிறுவனம் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென நிவாரணம் வழங்கும் செயற்றிட்டமொன்றை முன்னெடுத்து வருகிறது.

மட்டக்களப்பு - கல்முனை கரித்தாஸ்- எஹெட் நிறுவன இயக்குநர் பேராசிரியர் அருட் பணி த. சில்வெஸ்டர் சிறீதரன் அடிகளாரின் வழிகாட்டுதலிலும் அனுசரனையுடனும் இந்த மனிதாபிமானச் செயற்றிட்டம் முன்னெடுப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இரு தடவைகள் ஏற்பட்ட பெரிய வெள்ளப் பெருக்கின் போது பாதிக்கப்பட்ட மக்களும், முகாம்களில் தங்கியிருந்த அகதிகளும் இந்தத் திட்டத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலர்கள் மூலம் கிடைக்கப் பெற்ற கணிப்பீட்டு விண்ணப்பங்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களும், பொதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி முதலாவது வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட கல்முனை தமிழ் பிரிவு கார்மேல் பற்றிமா முகாம், பாண்டிருப்பு விஷ்ணு வித்தியாலய முகாம், திருக்கோயில் விநாயகபுரம் சக்தி வித்தியாலய முகாம், குமார வித்தியாலய முகாம் என்பவற்றில் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மக்கள் முகாம்களுக்கு தலா 25ஆயிரம் ரூபா பெறும தியான உலர் உணவுப் பொருள்களும்-

ஆலையடி வேம்பு சென். ஜோன்ஸ் வித்தியாலய முகாமிற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியிலும் காரைதீவு நெக்டெப் கிராம அபிவிருத்தி சங்க முகாம்களுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியிலும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் இரண்டாவது வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட அளிக்கம்பை பிரதேச மக்களுக்கு 292 உலர் உணவுப் பொருள்கள் கொண்ட பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை இரண்டாவது வெள்ளப் பாதிப்புக்குள்ளான சொறிக்கல் முனை முதலாம், மூன் றாம் பிரிவு, காரை தீவு, குளவெளி 75 வீட்டுத் திட்டம் (எஹெட்), தீவுக்காலை 75 வீட்டுத்திட்டம் (எஹெட்), பாண்டிருப்பு மேட்டு வட்டை வீட்டுத் திட்டம் என்பவற்றைச் சேர்ந்த மக்களுக்கும் உலர் உணவுப் பொருள் கள் கொண்ட பொதிகளை வழங்குவதற் கும் தற்சமயம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்முனை எஹெட் முக்கியஸ்தர் ஏ.ஜெயராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மிக நீண்ட காலமாக மீள்கட்டுமானப் பணிகளிலும் மனிதாபிமானப் பணிகளிலும் வாழ்வாதார உதவிப் பணிகளிலும் பெரும் சேவைகளை ஆற்றி வரும் கரித்தாஸ் - எஹெட் நிறுவனம் வன்னி அகதிகளுக்கும் சேவைகளை ஆற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து கல்முனை தமிழ்ப் பிரிவு, ஆலையடி வேம்பு, திருக்கோயில், பொத்துவில் முதலான பிரதேச செயலகப் பிரிவுகளில் இயல்பு வாழ்க்கையை ஆரம்பித்துள்ள மக்களுக்குக் கரித்தாஸ்- எஹெட் நிறுவனம் வாழ்வாதார உதவிகளை ஏற்கனவே வழங்கியுள்ளது. (ஐ-30)

## யாழ்.சிவன் கொடியேற்றம் மார்ச் 1 இல்

யாழ்ப்பாணம், பெப்.20

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 20 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் அடுத்த மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-9)

## இன்று வீதியோட்டம்

யாழ்ப்பாணம், பெப்.20

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் விளையாட்டுப்போட்டியின் முன்னோடி நிகழ்வாக வீதியோட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 5 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலய உடற்கல் விப் பணிப்பாளர் சண். தயாளன் சிறப்பு விருந் தினராக கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

## புலமைப் பரிசில் நேர்முகப் பரீட்சை

கிளிநொச்சி, பெப்.20

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் யுவதிகளை வெளிநாட்டு புலமைப் பரிசில் திட்டத்துக்குச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை காலை 9மணிக்குத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வுக்கு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 18 தொடக்கம் 27 வயதுக்கு இடைப்பட்டவர்களும் க.பொ.த சாதாரணதரத்தில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தவர்களும் தோற்றமுடியும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஒ.கே.குணநாதன் அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### சிற்றம்பலம் குமாரசாமி

கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் குமாரசாமி நேற்று (19.02.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும், கணேசமூர்த்தி (இளைப்பாறிய சாலைப்பரிசோதகர், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை), சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்), கிருஷ்ணமூர்த்தி (பிரான்ஸ்), உதயமூர்த்தி (ஆசிரியர், யாழ்.கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), தெட்சனாமூர்த்தி (ஆசிரியர், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசக்தி, சிவரூபி, யோகராணி, கேமமாலினி, மிகிந்தலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கம்சா, கம்சன், கவிதன், ஜனக்சன், ஜனகன், ஜனித்தா, கீர்த்தனா, தர்சனா, கயாணன், மிதுரா, திவிசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.



### சின்னப்பு துரைராஜா

நல்லூரைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு துரைராஜா நேற்று (19.02.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அன்னம் தம்பதியரின் அன்பு மகனும் லக்சுமியின் அன்புக் கணவரும் தெய்வேந்திரம், புவனேந்திரன், ரேணுகா, சத்தியசீலன், ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன் ,சந்திராதேவி, பாசநிதி, யானகி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.02.2011) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

201/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

தகவல்:
பிள்ளைகள்.

**அரச கரும மொழி பரீட்சை மட்டம் III(சிங்களம்)**

பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான Paper Class(மாதிரி வினாத்தாள் உட்பட) இன்று ஞாயிற்றுக்கிழமை (20.02. 2011) பி.ப 2 மணி தொடக்கம் 4 மணி வரை நடைபெறும்.
இடம்:- ஸ்ரீ இரண்டாம்மொழி கல்வி நிலையம்,
இல.41, நக்காலேன், சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம், ஸ்ரீமாஸ்டர் , தொ.பே:-0777033729.

**வீடு வாடகைக்கு**

சுதுமலை வடக்கு மானிப்பாயில் வீடு வாடகைக்கு உண்டு. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது
தொடர்பு - 0776159217.

## பெயர் மாற்றம்

எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள இசைக்காமணி எனும் எனது பெயரை வசந்தமல்லிகா என மாற்றுகின்றேன். இன்றுதொடக்கம் வசந்த மல்லிகா என சகல ஆவணங்களிலும் கையொப்பம் மற்றும் பதிவினை மேற்கொள்வேன் என எல்லோருக்கும் அறியத்தருகின்றேன்.

க.வசந்தமல்லிகா,
கல்லியடி,
மன்னார்.

(591)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை சபாரத்தினம்



பெரியார் பகுதி அல்வாய் கிழக்கு , அல்வாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் மட்டக்களப்பு அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய முன்னாள் தலைவருமாகிய கணபதிப்பிள்ளை சபாரத்தினம் காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் பாசமிகு கணவரும், பரந்தாமன், மகாலட்சுமி, காலஞ்சென்ற வசந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசக்தி தயாளன் ஆகியோரின் மாமனாரும், பிரணவன், சியாமளா, பிரணாஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20.02.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:
திருமதி.த. மகாலட்சுமி
(மகள்)



### உயர்திரு S.V.சந்திரசேகரம்

(முன்னாள் ஆசிரியர், இலங்கை துறைமுக அதிகாரசபை சிரேஷ்ட்ட அத்தியட்சகர், பருத்தித்துறை நகரசபை 2ஆம் வட்டார உறுப்பினர், யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர், தாமரைக் குளத்தடி பொதுப்பணிமன்றத் தலைவர், பேச்சியம்மன் கோயில் தர்மகர்த்தா)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு.S.V.சந்திரசேகரம் கடந்த 16ஆம் திகதி புதன் கிழமை காலமானார்.

அன்னார் மகமாசி அம்மா, இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், மணிவண்ணன், மலர்விழி, கயல்விழி, மாதவன், யசோதை, சாயிராம், ரமணா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ண குமார், லாவேரா, ரமேஷ், செல்லக் கொடி, பாலராணி, யோகேஸ்வரன், சசிரேகா, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிரிதரன், செல்வதரன், விஷ்ணு, ஹரிணி, துளசி, கால்யா, தர்சனாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2011) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு, கல்லூரி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மதக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
தொ.பே 0714441751

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

**Alliance Francaise DE Jaffna**

The Only Official French Language Centre in Jaffna

Learn French the French Way

யாழ்ப்பாணத்தில் French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி பயிலும் மையமான Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
6 மாதத்தில் முதலாவது உள்ளகப் பரீட்சைக்குத் தோற்றலாம்.
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri, Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093, E-mail: alliancejaffna@yahoo.com
மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியூடாக பெறலாம்.

**Athavan Technology**

Security camera, Door phone system, Finger print attandance, Burgler alarm

No. 111/2, Brown Road,
Kokuvil East, Jaffna
Tel - 021 222 1875
0750 421 776

Trade Fair
Stall No: 249

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.